இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 125 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 18, வெள்ளிக்கிழமை 31.03.2017

## குரங்குக்கு எதிராக பொலிஸாரிடம் தாதிய மாணவி முறைப்பாடு

கொழும்பு, மார்ச் 31
தான் தங்கியிருக்கும் விடுதியில் வைத்திருந்த 55 ஆயிரம் ரூபா பெறுமதியான அலை >> 22

## இணைத் தலைவர்கள் வராவிடினும் ஒருங்கிணைப்புக் கூட்டத்தை நடத்துக

### மாவட்டச் செயலாளர்களுக்கு அரச தலைவரின் செயலர் பணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31
"இணைத் தலைவர்கள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றார்களோ இல்லையோ, அரச தலைவர் செயலகத்தால் அறிவிக்கப்படும் திகதியில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்தி முடிக்க வேண்டும்" >> 22

## இனவாதம் தூண்டப்பட விக்கியே முழுக்காரணம்

### ஜாதிக ஹெல உறுமய குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 31
வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் சி.வி.விக்கேஸ்வரனின் இனவாதச் செயற்பாடுகளே தெற்கில் உள்ளவர்களை இனவாதத்துக்குத் தூண்டுகின்றது என ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.
பத்தரமுல்லையிலுள்ள >> 24

## ஜெனிவாவில் அரசு பெரும் துரோகம்

### மகிந்த சாடல்



கொழும்பு, மார்ச் 31
இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் மிகப் பெரும் துரோகம் இழைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச சாடியுள்ளார்.
கூட்டு அரசை கடிந்து அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். >> 22

## வில்பத்து வர்த்தமானி; அரச தலைவர் விளக்கம்

கொழும்பு, மார்ச் 31
வில்பத்து வனப் பகுதியுடன் இணைந்த நான்கு வனப் பகுதிகளைப் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசமாக பெயரிடும் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பொய்ப் பரப்புரை தொடர்பில், அரச தலைவர் ஊடகப் பிரிவு தெளிவுபடுத்தும் பத்திரிகை அறிக்கையை வெளியிட்டுள்ளது. >> 24

## ராணுவத்தினரிடம் கையளித்த பின் காணாமற்போனோர் விவகாரம்

# சவேந்திர சில்வாவை விசாரிக்கவேண்டும்!

### முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று வலியுறுத்து முடிவு ஏப்ரல் 27ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, மார்ச் 31
இறுதிப் போரில் முக்கிய பணியாற்றிய இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிடம், கையளிக்கப்பட்டுக் காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த அனுமதிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று வலியுறுத்தப்பட்டது.
போர் முடிவுக்கு வந்தபோது இராணுவத்தின் 58ஆவது படையணியின் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றியவர் சவேந்திர சில்வா.
இந்த அடிப்படையில் இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுக் காணாமற்போனோர் தொடர்பில் அவரிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றே வலியுறுத்தப்பட்டது. அது தொடர்பான கட்டளை ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி வழங்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்தது.
போரின் இறுதிக் கட்டத்தில் படையினரிடம் சரணடைந்து பின்னர் காணாமற்போனவர்கள் தொடர்பிலான ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று இடம்பெற்றது.
தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளராகவிருந்த எழிலன் உள்ளிட்ட இறுதிப் போரில் சரணடைந்த விடுதலைப் புலிகளின் தளபதிகள், உறுப்பினர்கள் தொடர்பில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிபதி எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.
வழக்கில் முன்னிலையாகி இருந்த முன்னாள் இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் சாணக்கிய குணவர்த்தன நேற்று நீதிமன்றில் முன்னிலையாகி இருந்தார். முன்னதாக, இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் என்று கூறி வழக்குத் தொடுத்துள்ள எவரும் இராணுவத்தினரிடம் சரணடைந்ததற்கான சான்றுகள் ஏதுமில்லை என்று தெரிவித்திருந்தார். எந்த அடிப்படையில் அதை அவரால் >> 24

## சிவில் உடை தரித்த பொலிஸ் அதிகாரி காலால் உதைந்தார்

### நாகர்கோவில் பெண் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 31
சிவில் உடையில் வந்த பொலிஸ் அதிகாரி தனது வயிற்றில் உதைந்து தாக்குதல் நடத்தினார் என நாகர்கோவில் கிழக்கைச் சேர்ந்த புவீந்திரன் சுஜிதா (வயது-19) ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.
நாகர்கோவிலில் நேற்றுமுன்தினம் இரவு, பருத்தித்துறைப் பொலிஸாரின் ஜீப் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடைபெற்றது. இந்தச் சம்பவத்தில் பொலிஸாரால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்து நேற்றுமுன்தினம் இரவே குறித்த >> 24

## ஆளுநர் அலுவலகம் முன் அரசமைப்பை எரிப்பேன்

### சிவாஜிலிங்கம் ஆவேசம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
வடக்கு மாகாண சபை ஆளுநரிடம் நேரடியாகக் கோரிக்கை முன்வைக்க முடியாது என்று அவர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறுவாரானால் >> 24

## நியதிச் சட்டத்தால் சபையில் குழப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
வடக்கு மாகாண சபையில் முதலமைச்சரினால் முன்மொழியப்படவிருந்த நியதிச் சட்டங்களை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் சபையில் முன்மொழிவார் என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அவர் சபையில் >> 22

## சிப்பாய்க்கு தூக்கு

வவுனியா, மார்ச் 31
சக சிப்பாயைச் சுட்டுக் கொலை செய்த குற்றத்துக்காக இராணுவக் கோப்ரலுக்கு வவுனியா மேல்நீதிமன்று நேற்றுத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.
வவுனியா மேல் நீதிமன்றில் நீதிபதி பாலேந்திரன் சசி மகேந்திரன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைகள் நிறைவுற்று >> 24

## பட்டம் பெற்றதும் வேலை கேட்டு போராடுவதற்காகக் கற்கக் கூடாது

### இராஜங்க அமைச்சர் ராதாகிருஸ்ணனின் அறிவுரை இது

யாழ்ப்பாணம், மார்ச் 31
"பட்டம் பெற்று வேலை கேட்டுப் போராட்டம் நடத்துவதற்காக நாம் கற்கக்கூடாது. கற்கும் போதே எமக்கான தொழிற்கல்வியையும் நாம் மேம்படுத்திக்கொள்ளவேண்டும்"
இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் கல்வி இராஜாங்க அமைச்சர் ராதாகிருஸ்ணன்.
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் >> 22



## அச்சுவேலி முக்கொலை குற்றவாளிக்கு முத்தூக்கு

### யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் தீர்ப்பு அது வழங்கிய அதிகபட்ச தண்டனை இது

யாழ்ப்பாணம், மார்ச் 31
அச்சுவேலி கதிரிப்பாயில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள் மற்றும் மகன் ஆகிய மூன்று பேரைக் கொடூரமாக வெட்டிக்கொலை செய்த குற்றத்துக்கு பொன்னம்பலம் தனஞ்செயனுக்கு 3 தூக்குத் தண்டனைகளை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு வழங்கியது.
அத்துடன், இரண்டு பேருக்குப் படுகாயங்கள் விளைவித்ததன் மூலம் அவர்களைக் கொலை செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டுக்களுக்காக குற்றவாளிக்கு 14 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டோருக்கு 2 இலட்சம் ரூபா இழப்பீட்டை குற்றவாளி வழங்குவதுடன் 20ஆயிரம் >> 24

## வவுனியாவிலும் ஒருவருக்கு தூக்கு

### குடும்பத் தலைவரைக் கொலை செய்த குற்றத்துக்காக

வவுனியா, மார்ச் 31
வவுனியா பாவற்குளம் பகுதியில் குடும்பத் தலைவர் ஒருவரைக் கொலை செய்த குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது.
2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25, 26 திகதிய காலப்பகுதியில் ஆறுமுகம் இலங்கராசா என்ற குடும்பத்தலைவர் மின்சாரம் பாய்ச்சிக் கிணற்றுக்குள் போட்டுக் கொலை செய்யப்பட்டார் என்று இறப்பு விசாரணையில் தெரியவந்தது. விசாரணைகள் >> 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமையில் வாழ்ந்தவர் மர்மமான முறையில் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 31
மர்மமான முறையில் சாவடைந்த நிலையில் இளைஞர் ஒருவரின் உடலம் நேற்று யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சாலையிலுள்ள கடையொன்றிலிருந்து மீட்கப் பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

"ஒரு வருடத்துக்கு முன்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பாலசிங்கம் பாலமுரளி (வயது 42) என்பவர் யாழ்ப்பாணம் சிவன் கோயிலுக்கு அருகே கே. கே.எஸ் சாலையிலுள்ள தனக்கு சொந்தமான கடையொன்றில் பித்தளை தொழில் செய்து வந்துள்ளார். திருமணமாகாமல் தனிமையில் வாழ்ந்த அவர், அந்தக் கடையிலே தங்கி வசித்து வந்துள்ளார். அவரது கடைக்கு முன்பாகவுள்ள கடையில் நேற்று முன்தினமிரவு உணவை எடுத்துக் கொண்டு அவர் சென்றுள்ளார். மறுநாள் நீண்டநேரமாகியும்கடையை விட்டு அவர் வெளியேவரவில்லை.

அவரை தேடி அயலவர்கள் அந்தக் கடைக்குள் சென்று பார்த்தபோது, அவர் மூக்கினாலும் வாயினாலும் குருதி வந்த நிலையில் சடலமாக காணப்பட்டார். இதுதொடர்பில் அயலவர்களால் 119 அவசர இலக்கத்துக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாண பொலிஸாரின் சோக்கோ உத்தியோகத்தர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர். சம்பவ இடத்துக்கு சென்ற பதில் நீதிவான் வி.ரி. சிவலிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை இறந்தவரின் சகோதரியிடம் ஒப்படைக்குமாறு பதில் நீதிவான் கட்டளையிட்டார். (வ-103)

# தொடர் போராட்டத்தை நேற்று முதல் ஆரம்பித்த கலைப்பீட மாணவர்கள்

## தம்மீதான அடக்குமுறையை உடனே நிறுத்துமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம், மார்ச் 31
வகுப்புத் தடை விதிக்கப்பட்ட 13 மாணவர்களையும் மீளவும் வகுப்புக்கு அனுமதிக்குமாறு கோரியும், பல்கலைக் கழக நிர்வாகத்தினர் தம் மீது பிரயோகிக்கும் அடக்குமுறையைக் கண்டித்தும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகக் கலைப் பீட மாணவர்கள் பல்கலைக் கழகமுதன்மை வாயில் முன்பாகநேற்றுத்தொடக்கம்தொடர் போராட்டத்தைஆரம்பித்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதுமுக மாணவர்களுக்கு இடம் பெற்ற வரவேற்பு நிகழ்வுக்கான ஏற்பாடுகளின்போது கட்டடக் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டன. இது தொடர்பான விசாரணை இடம்பெற்ற பின்னர் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் 13 மாணவர்களுக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் வகுப்புத் தடை விதித்தது.

அவ்வாறு விதிக்கப்பட்ட வகுப்புத் தடையை நீக்கக் கோரி நேற்று முன்தினம் கலைப்பீட மாணவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து நேற்றுத் தொடக்கம் காலவரையறையற்ற உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

"நாங்கள் கல்வி சார்ந்த பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவது தொடர்பில் அறிக்கை மூலமாகத் தெரியப்படுத்தியிருந்தோம். வினாத்தாள் மதிப்பீட்டில் மாணவர்கள் தனிப்பட்ட முறையில் விரிவுரையாளர்களால் பழிவாங்கப்படுகின்றார்கள். விரிவுரையாளர்கள் தனிப்பட்ட முறையில் அலைபேசி மூலமாக மாணவிகளைக் கட்டாயப்படுத்தி விரிவுரைகளுக்குஅழைக்கின்றனர். அனுபவமற்ற விரிவுரையாளர்களும்மாணவஆலோசகர்களும் மாணவர்களுடன் தவறான அணுகுமுறையைக் கையாள்கின்றனர். கற்பித்தல் செயற்பாடுகளைத் தவிர தங்கள் பதவி உயர்வைக் கருத்தில் கொண்டு பிழையான தகவல்களை வழங்கி நிர்வாகம் தவறான முடிவெடுக்கத் தூண்டுகின்றனர்" என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படும் மாணவர்களுக்கெதிரான அடக்குமுறைகளை நிறுத்தி மாணவர்களின் சுதந்திரமான கல்விச் செயற்பாடுகளை உறுதிப்படுத்தல் வேண்டும். மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்கவேண்டும். கடந்த வருடம் கலைப்பீட மாணவர்களைப் பொலிஸார் சுட்டுப் படுகொலை செய்த தைக் கண்டித்து நாம் கற்றல் செயற்பாடுகளை நிறுத்திப் பல்கலைக் கழக நிர்வாகத்தை எதிர்த்தோம். அன்று தொடக்கம் கலைப்பீட மாணவர்களுக்கு இவ்வாறான பிரச்சினைகள் மறைமுகமாக நடைபெற்று வருகின்றன என்றும் மாணவர்கள் குற்றம் சாட்டினர். (த-4)

# ஒருவரை வெட்டிக் கொன்ற ஐவருக்கு தூக்குத் தண்டனை

## பாணந்துறை மேல்நீதிமன்று தீர்ப்பு

கொழும்பு, மார்ச் 31
ஒருவரை வெட்டிப் படுகொலை செய்ததுடன், மற்றொருவருக்குக் கடும் காயங்களை ஏற்படுத்திய 5 பேருக்குப் பாணந்துறை மேல் நீதிமன்று தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. நீதிபதி பத்மினி ரணவக்க முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

2003ஆம் ஆண்டு ஏப்ரல் 14ஆம் திகதியன்று, பாணந்துறை, அலுபோமுல்ல கிராமோதய மாவத்தையில் வசித்த, சகோதரர்கள் இருவரில், ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். மற்றையவர் படுகாயமடைந்தார்.

விசாரணைகளின் மூலமாக அவர்களில் 5 பேர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்பட்டன. இதனையடுத்து 5 பேருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. 6 ஆவது சந்தேகநபர் மீதான குற்றங்கள் நிரூபிக்கப்படாதமையால் அவர் விடுதலை செய்யப்பட்டார். (த4)

# அதிவேகப் பாதையில் வாகனம் நிறுத்தினால் வழக்குத் தாக்கல்

கொழும்பு, மார்ச் 31
ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் இல்லாமல் அதிவேகப் பாதைகளில் வாகனங்களை நிறுத்தி வைப்பவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்படுமென தெற்கு அதிவேகப் பாதைக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜனக குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அதிவேகப் பாதைகளிலுள்ள சகல பொலிஸ் காவலரண்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டிருப்பதாகவும் தொழில்நுட்பக் கோளாறுகளாலோ அல்லது விபத்துகளாலோ நிற்கும் வாகனங்களைத் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் தேவையில்லாமல் நிறுத்தப்படக்கூடாதெனவும் அவர் கூறினார்.

கடந்த சில தினங்களில் இவ்வாறான தவறுகளை இழைத்த சாரதிகளுக்கு எதிராக வழக்குகள் தொடரப்பட்டு அபராதம் வசூலிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (த-4)

# இரண்டு யாழ் இசைக்கருவிகள் நோர்வே தமிழரால் அன்பளிப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 31
யாழ்ப்பாணத்தின் வரலாற்றுக் குறியீட்டைப் பிரதிபலிக்கும் யாழ். இசைக்கருவிகள் இரண்டு யாழ்ப்பாணப் பொது நூலகம் மற்றும் யாழ் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு நோர்வே அன்பரினால் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணத்தின் குறியீடாகவும் அடையாளமாகவும் கருதப்படும் யாழ் இசைக்கருவி தற்போதுவரை யாழ்ப்பாணத்தின் எந்தப் பகுதியிலும் பயன்பாட்டில் இல்லாத நிலையில் இதனைப் புலம்பெயர் தமிழர் ஒருவர் இந்தியாவில் வடிவமைத்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்து கையளித்தார்.

யாழ்.மத்திய கல்லூரியின் பழைய மாணவரும் தற்போது நோர்வேயில் வசித்துவருபவருமான கந்தமூர்த்தி கலாரெஜி என்பவரே யாழ் இசைக்கருவிகளை வடிவமைத்து யாழ்ப்பாணம் எடுத்து வந்துள்ளார்

இதில் ஒன்றை யாழ். பொதுநூலகத்துக்கு அன்பளிப்புச் செய்த அவர் மற்றொன்றை யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்துக்கு வழங்கியுள்ளார்.

இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை யாழ். பொது நூலகத்தில் பிரதம நூலகர் சுகந்தி தலைமையில் நடைபெற்றது. யாழ். மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் இதனைப் பொறுப்பேற்றார். (த-101)

# சிறுநீரக நோய் காரணமாக முன்னாள் போராளி சாவு

## பண வசதி இல்லாமையால் பரிதாபம்

முல்லைத்தீவு, மார்ச் 31
முல்லைத்தீவு, தேறாங்கண்டல் பகுதியில் வசித்து வரும் முன்னாள் போராளி ஒருவர் சிறுநீரக நோயினால் கடந்த திங்கட் கிழமை கிளிநொச்சி வைத்தியசாலையில் உயிரிழந்தார். முருகேசு யசோதரன்(வயது37) என்னும் இரு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

முல்லைத்தீவு தேறாங்கண்டல் கிராமத்தில் வசிக்கும் குறித்த முன்னாள் போராளி சிவில் பாதுகாப்புப் பிரிவில் இணைந்து பணியாற்றிய நிலையில் சிறுநீரக நோய்த் தாக்கத்துக்கும் உள்ளாகியிருந்தார். அவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்த காலத்தில் விழுப்புண் காரணமாக ஒரு சிறுநீரகம் பாதிப்படைந்திருந்தது. பின்னர் இரண்டாவது சிறுநீரகமும் பாதிப்படைந்ததுள்ளது. அவருக்கு உரிய சிகிச்சை அளித்திருப்பின் பாதுகாத்திருக்க முடியும் என மருத்துவர்கள் கூறினர். சத்திர சிகிச்சைக்காக உறவினர் ஒருவர் ஒரு சிறுநீரகத்தை வழங்க முன்வந்திருந்தபோதும் இதற்கான செலவு அதிகம் எனக் கூறப்பட்ட நிலையில் நிதியின்மை காரணமாகவே காலம் தாழ்த்தப்பட்டிருந்தது - என்று தெரிவிக்கப்பட்டது. (த-101)

# 30ஆவது நாளைத் தொட்டது கேப்பாபிலவுப் போராட்டம்

## சுமந்திரன் எம்.பி. நேரில் சென்று மக்களுடன் நேற்றுக் கலந்துரையாடல்

முல்லைத்தீவு. மார்ச். 31
கேப்பாபிலவில் உள்ள பூர்வீக நிலங்களை விடுவிக்கக் கோரி மக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் அமைதிவழிப் போராட்டம் 30ஆவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறிஸ்கந்தராசாவின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் நேற்றுக் கேப்பாபிலவு மக்களைச் சந்தித்தார்.

"காணிகள் தொடர்பாக அரச தலைவருடன் கதைத்துள்ளோம். இராணுவ முகாம் அமைப்பதற்கான மாற்றுக் காணிகள் தொடர்பாக ஆராய்ந்து வருவதாக அவர் தெரிவித்தார். கால வரையறை தரவில்லை. உங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளுங்கள். விரைவில் காணிகள் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" எனச் சுமந்திரன் அங்கு கூறினார்.

138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி இராணுவ முகாமுக்கு முன்னால் தகரக் கொட்டகை அமைத்து கேப்பாபிலவு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தப் போராட்டத்தால் அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய அபாயநிலை உள்ளதால் தடை உத்தரவு கேட்டு முள்ளிய வளைப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

ஜனநாயக வழியில் போராடும் மக்களின் போராட்டத்தைத் தடுக்க முடியாது. அமைதியான வழியில் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு முல்லைத்தீவு நீதிமன்றால் அனுமதி வழங்கப்பட்டது. இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அமைதியான வழியில் போராட்டத்தை முன்னெடுக்க மேலும் அனுமதி வழங்கப்பட்டது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போனோரை கண்டறியச் சளைக்காது போராடும் உறவினர்கள்

## 39 நாள்கள் கடந்தும் முடிவின்றி தொடர்கின்றது கவனவீர்ப்பு



யாழ்ப்பாணம், மார்ச் 28

காணாமற்போனோரின் உறவினர்களால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டுவரும் கவனவீர்ப்புப் போராட்டம், நேற்று 39 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுதலையையும் வலியுறுத்தி உறவினர்கள் வடக்கு மாகாணத்தில் காலவரையற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இந்த போராட்டம் வடக்கில் 5 மாவட்டங்களில் நேற்றும் தொடர்ந்தது.

உறுதியான தீர்வு கிடைக்கும்வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை. எம்மை வீதியில் விட்டு வேடிக்கை பார்ப்பதை விடுத்து, தீர்வைப் பெற்றுத் தரவேண்டும் என்று காணாமற்போனோரின் உறவினர்கள் கூறியுள்ளனர்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உறவினர்கள் உறுதியுடன் போராட்டத்தில் குதித்துள்ளனர். போராட்டத்துக்கான ஆதரவும் வலுவடைந்து வருகின்றது.

நேற்றுக் கிளிநொச்சி மாவட்டத்தில் 39ஆவது நாளாகவும் போராட்டம் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் நேற்று 35 ஆவது நாளாகவும் போராட்டம் தொடர்ந்தது. முல்லைத்தீவில் நடக்கும் போராட்டமும் நேற்று 23 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

யாழ்ப்பாணத்தில் மருதங்கேணியில் நேற்று 16 ஆவது நாளாகவும் போராட்டம் நடந்தது. கிழக்கில் திருகோணமலையில் நேற்று 26 ஆவது நாளாகப் போராட்டம் தொடர்ந்தது.

(த21-7-35-26)

# மேற்குலகின் தேவைக்கே இரு வருடகால அவகாசம்

*சாடுகின்றது பொது எதிரணி*

கொழும்பு, மார்ச் 31

மேற்குலக நாடுகளின் தேவைகளை எதிர்வரும் இரண்டு வருடங்களில் பூர்த்திச் செய்துக்கொள்ளவே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகப் பொது எதிரணி அரசு மீது சொற்கணைகளை வீசியுள்ளது.

அரசமைப்பை மீறும் வகையில் அயலுறவு அமைச்சர் மங்கள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் உள்ளிட்டோர் செயற்பட்டு வருகின்றனர் என்றும் பொது எதிரணி குற்றம் சுமத்தியுள்ளது.

பொரளை என்.எம். பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு வருடங்களுக்கு முன்பு தமது நாட்டுக்கு எதிரான தீர்மானமொன்றை அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர ஐ.நாவில் மேற்குலகின் ஆதரவுடன் கொண்டுவந்திருந்தார்.

பன்னாட்டுக் கொள்கைகளும், இராஜதந்திரங்களும் உலக வரலாற்றில் நாடு ஒன்று அடிமைப்பட்டிருந்ததற்கு பின்பு இங்கு அடிபணியவில்லை. ஆனால், இலங்கை பன்னாட்டிடம் அடிப்பணிந்துள்ளது. நாடு தொடர்பில் அரசு சிந்திக்க வேண்டும். இந்த அரசு தமது அரசின் நலனை மட்டும்தான் சிந்தித்து செயற்படுகிறது.

அரசமைப்பை மீறி அரசு செயற்படுவதை நாங்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றோம். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கலப்பு நீதிமன்றம், பன்னாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்களை அனுமதிக்கமாட்டோம் என்கிறார்.

ஆனால், அரசின் செயற்பாடுகள் அவ்வாறு இல்லை. சட்டவரைவு திருத்தங்கள் கொண்டுவரப்படும் போது அரசமைப்பை மீறியே இந்த அரசு செயற்படுகிறது. காணாமற்போனோர் தொடர்பிலான சட்டவரைவும் அவ்வாறே நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தச் சட்டவரைவில் உள்ள அதிபயங்கரமான சரத்துகள் எமது இராணுவத்துக்கு எதிராக உள்ளன.

பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டுவர வேண்டுமாயின், அரசமைப்பை பொது வாக்கெடுப்புடன் மாற்றவேண்டும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டுவர முடியாது என்பதையே நாங்கள் அன்று முதல் வலியுறுத்தி வருகின்றோம். அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீரவும் ஏன் ஐ.நா. விடயத்தை மாத்திரமே பேசுகின்றீர்கள் என்று கேட்கிறார்.

நாட்டின் இறைமையை காட்டிக் கொடுக்க எவருக்கும் முடியாது. அரசமைப்பை மீறி அயலுறவு அமைச்சர் செயற்பட முடியாது. அரசமைப்பை மீறி எவர் செயற்பட்டாலும் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிய தீர்மானம் பழைய தீர்மானத்தின் 6 ஆவது பந்தியை நீக்காமலேயே நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த அரசின் வினைதிறனற்ற செயற்பாடுகளால் பெரும் பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர்கொள்ளவுள்ளது. எதிர்வரும் மூன்று மாதங்களில் பெரும் நிதி மற்றும் பொருளாதாரச் சுமைகளை மக்கள் சுமக்கவேண்டிய சூழல் மெல்ல மெல்ல உதயமாகின்றது. அரச வளங்களையும், சொத்துகளை விற்பனை செய்வதையும் அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்றார்.

(த-4)



யாழ்ப்பாண பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராச்சி பலாலி ராணுவத் தலைமையகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார். (வ-5)

# இலக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்.மார்ச்.31

கலை இலக்கிய நண்பர்களின் ஏற்பாட்டில் கனடாவிலிருந்து வருகை தந்துள்ள எழுத்தாளர் க.நவம் மற்றும் திருமதி ஷியாமளா நவம் ஆகியோருடனான இலக்கியக் கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கம் விநோதன் மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

கலாநிதி ந.இரவீந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் ஆரம்ப உரையை மேமன்கவி ஆற்றவுள்ளார். 'நலன் எனும் நற்பயன் நாடி' எனும் தலைப்பில் ஷியாமளா நவமும் 'ஓர் ஏதிலி எழுத்தாளனின் தவிப்பும் தன்முனைப்பும்' எனும் தலைப்பில் க. நவமும் உரையாற்றவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-12)

# திருமறைக் கலாமன்றத்தின் திருப்பாடுகளின் காட்சி அடுத்த வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்குகின்ற மாபெரும் அரங்க ஆற்றுகையான 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் காட்சி எதிர்வரும் 6ஆம் திகதி முதல் 9ஆம் திகதி வரை நான்கு நாள்களுக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.



"யாழ்ப்பாணம் ஏ9 முதன்மைச் சாலையில் இல 238இல் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறும் காட்சிகள் வியாழன், சனி, ஞாயிறு தினங்களில் மாலை 6.45 மணிக்கு ஆரம்பமாகும். வெள்ளிக்கிழமை மட்டும் இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பிரமாண்டமான அரங்க அமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும் அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்களுடன் மேடையேற்றப்படவுள்ள 'கல்வாரி யாகம்' ஆற்றுகைக்கான ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

திருமறைக் கலாமன்ற இயக்குநர் நீ. மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார். இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு என்ற மும்மையை மையமாகக் கொண்டு இந்த நாடகங்கள் எழுதப்பட்டாலும் அவற்றுக்குள் காலத்துக்கு ஏற்ப பல்வேறு கோணங்களையும் பாடுபொருள்களையும் உட்புகுத்தி இவ் ஆற்றுகைகள் மேடையேற்றப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் மேடையேற்றப்படும் 'கல்வாரி யாகம்' திருப்பாடுகளின் நாடகத்துக்கான எழுத்துருவை திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் எழுதியுள்ளார். இவ்வாற்றுகை முதன்முதலாக 2002ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2009ஆம் ஆண்டிலும் மேடையேற்றப்பட்டு இந்த ஆண்டுடன் மூன்றாவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது.

இம்முறை இதற்கான நெறியாள்கையை மன்றக் கலைஞரான தை.யஸ்ரின் ஜெலூட் மேற்கொண்டுள்ளார். ஆண்டுதோறும் திருமறைக் கலாமன்றத்தால் மேடையேற்றப்படுகின்ற திருப்பாடுகளின் காட்சியை பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிடுகின்றமையும் இலங்கையிலேயே இடம்பெறுகின்ற மிகப்பெரிய அரங்க ஆற்றுகையாக இது அமைகின்றது.

இறைமகன் இயேசு மானிடர் அனைவரினதும் பாவத்தைக் கழுவ அவர் மனிதனாக பிறந்து, பாவ நிவாரணமாக அவர் தன்னையே தற்கொடையாக்கினார். அவரது பாடுகளும், பிறருக்காக தன்னையே அளிக்கும் தற்கொடையான இறப்பும், உயிர்ப்பும் மனித வாழ்வியலுக்குரிய மேல்வரிச்சட்டங்கள். அதனை மீளவும் வலியுறுத்தும் படைப்பாக்கமே 'கல்வாரி யாகம்' ஆகும்" என்று திருமறைக் கலாமன்றத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

# குடிவெறுப்புச் சிகிச்சை பெறுபவர் சாராயம் குடித்தபோது சிக்கினார்

சாவகச்சேரி, மார்ச் 31

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை குடிவெறுப்பு நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த வலிகாமத்தைச் சேர்ந்த நபர் உணவு வாங்கச் செல்வதாகக் கூறிச் சென்று நகரிலுள்ள மதுபான நிலையத்தில் மதுவை வாங்கி அருந்தியபோது வைத்தியசாலை பாதுகாப்பு அலுவலரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

நீதிமன்ற உத்தரவின் பேரில் வைத்தியசாலை குடிவெறுப்பு நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்த அவர் தினமும் வெளியில் உள்ள உணவகத்தில் இரவு உணவு வாங்கச் செல்வதாகக் கூறிச் சென்று வந்துள்ளார். இவரின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட பாதுகாப்பு அலுவலர், நேற்று மாலை உணவு வாங்கச் செல்வதாகக் கூறிச் சென்ற அவரை எங்கு செல்கின்றார் என அவதானித்துள்ளார். வைத்தியசாலைக்கு அருகில் உள்ள மதுபான நிலையத்துக்குள் சென்ற அவர் அங்கு மதுபானம் வாங்கிக் கொண்டு வந்து இடையில் வைத்துப் பருகியபோது பாதுகாப்பு அலுவலர் அவரைக்கையும் மெய்யுமாகப் பிடித்துள்ளார். இவரை வைத்தியசாலைக்குள் அழைத்துச் சென்ற பாதுகாப்பு அலுவலர் வைத்தியசாலைப் பொலிஸ் சாவடியில் ஒப்படைத்தார்.

மதுபோதையிலிருந்து விடுபட வைத்தியசாலை குடிவெறுப்பு நிலையத்தில் (குருந்தம்) பலர் சிகிச்சை பெறுகின்றனர். அவர்கள் 15 தினங்களில் சிகிச்சை பெற்று வீடு திரும்புகின்றனர்.

அவ்வாறு இந்த நபரும் வைத்தியசாலை குடிவெறுப்பு நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள போதிலும் குடியை மறக்க முடியாமல் இடையிடையே வெளியே சென்று மது வாங்கி அருந்தி வருவதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. வைத்தியசாலைப் பொலிஸார் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஊடாக நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(வ 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானபீடம்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான 2015/2016 கல்வி ஆண்டுக்கான அறிமுக நிகழ்வு 24.04.2017 திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு ஆரம்பமாகி 28.04.2017 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.30 மணிவரை நடைபெறும். இவ் அறிமுக நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏனைய மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 02.05.2017 செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும்.

**பதிவாளர்**

## சிறிகுமரன் ரெக்ஸ்

### மாபெரும் மலிவு விற்பனை

புதுவருடத்தை முன்னிட்டு இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட புத்தம் புதிய அனைத்து ஆடைத்தினுசுகளும் மலிவு விலையில்

காலம் : 27.03.2017 தொடக்கம் 14.04.2017 வரை

இடம் : 770, K.K.S வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.




Office Wear
சாறி மிகக்குறைந்த விலையில்

**சிறிகுமரன் ரெக்ஸ்**
770, K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 021 221 6845

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
**17.07.1944**

விண்ணில்
**17.04.2016**



அமரர்
## அரியகுட்டி திரவியம்

திதி - சதுர்த்தி (31.03.2017 வெள்ளி)

வேராக விளங்கினீர் குடும்பத்திற்கு
நீராக பொழிந்தீர் அன்பை எமக்கு
நூற்றாண்டுகள் வாழ்வில் என்றிருக்க
காலன் உம் உயிர் பறித்து ஓராண்டு தந்தையே!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வட்டக்குளம், கட்டப்பிராய்.
ஈரவிழிகளுடன் குடும்பத்தினர்.

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 634
சீட்டிழுப்பு திகதி 30.03.2017 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 11 24 45 63 R

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 40, 645, 696/=

## ஐயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1353
சீட்டிழுப்பு திகதி 2017.03.30

வெற்றி இலக்கங்கள்: 05 35 38 48 W

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 10,237,984/-

## உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 29
சீட்டிழுப்பு திகதி 30.03.2017 வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 02 08 26 53 02 மே

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| 9, 512, 730/= | 2, 132, 876/= | 1, 932, 874/= |

அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 01.03.2017 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் சுந்தரமூர்த்தி பாலச்சந்திரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (31.03.2017) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். நாளை (01.04.2017) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நெருஞ்சியோலை, பன்னாலை, தெல்லிப்பழை.**
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி நிர்மலாதேவி நடராசா



தோற்றம் 24.04.1958 மறைவு 30.03.2017

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், தொல்புரம், சுழிபுரம் மத்தியயை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி நிர்மலாதேவி நடராசா காலமாகி விட்டார்

அன்னார் சிவப்பிரகாசம் - அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும் சொக்கலிங்கம் நடராசாவின் அன்பு மனைவி யும் கணேசதாசன், கமலா தேவி, விமலாதேவி, சௌந்தலா தேவி ஆகி யோரின் சகோ தரியும் துஷ்யந்தி (ஆசிரியர் சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி யாலயம்), துளசிதாஸ் (கணக் காளர் வடமாகாண ப.தெ. சமாசம்), தணிகைக் குமரன் ( கணித ஆசிரியர் - அமெரிக்கா), கலியுதவதனி ஆகி யோரின் அன்புத்தாயும் தேவதாஸ் (தேவா ஸ்ரோர்ஸ் - சுழிபுரம் கிழக்கு), சுபாஜினி (மக்கள் வங்கி பண்டத்தரிப்பு), சுமித்திரா (P.H.D. அமெரிக்கா), நிறஞ்சன் (சிற்பாசாரியார் கற்குழி, சாவகச்சேரி) ஆகியோரின் மாமியும் ரோகித்ராஜ், சதுசனா, சகானா ஆகியோரின் போத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2017) வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 6100 303
077 3231 642

தகவல்: குடும்பத்தினர்.

### அலுவலக பராமரிப்பு எழுதுவினைஞர் தேவை

45 - 50 வயது, யாழ். நகர எல்லை, ஆண்
நேரம் 8.00 AM - 5.00PM, சம்பளம் 13 500/=
6 ஆம் திகதி நேரில் வரவும்.
Airtech, 58, Sir. Pon. Ramanathan Road, Jaffna.
071762 2719, 021 300 3037

## MAJESTIC CINEPLEX

A CEYLON THEATRES CINEMA Jaffna
### கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
facebook MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 02.03.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி



திருமதி
**சீதாலக்ஷ்மி ஜெயபாலரட்ணம்**
(ஓய்வு பெற்ற தொலைத்தொடர்பு இயக்குனர், ஸ்ரீலங்கா ரெலிகொம்)

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் (01.04.2017) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும் என்பததையும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

76/5, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்
குடும்பத்தினர் 077 4940 814, 021 222 3691

## மரண அறிவித்தல்

### சிவசம்பு திருஞானசம்பந்தன்

காரை நகர் கோவளத்தைப் பிறப்பிட மாகவும், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு திருஞானசம்பந்தன் நேற்று (30.03.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கொட்டாஞ் சேனை வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் நல்லம்மாவின் அன்புக்கணவரும் கெங்காதேவி, வைகுந் தவாசன் (சிறீ), ஞானதேவி, ராசகுமாரி ஆகி யோரின் அன்புச்சகோதரரும் காலஞ் சென்ற வர்களான மகேஸ்வரி, இராசம்மா மற்றும் அன்ன பாக்கியம், கணபதிப்பிள்ளை, இராசேந் திரன் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சபா நாதன், சோதிநாதன் காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் மைத்துனரும் சிவகுமாரன், ராதிகா, சந்திரகுமார் ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீஹரன், யாழினி, ஆகியோரின் மாமனாரும் மகிஷனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.04.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம் பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

174/12, கோவில் வீதி, நல்லூர்.
தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது வைத்தியசாலையில் பரிசாரகராக கடமைபுரியும்

**திரு. இ. கந்தசாமி** அவர்களின் அன்புத்தந்தையார்

### குஞ்சன் இளையவன்

அவர்கள் 27.03.2017 திங்கட்கிழமை காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**பணிப்பாளர் நலன்புரிச்சங்கம்,**
**அரசினர் ஆயுள் வேத வைத்தியசாலை, கைதடி.**

## மரண அறிவித்தல்

### திருமதி தேவநாயகி நாகேந்திரம்



சிறுவிளானைப் பிறப்பிடமாகவும், டச் வீதி, உடுவிலை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி தேவநாயகி நாகேந்திரம் (மங்களம்) கடந்த (29.03.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னபூரணம் தம்பதியரின் அன்புமகளும் தம்பிப்பிள்ளை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நாகேந்திரத்தின் (ஓய்வு பெற்ற வருமானவரி மேற்பார்வையாளர்) அன்பு மனைவியும் நவநீதன் (பிரதி பொது முகாமையாளர், வடமாகாணம் ஸ்ரீலங்கா ரெலிகொம்), நவதாசன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், காரைநகர்), நவறூபன் (பொறியியலாளர் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை வடமாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயும் அருந்ததி, தயாழினி (ஆசிரியர் யா/உடுவில் மான்ஸ் ம.வி), துஷாயினி ஆகியோரின் அன்பு மாமியும் துஷாயினி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), தக்ஷாயினி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), ஷஜீவன் (யா/சென்ஜோன்ஸ் கல்லூரி), அக்ஷனா (யா/உடுவில் மகளிர் கல்லூரி), சந்தோஷ் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), ஆகாஷ் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் மகாலட்சுமியின் (பவளம்) பாசமிகு சகோதரியும் பிலிப்பானந்தம், சண்முகநாதன், பஞ்சநாதன், நவநீதச்சந்திரன், இராசேந்திரம், கயநாதன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2017) வெள்ளிக் கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டச் வீதி,**
**உடுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வேலை வாய்ப்பு

யாழ்நகரில்
பிரபல்யமான
நிறுவனமொன்றிற்கு

- பூ மரங்கள் பராமரித்தல்.
- காரியாலயவளவை துப்புரவாக வைத்திருத்தல்

போன்ற வேலைகளுக்கு
ஆள்கள் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் இன்று
(31.03.2017)
வெள்ளிக்கிழமை
முற்பகல் 10 - பிற்பகல் 2
மணி வரை
நேரில் சமூகமளிக்கவும்

**உதயன் பணிமனை**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

## அருள்தந்தை போல் றொபின்சனுடன் இறை தியான வழிபாடுகள்

- ஞாயிறு, 2 ஏப்ரல் மாலை 5.30 மணிக்கு தூய மரியன்னை ஆலயம், கோப்பாய்- தெற்கு
- திங்கள்,3 ஏப்ரல் மாலை 5.30 மணிக்கு தூய சூசையப்பர் ஆலயம், கோப்பாய்- மத்தி

பங்குபற்றி இறை உறவில் வளர அன்புடன் அழைக்கின்றோம்.

**கோப்பாய் பங்குக் குடும்பம்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலய
மாணவியாகிய

### செல்வி வாணிதாசன் கிருஷனா (தமிழ்)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 7 ABC ஆகிய பெறுபேற்றை பெற்றமைக்காக வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்**
அம்மா (பாசமலர்)
அப்பப்பா (முத்துலிங்கம்)
அப்பம்மா (பிறேமாவதி)
அத்தை (பிரியதர்ஷினி NORWAY)
மாமா (குபேந்திரன் NORWAY)
**சித்தப்பா (ஸ்ருடியோ ராஜ் ஆறுகால்மடம்)**
சித்தி (மேனகா)
நந்தன் மாமா, குஞ்சன்ரி, அன்பு மாமா, கௌரிமாமி

Best Wishes

மேலும் இப்பாடசாலையில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் மனமார வாழ்த்துவதோடு பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு நன்றி கூறுகின்றோம்.

தொலைபேசி இல. 077 927 1613

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
07.05.1950

இறப்பு
25.03.2004

### தையல்நாயகி வைகுந்தராஜா

(மண்டைதீவு)

திதி - சதுர்த்தி

நினைவுகள் மட்டுமே நீளமாக
அகவைகளுடன் சேர்ந்தே ஆதரிக்கிறது
உறவுகளின் நினைவுப்படியல்!
கதிரவன் இல்லா பகலும்
காரிருளில் தொலைந்த நிலவுமாய்
இருவரையும் இழந்து இருளானது நம்கிழக்கு!
ஆண்டுகள் பத்தோடு மூன்றாய்
பார்த்திராத தாய்வதனம் பாத்திருக்க தவனம்
எம் பரிதவிப்பு தினமும்!

**ஆடியம்பிட்டி ஒழுங்கை,**
**சாவகச்சேரி.**

**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2016 க.பொ.த (சா.தர)
பரீட்சையில்
**8A,C**
சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற
**செல்வி சதீஸ்கரன் சஜித்தா** அவர்களை
வாழ்த்துகின்றோம்

Best Wishes

**பாடசாலைச் சமூகம்**
**கிளி/ ஞானிமடம் அ.த.க.பாடசாலை**
**ஞானிமடம் பூநகரி.**

STUDY IN CANADA
"Study in Canada... Step up in Life"

PROGRAMS OFFERED
- INFORMATION TECHNOLOGY
- BUSINESS ADMINISTRATION
- HOTEL MANAGEMENT

ST.CLAIR

NO IELTS REQUIRED
Scholarship available
Work Permit after graduation
PR options Available

St.Clair College, Windsor, Ontario

Pathway programs : JOIN IN SRILANKA ! COMPLETE IN CANADA !!
First semester in INDIA March'17, Rest in CANADA September'17

Also available direct study programs
Admission for May and September 2017

ICGE
TIES, 273, Main street, Northern Province, Jaffna, Srilanka

admission@ICGE.education
admission@THIGUVI.com
www.ICGE.education
(+94) 021 45 48464


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லொறி விற்பனைக்கு

Ashok Leyland Painer 7500kg அலுமினிய பொடி NPLL- xxxx லொறி விற்பனைக்குண்டு.

**077 742 2604**

## வெளிவந்துவிட்டது

குவி அச்சகத்தின் புதிய வெளியீடுகளாக

* Practise your Grammar Grade-8
* விஞ்ஞானம் தரம்-10 (வினாவிடை பயிற்சி நூல்)
* கணிதம் தரம்-7 (தமிழ் மொழி மூலம் & English Medium)
* கணிதம் தரம்-8 (தமிழ் மொழி மூலம் & English Medium)
* Happy Kids English Grade-1

சகல புத்தகக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

K.V.Printers Book Distributing Center
355, Clock tower Road, Jaffna.
T.P: 021 720 0237



## சிவன் ஜோதிடம்

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
**பண்டித் ஜெயதேவ் சுவாமிகள்**
**076 585 9977 , 077 835 7307**

துல்லியமாக கணித்து சொல்லப்படும் விடயங்கள்

மெய்யன்பர்களே !

இந்தியாவின் புகழ் பெற்ற மாந்திரீக ஜோதிடர் இவர் தீர்த்து வைக்காத பிரச்சினைகளே இல்லை. கணவன் மனைவி சண்டை பிரிவு, காதல் திருமண தடை இதுவரை திருமணமே ஆகாதவர்கள் பிள்ளைகள், பெற்றோர் சொல் கேளாமல் திரிவது. வேலை தொழில் உத்தியோகம் இப்படி பல பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். பணம் பெறாமையால் தொழில் பாதிப்பு பலன் சொல்வதோடு பிரச்சினைகளை தீர்த்து வைப்பார். புத்திர பாக்கியம் இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கியம் பலன்களை சொல்வார். மேலும் உங்கள் வீட்டில் செல்வம் கொழிக்க உதவும் லட்சுமி பூசை செய்து தருவார்.
தமிழ் மொழிகளில் ஜோதிடம் சொல்லப்படும்.

100% உத்தரவாதம்

**இல.394, 1/1 மணிக்கூட்டு வீதி,**
**(பெருமாள் கோயில் வீதி, லிங்கம் கிறீம் ஹவுஸ் அருகில்)**
**யாழ்ப்பாணம்.**
நேரம்: காலை 8.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

## STUDY IN POLAND ICGE

www.ICGE.education

Admission for May and September 2017

Wszechnica Polska University in Warsew, Poland is one of the most dynamically developing private Universities in country in terms of didactical base, varied and rich offer of courses, as well as number of students.

**Why POLAND?**

* **No IELTS required**
* European Unions valued education system
* Low Academic cost
* Work Permit after graduation
* Immigration opportunities

Courses offered
Diploma, bachelor and post graduate courses

**Why ICGE?**

* **Since 1998** – The oldest and largest counseling organization in the sub continent
* Counselors – Not Agents
* **On Spot** interview
* **Complete Guidance** – Admission to graduation, Travel and stay arrangements, change of status

admission@ICGE.education
admission@THIGUVI.com
273, Main street, Northern Province, Jaffna, Srilanka
(+94) 021 45 48464
MDP-Srilanka TIES


# ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள்


## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1979 ரேவதி செவ்வாய் இல்லை அரச உத்தியோகம் பார்க்கும் மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.

Vibar : 076 702 1622,
T.P :076 707 4576

## வகுப்புக்கள்

இலங்கை கணக்காளர் சேவையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப்பரீட்சையை எதிர் கொள்ள வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் எதிர்வரும் 1.8. 10 மற்றும் 15 ஏப்ரல் 2017 ஆம் திகதிகளில் STEP Institute இல வடமாகண அரசாங்க சேவை பட்டதாரிகள் சங்கத்தினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகிறோம்.

**077 748 8155, 075 940 8851**

## உயர் கணக்கியல் கல்லூரி H.A.C

சித்தங்கேணி

**A/L 2019**

**பிரிவு-02**

**வர்த்தகப் பிரிவு**

பொருளியல்- M.C.சுதாகரன்
வணிகக்கல்வி- S.பிரதீபன்
கணக்கீடு- M.R.ரோஜிந்தன்
I.C.T- N.நஜன்

**கலைப் பிரிவு**

தமிழ்- T.S.குகன்
அரசியல்- அசோக்
வரலாறு- S.S.தாஸ்
நாடகமும் அரங்கியலும்- P.கணேஸ்
புவியியல்- S.P.கரன்
இந்துநாகரீகம்- S.சிவாஸ்கரன்
பொருளியல்- M.C.சுதாகரன்
Midea- V.நவநீதன்
இந்துசமயம்- S.சிவா
விவசாயம்- S.பிரசாந்தன்
அளவையியல் வழமையான ஆசிரியர்
சங்கீதம்- திருமதி S.கலா
சித்திரம்- V.விக்கி
மனைப்பொருளியல்- திருமதி S.தபோ

**ஆரம்பம்**
**01.04.2017 பி.ப 3 மணி**


**மாதகல் சென்.யோசப் மகா வித்தியாலயம்**

ம.நாகதீபன் 8ஏ, ர.ரிதுர்ஷா 5ஏ3பிசி, இ.யோகதாஸ் 4ஏ2பிசி, எ.அனுஸ்ரா 3ஏ3பி2சி, க.போல்ராஜ் 2ஏ5பிசி, ஜெ.லூட்ஸ் ஜெகன்யா 2ஏ3பி2சி2எஸ், இ.பில்விறிட் மயூரியா 2ஏ3சி3எஸ், க.கேமசொரூபன் ஏ4பிசி2எஸ், சீ.நிதுஷா ஏபி3சி2எஸ், க.துஷாந்தன் 2பி4சி2எஸ், ர.துளசிதரன் 2சி5எஸ்.

**மானிப்பாய் இந்துக் கல்லூரி**

ஆர்.டிலுக்சன் 8ஏபி, கே.கெலிஸ்ரன் 7ஏபிஎஸ், எம்.கிசாந்தன் 6ஏ2பிசி, எம்.அனன்ராஜ் 6ஏ2பிஎஸ், ஆர்.சிவஜன் 5ஏ3பி, ரி.தமிலரசன் 5ஏ2பிசி, எஸ்.சிவதர்சன் 4ஏ2பி2சி, பி.ஹரிகரன் 3ஏ4பிசி, ஜி.ஜதுர்சன் 3ஏ4பிஎஸ், கே.ஜெயபிரணவசர்மா 3ஏ3சி3எஸ், ஜே.டிலுக்சன் 3ஏ3பி2சி, ஆர்.தனுசியன் 3ஏ3பி2எஸ், எஸ்.கஜீபன் 3ஏ2பி3சிஎஸ், எஸ்.சோபிதன் 3ஏ2சி4எஸ், என்.பதிவேந்தன் 3ஏபி5எஸ், ரி.திஸ்னுகன் 2ஏ5பி2சி.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

இ.வதுசனா 8ஏபி, ர.அகிலா 8ஏபி, அ.சுகன்யா 8ஏபி, வ.டிலானி 8ஏபி, சி.பாணுஜா 7ஏ2பி, சி.கயூரன் 7ஏ2சி, ஜோ.ஜனுசன் 6ஏ2பிஎஸ், க.சர்மினி 5ஏபி3சி, ச.தர்சன் 5ஏ2பிசிஎஸ், க.துவாரகன் 5ஏ3பி, க.கம்சனா 4ஏ4பிசி, அ.நவோமியா 4ஏ3பிசிஎஸ், ர.மோகனப்பிரியா 4ஏ3பிசிஎஸ், ப.ஜெரோன் 4ஏபி4சி, வி.தர்சன் 4ஏ2பி2சி, ம.றிசிகா 4ஏ2பி2சி, ந.கோபிராம் 3ஏ2பி3சிஎஸ், ர.நிலக்சிகா 3ஏபி4சிஎஸ்.

**வட்டு. மத்திய கல்லூரி**

ரி.சுகந்தினி 8ஏபி, ரி.சரணியா 8ஏபி, கே.நிலுசியா 8ஏசி, வி.துஷாந்தி 7ஏ2பி, வை.மதங்கினி 7ஏபிஎஸ், கே.தினுசன் 7ஏபி.

கோப்பாய் சரவணபவானந்த வித்தி.

இ.தரணியா 7ஏ2பி, ச.முகுந்தினி 7ஏபிசி, இ.இராஜவிமலேந்திரன் 6ஏ3பி, சி.யனுசியா 6ஏபி2சி, க.விதுரா 4ஏ3பி2சி, கே.யதுர்சன் 4ஏபிசி2எஸ், பி.இஷானிகா 2ஏ3பிசி2எஸ், ச.அகிலவன் ஏ4பி4சி, இ.இந்துஜா 2ஏ3சி3எஸ். இ.லக்சிகா ஏ3பி2சி2எஸ்,ம.பவித்திரன் ஏ2பி3சி3எஸ், இ.வினோத் ஏ2பி4சிஎஸ், வா.டிலக்சனா ஏபி3சி3எஸ், ப.கிருசாலினி ஏ4சிஎஸ், ம.யான்சிகா பி5சி2எஸ், ந.தனுஜன் பி2சி5எஸ், ஷ.சர்மிலன் 3சி4எஸ்.

**அத்தியார் இந்துக் கல்லூரி**

லோ.நிலானி 6ஏபி2எஸ், வி.கீர்த்திகன் 5ஏ3பிசி, த.சரணியா 5ஏ3பிஎஸ், த.திருக்குமரன் 5ஏ3பிஎஸ், கோ.நிவேதிகா 5ஏ2சி2எஸ், க.டக்சயன் 4ஏ3பிசிஎஸ், ரா.நிசாங்கன் 4ஏ2பி2சிஎஸ், ம.கார்த்திகன் 4ஏ2பி2சி, ஸ்ரீ.தர்சனா 4ஏபி2சிஎஸ், சி.பிரியங்கா 3ஏ4பிசி2எஸ், ஸ்ரீ.யதுர்சன 3ஏ2பி2சி2எஸ், பா.கயூரன் 3ஏ2பி2சி2எஸ், த.ரகுபாலன் 2ஏ3பி3சிஎஸ், பா.நிலக்சன் 2ஏ3பி2சிஎஸ், சி.தீபனா 2ஏ2பிசி4எஸ், அ.பிரசன்னா 2ஏ3பி3சிஎஸ், த.துவாரகன் 2ஏ4சி2எஸ், ச.சிற்சொரூபன் 2ஏபிசி4எஸ், ம.றொசான் 2ஏபி3எஸ், ஜெ.யதுசன் 2ஏ4சி2எஸ், சி.மலரவன் 2ஏபி4சிஎஸ், த.கிருபாகரன் 2ஏ2சி3எஸ்.

**கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்**

சி.சாம்பவி 9ஏ, கி.அபியா 8ஏபி,ச.பிருத்திகா 6ஏ2பி, வ.குயிலினி 6ஏ2சிஎஸ், வி.சாளினி 4ஏ4பிசி, ர.நிதர்ஷனா 3ஏ5பிஎஸ், வ.கிருஷ்ணலதா2ஏ5பிசி, ச.வேதவினோஜிதன் 2ஏபி2சி3எஸ், உ.நிதுஷன் ஏ3பி2சி2எஸ், ச.தமிழினி ஏபி3சி3எஸ்.

**மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி**

தே.நிவேதிகா 8ஏசி, ச.சலோமி 7ஏபிசி, வி.கிஷாலினி 7ஏசிஎஸ், சு.தாட்சாஜினி 6ஏசி2எஸ், ர.பௌத்திரா 5ஏ2பிசி, ர.டிசானி 3ஏ2பிசிஎஸ், சு.யுகல்யா 3ஏ2பிசி, இ.லக்சிகா 3ஏபி4சிஎஸ், ந.நிந்துஜா 3ஏ2பி2சிஎஸ், த.பிரியதர்சினி 3ஏ3பி2சிஎஸ், சி.திவ்யா 3ஏ2பி2சி2எஸ், ந.கிருஷிகா 2ஏ3பி2சி2எஸ், ஜெ.டிலெக்சனா 2ஏ4பிசிஎஸ், யோ.கஜீபனா 2ஏபி2சி2எஸ், ஜெ.சாணுஜா 2ஏபி5சி, ப.ஆரபி ஏ3பி2சிஎஸ், அ.அஜிதா ஏ2பி3சி3எஸ், சு.கௌரி ஏபி3சி4எஸ், ம.கொன்சிகா ஏ3சி6எஸ், யோ.றொபின்சிகா ஏபி3சி3எஸ், சி.சோபிகா ஏபி5சி2எஸ், சு.தர்சனா ஏ5சி2எஸ், சி.கீதா ஏபி2சி4எஸ், ஜெ.கிருஷாலினி ஏபி3சிஎஸ்.

**சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**

**9ஏ**

டபிள்யூ.வாசனாமதுபாஸ்கினி, ஆர்.றொச்சனா, ஏ.சர்விகா, ஜி.பிறையொளி, எஸ்.மீனாம்பிகா, கே.நிகேதனா, ஆர்.சங்கவி, எஸ்.பிரீதி, ரி.விஜின்தா, ஜே.ஆர்த்தி, ஜே.ஆரபி, ஜேஅனிசா, கே.கிளேயர் ஸ்ரெபி.

**8ஏ**

எஸ்.ஜொயானா எவன்விலி, பி.ஜசி, கே.யதுர்ஷா.

**7 ஏ**

ஏ.கிறிற்றினா ஏஞ்சல், ஜே.அபிஷனா, ஏ.லக்ஷி, ஜே.றோசிலின் றோஸ்னி, என்.தனியாபிரியமரியா.


## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

எமது கற்கைநெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

**Excellent Teachers' Panel & Individual Attention**

**Diploma / Advanced Diploma in English**
ஓரளவு ஆங்கில அறிவு உள்ளவர்கள் மேலும் அறிவை விருத்தி செய்ய சிறப்பாக அமைக்கப்பட்ட கற்கைநெறி.
ஆங்கில அறிவு, இலக்கணம், இலக்கியம் என விரிவாகக் கற்பிக்கப்படும்.

**Spoken English With Grammar - Quick Learning Course**
குறுகிய காலத்தில் ஆங்கிலத்தில் புலமை பெற விரும்புபவர்களுக்கு இது பொருத்தமானதாகும். பாடசாலை மாணவர்கள், தொழில்புரிவோர், ஆங்கிலம் கற்க விரும்புவோருக்கு உகந்தது.

**Young Learners English (YLE)**
வயதெல்லை 7 - 15 உட்பட்ட மாணவர்களுக்கான சர்வதேசப் பரீட்சை உடன் University of Cambridge இனால் சான்றிதழ் வழங்கப்படும்.

**IELTS Life Skills A1 Exam - Sponsor / Settlement Visa**
மூலம் UK செல்பவர்களுக்கு British High Commission னால் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை

**IELTS (Academic / General ) Student Migration Visa**
மூலம் செல்பவர்களது Approved Centre for Registering Online (ORS) Candidates

**Spoken Sinhala**
சிங்களத்தில் சரளமாகக் கதைக்க விரும்புபவர்களுக்கு உகந்த முறையில் கற்பிக்கப்படும். மாணவர்கள், தொழில் புரிவோர், சிங்களம் கற்க விரும்புவோர் அனைவருக்கும்

**Diploma in Sinhala**
ஓரளவு சிங்கள அறிவு உள்ளவர்கள் மேலும் சிங்கள அறிவை விருத்தி செய்ய, சிங்களத்தினை மேலும் விரிவாகக் கற்றுக் கொள்ள விரும்புவோர்களின் தெரிவு.

**வகுப்புக்கள் ஆரம்பம்**

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Jaffna Branch :
No.15, Sirambiyady Lane off Stanley Road, Jaffna.
Tel : 021 222 4550 | 076 3166 060


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி விபத்தில் 3 பேர் படுகாயம்

தென்மராட்சி, மார்ச் 31
வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் முன்னால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் அதில் பயணித்த ஆசிரியை கையில் படு காயமடைந்தார் என்று தெரிவிக்கப் பட்டது.
விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிளில் பயணித்த பயிற்சிப் படைச் சிப்பாய்கள் இருவரும் காய மடைந்தனர் என்று தெரிவிக்கப் பட்டது. காயங்களுக்கு உள்ளான மூவரும் சாவகச்சேரி வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவம் கைதடி நுணாவில் ஏ - 9 சாலையில் நேற்றுக் காலை 7.15 மணிக்கு இடம்பெற்றது.
கிளிநொச்சியிலிருந்து பலாலி படைத் தலைமையகத்துக்குப் பயிற்சிக்குச் செல்வதற்காக படைச் சிப்பாய்கள் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்றனர். முன்னால் மோட்டார் சைக்கிளில் சென்ற ஆசி ரியை திரும்புவதற்கான சமிக்ஞை செய்து திருப்பிய போது படைச் சிப் பாய்களின் மோட்டார் சைக்கிள் மோதியே விபத்து ஏற்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பயிற்சிப் படைச் சிப்பாய்களான கிளி நொச்சி செல்வாநகரைச் சேர்ந்த 22 வயது இளைஞரும் பளை இத்தாவி லைச் சேர்ந்த 29 வயது நபரும் நுணாவிலைச் சேர்ந்த 42 வயது ஆசிரியையும் காயமடைந்தனர்.
சாவகச்சேரி பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (வ- 9)

# சிறார்களின் விளையாட்டு போட்டிகள்

சாவகச்சேரி, மார்ச் 31
சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கை புலேந்தன் பாலர் பாடசாலையிலுள்ள நிலைய சிறார்களின் 2017ஆம் ஆண்டுக் கான விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு நிலைய மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட் டது.
நிலையத் தலைவர் வை.இராசரத் தினம் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தின ராக தென்மராட்சி கல்வி வலய பிர திக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசன் கலந்து கொள்வார் என்று தெரிவிக் கப்பட்டது. (வ-9)

# மகளிர் தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், மார்ச்31
கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்க மும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் உலக மகளிர் தின நிகழ்வு இன்று வெள்ளிக் கிழமை பி.ப.3.30 மணிக்கு கொட் டடி சனசமூக நிலையக் கட்டடத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.
யைன் கலாநிதி நா.தனேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மருத்துவர் சந்திரமாலா ஜெயபால னும், சிறப்பு விருந்தினராக ஜே/83 கிராம அலுவலர் கோபி.ஷாலினி யும் கலந்துகொள்வர் என்று தெரி விக்கப்பட்டது. (வ)

# டெங்கு நோய்த் தொற்றைத் தடுக்கும் நடவடிக்கைகள் காவலூரில் இன்று

ஊர்காவற்றுறை, மார்ச் 31
ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட் பட்ட பகுதிகளில் டெங்கு நோய்த் தொற் றைத் தடுக்கும் நடவடிக்கைகள் இன்று காலை முன்னெடுக்கப்படும் என்று ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் அறிவித்தார்.
"டெங்கு நோய்த் தொற்றுக் கட்டுப் பாட்டு நடவடிக்கையின் ஒரு பகுதி யாக ஊர்காவற்றுறை பிரதேச சபை யால் ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிக்கடைப்பட்ட ஊர்காவற்றுறை, தம்பாட்டி, நாரந் தனை, புளியங்கூடல் பகுதிகளில் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவாக அமையும் கழிவுப் பொருள்களை பொதுமக்களிடம் இருந்து சேகரிக்கப் படும்.
ஊர்காவற்றுறை பிரதேச சபை உத் தியோகத்தர்களும் பொதுச் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து சபையின் வாகனங்களில் திண்மக் கழிவு களைச் சேகரிக்கவுள்ளதால் பொது மக்கள் காலை 8.30 மணிக்கு முன் னர் குடியிருப்புக்களில் காணப்படும் கண்ணாடி, பிளாஸ்ரிக், பொலித்தீன் ஆகியவற்றை மூன்று வகையாகப் பிரித்து பொதியிட்டு வைக்க வேண் டும். அவற்றை வாகனங்களில் வருகை தருவோரிடம் கையளிக்க வேண்டும்.
பொதுச் சுகாதாரப் பகுதியினர் குடியி ருப்புகளுக்கு வருகை தரும் போது டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏது வான கழிவுப் பொருள்கள் வளவுக் குள்காணப்படின் குடியிருப்பாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கையை அவர் கள் முன்னெடுப்பார்கள். எனவே இந்த விடயத்தில் சிறப்புக் கவனமெ டுத்து செயற்படுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்" என்று ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செய்திக் குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது. (வ)

# ராணுவம் விடுவித்த வீட்டில் கைக்குண்டு

யாழ்ப்பாணம், மார்ச் 31
யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைவீதியில் இராணுவத்தினரால் விடு விக்கப்பட்ட வீடொன்றிலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த செயற்படக்கூடிய கைக் குண்டொன்று நேற்று மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
"வீட்டின் உரிமையாளர் வெளிநாட்டில் வசிக்கிறார். இந்த வீடு நீண்ட காலமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இராணுவத்தினர் அந்த வீட்டை கைவிட்ட தன் பின்னர் அங்கு பொறுமகன் ஒருவர் வாடகைக்கு அமர்ந்திருந்தார். அவர் வீட் டில் திருத்த வேலைகளை மேற்கொண்ட போது வீட்டின் சீலிங் பகுதிக்குள் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் இந்தக் கைக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸா ருக்கு அறிவிக்கப்பட்டது. நீதிமன்ற கட்ட ளையைப் பெற்று சம்பவ இடத்துக்கு சிறப்பு அதிரடிப் படையினருடன் சென்ற பொலிஸ் குழு கைக்குண்டை மீட்டது" என்று பொலி ஸார் தெரிவித்தனர். (வ-103)

# கலட்டி விநாயகருக்கு இன்று சிறப்பு முழுக்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 31
வண் - வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய சிறப்புமுழுக்கு வழிபாடுகளும், விநாயகர் பெருமான் வீதி வலம் வருதலும் இன்று வெள் ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 31
யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனமும் இலங்கை பொறியியலாளர் நிறுவக வட பிராந்தியம் அலுவலகமும் இணைந்து "தகவல் அறியும் உரிமைச் சட்டம்" தொடர்பான கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது. இந்தக் கருத்த ரங்கு நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடை பெறும் என்று அறிவிக்கப்பட் டது.
இந்தக் கருந்தரங்கிற்கு ஆர்வ லர்கள் அனைவரையும் கலந் துகொள்ளும்படி ஒருங்கி ணைப்பாளர் நிரஞ்சன் கேட் டுள்ளார். (வ)

# டெங்குத் தொற்றைத் தடுக்க கரவெட்டியில் விழிப்புணர்வு

கரணவாய், மார்ச் 31
கரவெட்டி பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதி களில் டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத் துவதற்கான நடவடிக்கைகள் முன் னெடுக்கப்படுகின்றன.
"அண்மைக்காலமாக வடமராட்சிப் பகுதியில் டெங்கு நோய்த் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ளது. கரவெட்டிப் பகுதியில் பலர் டெங்கு நோய்த் தொற் றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கரவெட்டிப் பிரிவிலுள்ள மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகை யில் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப் படுகின்றது. கரணவாய் தெற்கு, கர ணவாய் மற்றும் கரணவாய் மேற்கு கிராமஅலுவலர் பிரிவுகளில் குடியிருப்பு களுக்கு நேரடியாகச் சென்று டெங்கு நோய்த் தொற்றுத் தடுப்பு நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படு கின்றன.
கரவெட்டி பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி எஸ். சுதோகுமார் தலைமை யில் நெல்லியடிப் பொலிஸார், எல்லங் குளம் இராணுவத்தினர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கிராம அலு வலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் கள் இணைந்து குடியிருப்புகளுக்குச் சென்று பரிசோதனைகளை மேற் கொண்டதுடன் மக்களுக்கான விழிப் புணர்வையும் வழங்கினர். (வ-108)

# நரம்பியல் மருத்துவ பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 31
யாழ்ப்பாண மாவட்டத் தில் நரம்பியல் நோய்க ளால் பாதிக்கப்படுவோ ரின் எண்ணிக்கை அதி கரித்து வருவதை அடுத்து, அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங் கும் பொருட்டு வைத்திய சாலைகளில் கடமை யாற்றுபவர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று காலை 8 மணி தொடக்கம் யாழ்.பொது நூலக கேட்போர் கூடத் தில் நடைபெறும் என்று யாழ். சிகிச்சைப் பிரிவி னர் அறிவித்தனர். (வ-9)

## அறிவித்தல்

**நாளைய உதயனில்**
நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ ஈ. சரவணபவனின் அனுசரனையுடன் ஒளி அரசி சஞ்சிகை கடந்த பெப்ரவரி மாதம் நடத்திய தரம் 05 பரீட்சைத் தொடர் 07 இல் உயர் புள்ளிகளை பெற்று பாராட்டுப் பெறும் புலமைசாலிகளின் பெயர் விவரங்கள் நாளைய உதயனில் முழுமையாக வெளிவரும். ஆவலுடன் எதிர்பாருங்கள்.
**பொறுப்பாசிரியர், ஒளி அரசி**

## மரண அறிவித்தல்

### காளிமுத்து பாலையா



மாத்தளையைப் பிறப்பிடமாகவும் மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட காளிமுத்து பாலையா 30.03.2017 வியாழக் கிழமை காலமானார்.
அன்னார் விக்னேஸ்வரியின் அன்பு கணவரும் சுபாசினி, பிரியதர்சினி ஆகியோரின் அன்பு தந் தையும் யோகேந்திரனின் அன்பு மாம னாரும்ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2017) வெள் ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**0777765010** **குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதிப்பு
07 . 12 . 1919



உதிர்வு
10 . 04 . 2016

**திருமதி நல்லம்மா முத்துத்தம்பி (முத்தம்மாச்சி)**
திதி: 31.03.2017(சதுர்த்தி)

மாதங்கள் பன்னிரண்டு மாயமாக மறைந்ததுவே!
மாளாத்துயர் இன்னும் ஓயவில்லை
மாறாத பந்தமும் நீங்காத நினைவுகளும் - எம் நினைவில்
என்றும் எங்களோடு தான் வருடங்கள்
பலவானாலும் வாழ்ந்திடுவீர்


ஊரெல்லை வீதி,
மீசாலை மேற்கு,
மீசாலை.

பிள்ளைகள் , மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கதிர்காமநாதன் சங்கரப்பிள்ளை

(முன்னாள் இளைப்பாறிய நீதிமன்ற பதிவாளர், சமாதான நீதிவான்-சாவகச்சேரி)


அன்னை மடியில் ஆண்டவன் அடியில்
20.04.1943 29.03.2017

யாழ். நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கு, கனடாவை வசிப்பிடமா கவும் கொண்ட கதிர்காமநாதன் சங்கரப்பிள்ளை 29.03.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற வர்களான சங்கரப்பிள்ளை லட்சுமியம்மா தம்பதியின் அன்புப் புதல்வரும் காலஞ் சென்றவர்களான காத்திகேசு சரஸ்வதி தம்பதியின் அன்பு மருமகனும் செல்வரதியின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் லக்ஷி (ஐக்கிய அமெரிக்கா), கௌஷி (கனடா), நிலுஷி(கனடா), அனுஷி(கனடா) ஆகியோரின்பாசமிகு தந்தையும் நித்தியானந்தன் சிவகுமார், செந்தூரன், லக்ஷ்மன் ஆகியோரின் அன்பு மாமனும் வள்ளிநாயகி(இளைப்பாறிய ஆசிரியை) காலஞ்சென்ற பத்மநாதன், சிவயோகநாதன் (ஆஸ்திரேலியா), தில்லைநாயகி (கனடா), கணேஷநாதன் (இலங்கை), ரஞ்சிதநாயகி(ஆஸ்திரேலியா), காந்திநாயகி (ஆஸ்திரேலியா), டேவிட் திருலோகநாதன் (கனடா) ஆகியோ ரின் அன்புச் சகோதரரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.04.2017 ஞாயிற்றுக் கிழமை கனடாவில் நடைபெறும்.
அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
39/3, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில். சகோதரி (வள்ளிநாயகி)
0767494761, 0765525558

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகை வெளியீடு

வடமராட்சி, மார்ச் 31
தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் பங்குனி மாத இதழ் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.
ஆச்சிரமப் பொறுப்பாளர் செ.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை ஓய்வுநிலை அதிபர் எஸ். ஆனந்தராசா (அன்னைதாசன்) வும், மதிப்பீட்டுரையை ஓய்வுநிலை அதிபர் வ. கணேசமூர்த்தியும் நிகழ்த்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

---

விண்ணக வாழ்வின்

## ஒன்பதாம் வருட நினைவஞ்சலி



அமரர் சுப்பிரமணியம்
**யோசேப் பூராசா**
(ஓய்வுபெற்ற அதிபர், முன்னாள் செயலாளர் புனித அந்தோனியார் ஆலயம், தெய்வக் குழந்தைகள் இல்ல முன்னாள் இயக்குநர்)

பிறப்பு 20.06.1938 — இறப்பு 31.03.2008

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் உம்மை மறவோம்"

**குடும்பத்தினர்.**
**2 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.**

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொன்னம்பலம் சிவமணி**
**(6 ஆம் வட்டாரம், மண்டைதீவு)**
**திதி: பூர்வபக்க சதுர்த்தி**

ஆண்டுகள் ஐந்து ஆயினவோ
அப்பா! உங்கள் ஆசைமுகம்
பார்த்து, பாவமேயறியாத உங்கள்
பாச உறவை எங்களிடம்
இருந்து பாதியில் பிரித்துச்
சென்றனரோ நித்தம் நித்தம்
வேதனையில் வாடுகின்றோம்

காலங்கள் உருண்டோடிடும்
ஆனால் உங்கள் நினைவுகள்
என்றும் மறையாது
உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மண்டைதீவு - 06**
**மனைவி, மகள், குடும்பத்தினர்.**

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வேதாரணியர் வளவு, உடுவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட

அமரர் **தாமோதரம்பிள்ளை பாலச்சந்திரன்**
(இளைப்பாறிய டிப்போ பரிசோதகர், இ.போ.ச. கோண்டாவில்)



**தோற்றம் 12.02.1942 — மறைவு 01.03.2017**

அவர்கள் கடந்த 01.03.2017 புதன் கிழமை தெகிவளையில் சிவபதம் அடைந்தார். அன்னாரின் 31 ஆம் நாள் நினைவதினம் இன்றாகும். அவரின் ஆத்ம சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் அத்துடன் எங்கள் குடும்ப தலைவர் மறைந்த செய்திகேட்டு வீட்டிற்கு வருகை தந்து துயர்பயின்றோர்களுக்கும், உள்நாடு, வெளி நாடுகளிலிருந்து தொலைபேசி, இணையமூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும், மலர் வளையம் வைத்து, பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிச் சடங்கிலும், இறுதி ஊர்வலத்தி லும் கலந்து கொண்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் முன்னின்று உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

9 A, 1/3, Spri'ng Court,
Peter's lane, Dehiwala
011 272 4484, 077 728 2805

**குடும்பத்தினர்.**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 29 . 11 . 1981



இறப்பு 31 . 03 . 2016

**சீவரட்ணம் பிரசன்னா**

எம் உயிரின் பாதி
உன்னுடன் உதிர்ந்ததண்ணா
ஆண்டுகள் ஆயிரம்
அகன்றாலும்
ஆருயிர் அண்ணாவே.....
நீர் தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்...............
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

**உரும்பிராய் மேற்கு,**
**உரும்பிராய்.**
**குடும்பத்தினர்.**

---

## 14 ஆம் ஆண்டு நினைஞ்சலி



அமரர்
**சோமசுந்தரம் குலேந்திரன்**

தோற்றம் 30.03.1935
மறைவு 31.03.2003
**திதி: வளர்பிறை சதுர்த்தி (31.03.2017)**

இமைகள் மூடித் திறப்பதற்குள்
ஆண்டுகள் பதின்நான்கு ஆனதுவோ
எங்கள் அப்பா முகம் பார்த்து
நாம் வாழும் நாள் முழுவதும்
உங்கள் நினைவுகள் என்றும் எம்முடன்
என்றும் நீங்கா நினைவுகளுடன்

**இணுவில் தெற்கு,**
**இணுவில்.**
**மகள், மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**வைத்திலிங்கம் ஐயாத்துரை**



பிறப்பு 29.12.1931
இறப்பு 10.04.2016
**திதி: சதுர்த்தி வளர்பிறை (31.03.2017)**

ஈரவிழி காயவில்லை ஐயா! ஆண்டு ஒன்று ஆகிவிட்டது
எம்மை கண்ணீர் சிந்தி பரிதவிக்க விட்டு விட்டு எங்கே போனீரோ?
கண்ணுக்கு இமைபோல் கடைசி வரை
தம் குடும்பம் காத்து வந்தீர்கள்
அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
ஊக்கமுடன் உழைத்து வந்தீர்கள்
நாங்கள் வாழும் வரைக்கும் - நீங்கள்
நிறைவாக எம் நெஞ்சில் - நின்று நிலைப்பீர்கள்
எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்
நீங்கள் திருவடியில் நீங்கள் சேர்ந்து வாழ வேண்டும்.

**பத்தானை வீதி,**
**தாவடி தெற்கு, கொக்குவில்.**
**குடும்பத்தினர்.**

---

## பிள்ளைக் கனியமுதம் பேச்சுத் திறனாய்வு நிகழ்வு நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 31
யாழ்ப்பாண மாநகர சபை பிள்ளைக் கனியமுதம் முன்பள்ளியின் பேச்சுத்திறன் காண் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாநகர முன்பள்ளியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகரசபை பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தரும் தகவல் வழங்கும் அலுவலருமான ச.லோகசிவம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசனும் சிறப்புவிருந்தினராக நல்லூர் கிராம அலுவலர் சி.கேதீஸ்வரனும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## எழுத்தாக்கல் போட்டி நாளை

தென்மராட்சி, மார்ச் 31
தென்மராட்சி கல்வி வலயத்தின் நடப்பு வருடத்துக்கான தமிழ்த்தினப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன என்று அறிவிக்கப்பட்டது. மாணவர்களுக்கான வலய மட்ட எழுத்தாக்கல் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். (வ -9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணம் தருகின்றோம் பாலம் அமையுங்கள்

## கனகரத்தினபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை

முல்லைத்தீவு, மார்ச் 31

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்புவீதியிலிருந்துமேற்குப் பக்கமாக கனகரத்தினபுரம் செல்லும் வீதியில் உள்ள பேராற்றுப்பாலத்தைஅமைக்க எமது கிராம அமைப்புக்கள் மூலமும் ஒரு தொகைப் பணம் வழங்க முன்வருகிறோம். அதனை அமைக்க ஆவன செய்யுங்கள் என கனகரத்தினபுரம்கிராமஅபிவிருத்திச் சங்கத் தலைவர் த.கணேசன்தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது கிராமத்திலிருந்து பாடசாலைகளுக்கு, சந்தைக்கு, வைத்தியசாலைக்கு எனப் பல இடங்களுக்கும் இந்த வீதி பிரதானமாகக் கருதப்படுகிறது. இந்தவீதியில்உள்ள பேராற்றுப் பாலமானது வெள்ளப் பெருக்கால் சேதமுற்று இடியும் நிலையில் உள்ளது. இதனால் நாம் பிரயாணம் மட்டுமல்ல வாகனங்களைக் கூட கொண்டு செல்ல அஞ்சுகிறோம். மேலும் வெள்ளம் ஏற்படும் போது வெளியே செல்ல முடியாது. கிராமம் தனிமைப்படுத்தப்படுகிறது. அவசர நோயாளர்களைக்கூட நாம் கொண்டு செல்வதில் சிரமம் அடைந்துள்ளோம். இதனால் பல உயிரிழப்புக்கள், விபத்துக்கள் கூட ஏற்பட்டது. இதனைக்கருத்தில்கொண்டு பதினைந்து, இருபதுவருடங்களாக சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும்மாகாண சபை உறுப்பினர்களுக்கும் எடுத்துக் கூறியுள்ளோம். பலர் வந்தார்கள். பார்த்தார்கள்அமைக்கஏற்பாடுசெய்கிறோம் எனக் கூறிச் சென்றனர்.

இதனால் நாம் ஊடகங்கள் மூலமும், படங்கள்மூலமும் செவ்வி மூலமும், எழுத்து வடிவிலும் வெளியிட்டிருந்தோம். ஆனால் இதுவரை இந்தப் பாலம் அமைக்க எவரும் முன்வரவில்லை.

இந்தப் பாலமானது எமக்கு மிக முக்கியமானதாகையால் அரசால் ஒதுக்கப்படுகின்றநிதியுடன்நாமும்எமது அமைப்புக்கள் மூலம் இயன்ற நிதியை ஒதுக்கி வழங்கமுன்வந்துள்ளோம். எனவே இந்தப் பாலத்தை அமைத்து எமது கிராம மக்களின் பிரயாணங்களையும் மக்களின் உறுதிப்பாட்டையும் நிவர்த்தி செய்யவேண்டும்-என்றார். (த-500)

## கிளிநொச்சி மாவட்டத்தில் சில

# முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் நிறுத்தம்

## ஆவன செய்யுமாறு பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை: நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 31

கிளிநொச்சி மாவட்டத்தில் நீண்ட காலமாக இயங்கும் முன்பள்ளிகள் சிலவற்றின் ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு இந்த ஆண்டு ஆரம்பம் முதல் மாகாண கல்வித் திணைக்களத்தால்நிறுத்தப்பட்டுள்ளதுஎன்றுதெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 218 சிறார்கள் தற்போது முன்பள்ளிகளில் கற்கின்றனர். முன்பள்ளிகளில் 544ஆசிரியர்கள்பணியாற்றுகின்றனர். அவர்களில்சிவில்பாதுகாப்புப்படைப் பிரிவின் கீழ் ஊதியம் பெறுவோரே அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.

340 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு சிவில் பாதுகாப்புப் படையின் கீழ் மாதாந்தம் 30 ஆயிரம் ரூபா ஊதியம் வழங்கப்படுகின்றது. ஏனைய 204 பேரும் இராணுவப் பிரிவான சிவில் பாதுகாப்புப் பிரிவின் கீழ் பணியாற்ற விரும்பாது மாகாணகல்வித்திணைக்களத்தின் கீழ் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு4ஆயிரம்ரூபாமட்டுமே மாதாந்தஊதியம்வழங்கப்படுகின்றது. அவர்களில் பலரின் மாதாந்த ஊதியம் கடந்தஜனவரிமாதம்முதல்நிறுத்தப்பட்டுள்ளது. நீண்டகாலமாக முன்பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றோம். எமது மாதாந்த சம்பளத்தை வழங்கமாகாணகல்விஅமைச்சுநடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிவில்பாதுகாப்புப்படைகளில்இணைய வேண்டாம்என்றுமேடைகளில்பேசும் தமிழ் அரசியல்வாதிகள் நடைமுறையில்அதற்குஎதிர்மாறாகவேநடக்கின்றனர். அவர்களின் பேச்சைநம்பி 4 ஆயிரம் ரூபா ஊதியத்துக்குப் பணியாற்றிய நாம் தற்போது அதுவும் இல்லாது கையறுநிலையில் உள்ளோம்.

எமது மாதாந்த ஊதியத்தை வழங்கசம்பந்தப்பட்டவர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றுபாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"மாவட்டத்தில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் உள்ள ஆளணி அங்கீகாரத்துக்கு அமையவேஇந்தநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. 17 ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. முன்பள்ளிகளின் ஆரம்பகாலம், தூர இடைவெளிகள் தொடர்பாக ஆராய்ந்து மாகாணத்துடன்பேசிவருகின்றோம்" என்று கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

"கிளிநொச்சியில் 204 முன்பள்ளி ஆசிரியர்களுக்குக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன. மாணவர்கள் எண்ணிக்கைமிகக்குறைந்தமுன்பள்ளிகள் என்ற அடிப்படையில் சில ஆசிரியர்களின் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டன என்று சுட்டிக்காட்டப்பட்டது.

ஆயினும் அங்கு கிராமங்களுக்கு இடையிலான தூரம், அதிக எண்ணிக்கையான ஆசிரியர்கள் பிற திணைக்களத்துக்குள் உள்ளமை போன்ற காரணங்களால் அங்கு எண்ணிக்கையைக் கணிக்க முடியாது. அதனடிப்படையில்அனைவருக்கும்கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்றுவடக்குமாகாணக்கல்விஅமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார். (ற-101)

### பயணிகள்நிழல் குடை இல்லாது மக்கள் சிரமம்

முல்லைத்தீவு நகரத்தில், பயணிகள் நிழல் குடைகள் போதியளவில் இல்லாமையால் மரநிழல்களில் காத்திருக்க வேண்டியுள்ளதாக பயணிகள் கவலை தெரிவித்தனர். அவர்கள்மேலும் தெரிவித்ததாவது:

கடந்தஇருஆண்டுகளுக்கு முன்னர்முல்லைத்தீவுநகர அபிவிருத்திக் குழு, முல்லைத்தீவுமாவட்டச்செயலாளரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது நிழல் குடைகளைஅமைக்கவேண்டும்என்று கோரிக்கைமுன் வைக்கப்பட்டிருந்தது. எனினும் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை.

இதனால் வெயில், மழை காலங்களில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றோம். தற்போது அதிக வெயில் உள்ளதால் நிழல் குடைகள் இல்லாமல் காய வேண்டியநிலைஏற்பட்டுள்ளது. முல்லைத் தீவு நகரத்தில் நிரந்தர பஸ் நிலையம் அமைக்கப்படவில்லை. அவ்வாறு அமைத்தால் அங்குசென்றாவதுகளைப்பைப் போக்கிக் கொள்ள முடியும். மாவட்டச் செயலகத்தை அண்டிய பகுதியில் கூட ஒரு நிழற்குடை இல்லை. கால்கடுக்க, வீதிகளில்காத்திருந்து பயணிக்க வேண்டியுள்ளது.

எனவே வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பயணிகள் நிழற்குடைகளை அமைத்து தருமாறு கேட்டு கொள்கின்றோம்.என்றனர். (த-21)

## சிவில் பாதுகாப்புப் படையின் உதவியுடன்

# டெங்கு ஒழிப்பு





வவுனியா, மார்ச் 31

வவுனியாவில் நேற்றுக் காலை சிவில்பாதுகாப்புப் படையினரின்பங்குபற்றலுடன் டெங்குஒழிப்புநடவடிக்கை நகர சபை மைதானத்தில் ஆரம்பமாகியது.

வவுனியா நகரப் பகுதியில் டெங்கின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும்நோக்கில்சுகாதாரப்பரிசோதகர்களின் பங்குபற்றலுடன் நகரசபை ஊழியர்கள், சிவில் பாதுகாப்புப் படையினர் ஒன்றிணைந்துநேற்றுடெங்குஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்தச் செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் நகரசபை மைதானத்தில் ஆரம்பமாகியது.

தொடர்ந்து வவுனியா பூந்தோட்டம், குடியிருப்பு, முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குறுக்குத் தெரு, [illegible] அரசகுடியிருப்புக்கள் போன்ற பகுதிகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆரம்ப நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ். லவன், சிவில் பாதுகாப்புப் படைகளின்வவுனியாஅதிகாரி, பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள்எனப் பலர்கலந்து கொண்டனர். (த-21)

### வாழ்வின் எழுச்சிக் கொடுப்பனவு பெறச் செல்வதில் பெரும் சிரமம்

*500 ரூபாவை போக்குவரத்துக்காக செலவு செய்து 1500 ரூபா பெறும் நிலை*

முல்லைத்தீவு, மார்ச் 31

முல்லைத்தீவு, துணுக்காய் ஆரோக்கியபுரம், அமதிபுரம், அம்பலப்பெருமாள்குளம், கோட்டை கட்டியகுளம்கிராமங்களின்மக்கள்வாழ்வின்எழுச்சிக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு துணுக்காய் நகரத்துக்குச் சென்று வருவதில் நெருக்கடியைஎதிர்கொள்வதாகத்தெரிவித்தனர்.

கடந்த 6 ஆண்டுகளாக துணுக்காய்க்கும் அக்கராயனுக்கும் இடையில்பஸ்சேவைகள் நடைபெறாதமையால் அமதிபுரம் கிராமத்தில் உள்ள வாழ்வின் எழுச்சிப் பயனாளி ஒருவர் திருமுறிகண்டி, மாங்குளம் ஊடாக துணுக்காய் செல்வதற்கு 500 ரூபாவைப் போக்குவரத்துக்காக செலவு செய்தே 1,500 ரூபா கொடுப்பனவைப் பெறவேண்டி உள்ளது. வறுமையில் உள்ள மக்களே வாழ்வின் எழுச்சிக் கொடுப்பனவுக்குத் தெரிவு செய்யப்பட்ட நிலையில், போக்குவரத்துக்குஇப்படிப்பெருமளவு பணத்தைச் செலவு செய்வதா எனப் பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு வாழ்வின் எழுச்சித் திட்டத்தின் அதிகாரிகள், இந்தக் கொடுப்பனவுகளைக் கிராமங்களுக்கு வந்து வழங்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-21)

### ஜேர்மன் பயிற்சி நிறுவகத்துக்கு விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி, மார்ச் 31

இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவகத்திற்கு 2017 ஆம் கல்வியாண்டுக்காகப்புதியமாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ, சாதாரண தரம் அல்லது உயர்தரம் முழுமை செய்துள்ள அல்லது தேசிய தொழில் தகைமை மட்டம் 3இனை முழுமை செய்துள்ள இலங்கைப்பிரஜைகள்எவரும்இதற்குவிண்ணப்பிக்க முடியும். மேலும் WWW.slgti.com என்ற இணையத்தளத்தினூடாகநேரடியாகவிண்ணப்பிக்க முடியும்.அத்துடன்இந்த இணையத்தளத்திலிருந்து விண்ணப்பங்களைப்பதிவிறக்கம் செய்தும்பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகத்துக்குத் தகவல் வழங்கிய பெண்ணை அவமதித்த வைத்தியர்

### மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கிளிநொச்சி, மார்ச் 31

வைத்தியசாலை தொடர்பாக ஊடகத்துக்குத்தகவல்வழங்கிய பெண்ணை வைத்தியர் அவமதித்ததாகக் கூறப்படும்சம்பவம்ஒன்றுஅக்கராயன்வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட பெண் நேற்றுமுன்தினம் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றையும் பதிவு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் தெரிவித்தவை வருமாறு:

ஆனைவிழுந்தானில் வசிக்கும் நான் ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிகிறேன். எனக்கு 4 பிள்ளைகள். கடந்த வாரம் அக்கராயன் வைத்தியசாலைக்குக் காய்ச்சலுக்கு மருந்தெடுக்கச் சென்ற எனது கணவரும் பிள்ளைகளும் விடுதியில் அனுமதிக்கப்பட்டனர். வேலைமுடிந்து நான் இரவு 8.30 மணிக்குப் போனேன். பிள்ளைகள் சற்று வளர்ந்தவர்களாதலால் பக்கத்தில் சொல்லிவிட்டு, மறுநாளும் காலை வேலைக்குச் சென்று மாலை வந்தேன். கணவரும் வைத்தியசாலையில் இருந்தார். அன்றிரவு விடுதி பார்க்க வந்த வைத்தியர் என்னைக் கண்டதும், நீங்கள் தான் இந்தப் பிள்ளைகளின் அம்மாவோ? உமக்கு வெட்கமில்லை என திரும்பத் திரும்பக் கேட்டார். எனது பிள்ளைக்ளைப் பார்த்து, இது உங்கள் அம்மாதானா என்றார்.

பின்னர் பிள்ளைக்ளைக் ஹொஸ்டலில் விடவேண்டும் - என்றார்.

பின்பு ஏனைய நோயாளர்களுக்கு முன்பாக இவதான் 'வைத்தியசாலை பற்றி பேப்பருக்குக் குடுத்தவ. எல்லோரும் இவவைப் பாருங்கஎன்றார். அப்போது அனைவரும் எழுந்துநின்று என்னை ஏளனமாகப் பார்த்தனர். நான் அவமானத்தால் கூனிக்குறுகி நின்றேன்.

பின்னர் காரணமின்றி எனது பிள்ளைகளைக் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றினார். அம்புலன்ஸில் என்னுடன் குறித்த வைத்தியரும் அவரது மனைவியும் வந்து, அங்கும் என்னை அவமதிப்புக்குள்ளாக்கினார்.

வைத்தியரின் இந்தச் செயலால் நானும் எனது பிள்ளைகளும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். பிள்ளைகள் என்னிடம், நீங்கள் எமது அம்மா இல்லையா எனக் கேட்கின்றனர்.

நான் இனிமேல் அக்கராயன் வைத்தியசாலைக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஊடகத்திற்குத் தகவல் வழங்கியதற்காக நான் பழிவாங்கப்படுகிறேன். எனவே வைத்தியரின் இந்தச் செயற்பாடுகள் தொடர்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (த - ய.6)

## கலந்துரையாடல்

கிளிநொச்சியில் உள்ள காணி மற்றும் வீதிகள் அபிவிருத்தி தொடர்பான சிறப்புக் கலந்துரையாடல், மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில், கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. பொதுக் காணிகள், அரச காணிகள், அவற்றின் பயன்பாடுகள் பொது அமைப்புக்களின் காணிக் கோரிக்கை, வீதிகளின் அபிவிருத்தி, சீரமைக்கப்பட வேண்டியுள்ள வீதிகள்,சீரமைக்கப்பட்ட, வீதிகள் தொடர்பாக இதன் போது ஆராயாடப்பட்டது.

இதில், மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (த - 21)

# அனுமதி ஏதுமின்றி ஆயிரக்கணக்கான பனைகள் அழிப்பு

### நீராவிப்பிட்டி தனியார் காணியில்





முல்லைத்தீவு, மார்ச் 31

முள்ளியவளை, நீரவிப்பிட்டியில் பிரதான வீதிக்கு அருகேயுள்ள தனியாருக்கு சொந்தமான சுமார் 5 ஏக்கர் நிலப்பரப்பில் நின்றிருந்த ஆயிரக்கணக்கான பனை மரங்கள் கனரக வாகனத்தின் மூலம் அழிக்கப்பட்டுக் அபிவிருத்தி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பனை மரங்களை அழிப்பதற்கு உரிய அதிகாரிகளிடம் முறையான அனுமதி எதுவும் பெற்றுக்கொள்ளப்படவில்லை எனத் தெரியவருகின்றது

சாதாரணமாக வீட்டில் நிற்கும் ஒரு பனை மரத்தை அந்த வீட்டின் உரிமையாளர் தனது வீட்டுத் தேவைக்கு தறிப்பதானால்கூட அந்தப் பகுதிக் கிராம உத்தியோகத்தரிடம் அனுமதிக்காக ஒப்பம் பெறவேண்டும். அதன் பின்னர் பிரதேச செயலாளரிடம் ஒப்பம் பெறப்படவேண்டும். இறுதியாகப் பனை அபிவிருத்திச் சபையிடம் அனுமதி பெற்றுக்கொண்ட பின்னரே பனையைத் தறித்துக்கொள்ள முடியும்.

இவ்வாறிருக்கையில் எந்தவொரு அனுமதியும் பெற்றுக்கொள்ளாமல் பெருந்தொகையான பனை மரங்களை அழித்தமை குறித்து அப்பகுதி மக்கள் ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளனர்.

இந்த நடவடிக்கை அரசியல்வாதி ஒருவரின் செல்வாக்கில் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகின்றது. சாதாரண பாமரனுக்கு ஒரு நடைமுறை. செல்வாக்கு மிக்கவர்களுக்குப் பிறிதொரு நடைமுறையா என அப்பகுதி மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

'பனை மரங்களைத் தேவைக்காக வெட்டும்போது முறைப்படி அனுமதிகள் பெறப்படவேண்டும். பனை வளம் பாதுகாக்கப்பட வேண்டியது. அதனை அனுமதி இல்லாமல் வகைதொகையாக அழிப்பது யாராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. பனை மரங்களை தறிக்கும் போது அனுமதிகள் உள்ளதா எனப் பொலிஸார் சோதனை மேற்கொள்ள வேண்டும். நீராவிப்பிட்டியில் இவ்வாறு அதிமாகப் பனைகள் அழிக்கப்படும் போது பொலிஸார் நடவடிக்கை எடுக்காதது ஏன் எனத் தெரியவில்லை. இது தொடர்பாகப் பொலிஸாருடன் இணைந்து நடடிவக்கை எடுக்கப்படும்" என முல்லைத்தீவு மாவட்ட பனை அபிவிருத்திச்சபை பிரதேச முகாமையாளர் எம். சிறிதரன் தெரிவித்தார். (த - 7,102)

## "உள்ளத் தூய்மையே இறையாசீர் பெறுவதற்கான நிபந்தனை"

இயேசுவின் பணிக்காலத்தில் அவர் சமாரியாவில் உள்ள சிக்கார் என்றும் ஊரில் இருந்த கிணற்றுக்குத் தண்ணீர் மொள்ள வந்த பெண்ணி டம் வாழ்வு தரும் தண்ணீர் பற்றி உரையாடியபோது, அப்பெண்ணும் மிகுந்த ஆவலுடன் அவரை நோக்கி, வெறும் உலகியல் கண்ணோட்டத்துடன், "ஐயா! அத்தண்ணீரை எனக்குக் கொடும்; அப்போது எனக்குத் தாகமும் எடுக்காது. தண்ணீர் மொள்ள நான் இங்கு வரத் தேவையும் இருக்காது. (யோவா 4:15) என்றார். ஆனால் இயேசு கூறியதோ தூய ஆவியாகிய வாழ்வு தரும். உள்ளத்தைப் புதுப்பிக்கும் தண்ணீரைப் பற்றியதே. ஆகவே இயேசு அப்பெண்ணின் மனநிலையை வாழ்வியல் உண்மைகளை உணர்ந்தவராய், அத் தண்ணீரை அவளுக்குக் கொடுப்பதற்கு முன்பு அப்பெண்ணில் உள்ள உள்ளத் தூய்மையற்ற நிலையைச் சுட்டிக்காட்டி, உண்மையான பாவ அறிக்கை செய்ய வைக்கின்றார். சமாரியப் பெண்ணாலும், "உண்மையாகிய" இயேசுவை முன்பாக வைத்துக் கொண்டு ஏமாற்ற முடியவில்லை. தனது பகிரங்கமான பாவ வாழ்வை முழுமையாக அறிக்கை இடுகின்றார். அவ்வேளையில் அவளது உள்ளம் வெறுமையாகித் தூய்மை பெறுகின்றது. முற்றிலும் தனது உள்ளத்தைப் பரிசுத்தமாக்குகின்றார்.

இவ்வேளையில் தான் தூய ஆவியாகிய வாழ்வு தரும் தண்ணீர், அதாவது கடவுளின் நிபந்தனையற்ற அன்பு தன் உள்ளத்தில் பொழியப்படுவதை உணர்ந்தாள். தனது மக்களிடமே இயேசுவை அறிவிக்க நற்செய்தியின் தூதுவராக இயேசுவால் அனுப்பப்படுகின்றாள். தான் பெற்ற மீட்பை மூடிவைக்க அவளால் முடிய வில்லை. நிலை வாழ்வை வெளிப்படுத்தும் கருவியாகின்றாள்.

கடவுளையே பரிசோதனைக் குழாயில் போட்டு ஆய்வு செய்யத் துடிக்கும் இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி கண்ட உலகம் தனிமனித ஆராதனையின் மையமாகத் திகழ்கின்றது. அனைத்துத் துறைகளிலும் தனிமனித, குழும, சாதனைகள் போற்றப்படுவதால்,



இறை மகிமைக்குப் பதிலாக மனிதர்கள் மகிமைப்படுத்தப்பட்டு மனிதன் தன்னை உலகின் தலைவனாக எண்ணி இறை சக்தியைப் புறந்தள்ளி வாழ்கின்றான். இதனால் அவனது உள்ளம் பாவ இருளினால் சூழப்பட்டு உண்மைத் தன்மையை உணர முடியாமலும், அதனை வெளிப்படுத்த முடியாமலும் தவிக்கின்றான். இந்த நிலையிலிருந்து விடுபட எமது உண்மைத் தன்மைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, உள்ளத் தூய்மை பெற்றிட முழுமையான பாவ அறிக்கை செய்து ஆன்ம வாழ்வுக்கு நிறைவு அளிக்கும் வாழ்வு தரும் இறையன்பென்னும் ஊற்றில் பருக இத் தவக்காலத்தைத் தகுதி ஆக்குவோம்.

*அருட்பணி சி.யே. அன்ரனி பாலா*

கிளிநொச்சி மாவட்டத்தில்

## டெங்கு ஒழிப்புக்காக 1,839 வீடுகள் தரிசிப்பு

டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு 2 நாள்களும் இடம்பெற்ற இல்லத் தரிசிப்புக்களில் 1,839 வீடுகள் பார்வையிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்டச் சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி மாவட்டச் சுகாதாரத் திணைக்களம் பொலிசாரின் உதவியுடன் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகளின்போது நுளம்புப் பெருக்கம் ஏற்படக்கூடும் எனக் கருதப்பட்ட 1839 இடங்கள் இனம் கானப்பட்டன. இவ்வாறு இனம் கானப்பட்ட பகுதிகளில் 1255 இடங்கள் பார்வையிடப்பட்டதோடு இவற்றில் 292 இடங்கள் சீர் செய்யப்பட்டதுடன் 134 இடங்க ளுக்குச் சிவப்பு அறிவித்தல் விநி யோகிக்கப்பட்டது. மாவட்டத்தின் 19 பாடசாலைக்ளும் , 55 அரச திணைக்களங்கள் , 61 தனியார் கல்வி நிலையங்கள் என்பனவும் பார்வையிடப்பட்டு அவை தொடர்பான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. (த - 101)

# மத ரீதியாகப் பிளவுபட்டால் மேலும் பின்தள்ளப்படுவோம்

### வடக்கு கிராமிய அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 31

நாம் மத ரீதியாக பிளவுபட்டுப் போவோமானால் இன்னும் பல ஆண்டுகளுக்குத் தமிழ் இனம் பின்தள்ளப்படும். விதைக்கப்பட்ட தியா கங்களுக்கு அர்த்தம் தேட முடியாதவர்களாக நாம் போய்விடுவோம் என வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வேலணை பிரதேச செயலகத்திற்குட்பட்ட அல்லைப்பிட்டிக் கிராமத்தில் அமைந்துள்ள புனித பிலிப்புநேரியார் ஆலய வளாகத்தில் புலம்பெயர் நோர்வே நாட்டு தமிழ் உறவுகளின் அமைப்பான கற்வோஸ் அமைப்பினால் பங்குத்தந்தையின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் கடந்த 6 மாதங்களாக நடத்தப்பட்ட மகளிருக்கான தையல் பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும், தையல் உற்பத்திப்பொருள்களின் கண்காட்சியும் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 6.30 மணியளவில் ஆலய முன்றலில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார் என அமைச்சரது ஊடகப் பிரிவால் அனுப்பிவைப்பப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மக்களுக்கு நான் வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறவன். என்னால் நிறை வேற்றக்கூடியதை நான் வாக்குறுதியாக வழங்கி அவற்றை செய்துமுடித்துள்ளேன். அந்தவகையில் கடந்த ஆண்டு மண்டைதீவு பயணத்தின் போது அவர்களது வீதிக்கான கோரிக்கை என்னிடத்தில் வைக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது போக்குவரத்து தொடர்பாகவும் அங்கு ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு பங்குத்தந்தை மற்றும் கிராம மக்களுக்கு நான் அவற்றைச் செய்துதருவேன் என்று வாக்குறுதி வழங்கியிருந்தேன். அதே போல அவற்றை நிறைவேற்றியுள்ளேன். ஆகவே இன்று நீங்கள் கேட்டுக்கொண்டதற்கு அமைவாக மண்டைதீவு - அல்லைப்பிட்டி இணைப்பு வீதிக்கான ஆரம்பப் பணிகள் இந்த ஆண்டு ஆரம்பிக்கப்படும். அத்தோடு அல்லைப்பிட்டி அல்லது மண்டைதீவில் உள்ள ஒரு பாடசாலையைக் கல்வி அமைச்சருடன் தொடர்பு கொண்டு உயர்தரம் வரை தரமுயர்த்தச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வேன்.

கிராமத்தில் ஏதேனும் நிலையான வருமானம் பெறக்கூடிய ஒரு சுயதொழில் முயற்சிக்கான திட்ட முன்வரைவினை எனக்கு சமர்ப்பியுங்கள். எதிர்வரும் ஆண்டு அல்லைப்பிட்டிக் கிராமத்திற்கு 03 மில்லியன் நிதியை ஒதுக்கித் தருகிறேன், அத்தோடு எனது நிதியில் இருந்து அடுத்த ஆண்டு அல்லைப்பிட்டி தேவாலயத்திற்கும், சாட்டி தேவாலயத்திற்கும், இந்து ஆலயம் இருக்குமாயின் அதற்கும் தலா ஒரு இலட்சம் வழங்க நான் தயாராகவுள்ளேன். காரணம் மதங்களுக்கிடையில் ஒற்றுமை பெருகவேண்டும் என்ற ஓர் எண்ணத்துடனேயே இதனைச் செய்கின்றேன்.

அபிவிருத்தி என்பது இன்று இல்லாவிட்டாலும் நாளை அடைந்து கொள்ளமுடியும். ஆனால் நாம் மதரீதியாகப்பிளவுபட்டுபோவோமானால்இன்னும் பல ஆண்டுகளுக்கு நமது தமிழ் இனம் பின்தள்ளப்படும் என்று கூறினார்என்றுள்ளது. (த - 21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஈழத்தின் கலைக்கோயில் எனப்போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவின் கொடியேற்றத் திருவிழா நேற்று வியாழக்கிழமை பெருமளவு பக்தர்களின் பங்கேற்றலுடன் இடம்பெற்றது. (ஐ - 40)

# பட்டதாரிகள் இன்று சுட்டியேந்திப் போராட்டம்

## நேற்றைய கவனவீர்ப்பைத் தொடர்ந்து முடிவு












வவுனியா, மார்ச் 31

கடந்த 32 நாள்களாக காலவரையற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தைமுன்னெடுத்து வரும், வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று சத்தியப் பிரமாணம் மற்றும் அறப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வடக்கு மாகாணம் தழுவியதாக 5 மாவட்ட செயலகங்கள் முன்பாக வேலையற்ற பட்டதாரிகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணத்தில், யாழ் மாவட்ட செயலகத்தின் முன்பாக வீதியின் இருபுறமும் இருந்து தமது சத்தியப் பிரமாணத்தை வேலையற்ற பட்டதாரிகள் செய்து கொண்டனர். இதன் தொடர்ச்சியாக இன்றைய தினம் கைகளில் சுட்டி விளக்கை ஏந்திய வண்ணம் தமது "வாழ்க்கைக்கு ஒளி ஏற்றுங்கள்" எனும் பொருளில் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவைச் சேர்ந்த பட்டதாரிகள், வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள பிரதான பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று போராட்டத்தை ஆரம்பித்தனர். சில மணி நேரங்களில் அவர்கள் அங்கிருந்து வவுனியா கடை வீதி வழியாக ஊர்வலமாகச் சென்று, வவுனியா மாவட்ட செயலகத்தை அடைந்தனர். மாவட்ட செயலகத்துக்கு முன்னால் போராட்டம் தொடர்ந்தது. போராட்டத்தின் இறுதியில் உதவி மாவட்டச் செயலாளர் நா.கமலதாசனிடம் மனுவைக் கையளித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டதில் உள்ள பட்டதாரிகள் நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். போராட்டத்தின் இறுதியில் அரச தலைவர், தலைமை அமைச்சகளுக்கான மனுவை முல்லைத்தீவு மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளரிடம் கையளித்தனர்.

மன்னார் மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டத்தை ஆரம்பித்தனர். போராட்டத்தில் கலந்து கொண்ட பட்டதாரிகள், பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் வீதியில் அமர்ந்து போராட்டத்தை முன்னெடுத்தனர். தமது பிரச்சினைகள் தொடர்பாக மனுக்களை அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோருக்கு தபால் மூலம் அனுப்பி வைத்தனர்.

கிளிநொச்சியில், கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன் பட்டதாரிகள் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன் போது அரச தலைவருக்குக் கிடைக்கும் வகையில் மனு ஒன்றும் மாவட்ட செயலகத்தில் கையளித்தனர். (ஐ - 21,35,7)

## முள்ளிக்குளத்தில் கவனவீர்ப்பு 8 ஆவது நாளையும் கடந்தது

மன்னார், மார்ச் 31

முள்ளிக்குளம் கிராம மக்கள் தமது பூர்வீக நிலங்களைக் கடற்படையினரிடம் இருந்து மீட்பதற்காக முன்னெடுத்து வரும் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று வியாழக்கிழமை 8 ஆவது நாளாகவும் தொடர்ந்து.

"மாவட்டத்தில் உள்ள அரச உயர் அதிகாரிகள் எமது போராட்டம் தொடர்பில் எவ்வித அக்கறையுமின்றி, அசமந்த போக்குடன் செயற்படுகின்றனர்" இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் விசனம் தெரிவித்தனர்.

தமது பூர்வீக நிலங்களில் நிலை கொண்டுள்ள கடற்படையினரை வெளியேற்றக் கோரி முசலி பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்கள் முன்னெடுத்து வருகின்ற கவனவீர்ப்பு போராட்டம் நேற்று வியாழக்கிழமை 8 ஆவது நாளாகவும் இடம் பெற்றது. குறித்த உரிமைப் போராட்டத்துக்குப் பல்வேறு மட்டங்களில் இருந்து ஆதரவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. போராட்டத்துக்குப் பொது அமைப்புக்கள்,சிவில் அமைப்புக்கள், அருட்தந்தையர்கள்,மீனவ அமைப்புக்களின் பிரதி நிதிகள்,தொண்டு அமைப்புக்களின் பிரதி நிதிகள்,வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வருகின்றனர். சிவன் அறக்கட்டளையின் இயக்குனர் நேற்று போராட்ட களத்துக்குச் சென்று மக்களுக்கு ஆதரவு தெரிவித்தார்.

எனினும் தமது போராட்டம் குறித்து மாவட்டத்தில் உள்ள உயர் அதிகாரிகள் இது வரை எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்த முள்ளிக்குளம் மக்கள், இன்னும் எத்தனை நாள்களாக இருந்தாலும் தமது நிலம் மீட்கப்படும் வரை போராட்டம் தொடரும் எனத் தெரிவித்தனர். (ஐ - 21)



பாதுகாப்பு வனப்பகுதி விவகாரம்

## மன்னார் முஸ்லிம் மக்கள் சுழற்சி முறையில் போராட்டம்

மன்னார், மார்ச் 31

வில்பத்து சரணாலயம் அமைந்துள்ள மன்னார் முசலிப் பிரதேசம் பாதுகாப்பு வனப்பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டு, அரச தலைவரால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவிப்பை மீளப் பெற வேண்டும் எனத் தெரிவித்து மன்னார் பிரதேச முஸ்லிம் மக்கள் சுழற்சி முறையிலான போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

கரடிக்குழி, மறிச்சுக்கட்டி, பாலைக்குழி ஆகிய பிரதேசங்களில் மக்கள் நேற்று 3 ஆவது நாளாகவும் உணவு ஒறுப்பில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்துக்கு சிலாபத்துறை வர்த்தக கொண்டச்சி பள்ளிவாசல் நிர்வாகம் உட்பட முசலிப் பிரதேசத்திலுள்ள சகல பள்ளிவாசல்களும் ஆதரவு தெரிவித்துள்ளன. மேலும் சுழற்சி முறையிலான இந்தப் போராட்டத்தின் ஓரங்கமாக இன்று வெள்ளிக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றும் நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை வில்பத்து சரணாலயத்தைச் சூழவுள்ள, வனப் பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான வனப் பகுதிகளை ஒன்றிணைத்து பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக அறிவிப்பதற்கான வர்த்தமானி அறிவிப்பில் அரச தலைவர் கடந்த வாரம் கையெழுத்திட்டார். (ஐ - 21)

## வடக்கு மாகாண இளைஞர்களுக்கே வேலை வாய்ப்புக்கு முன்னுரிமை

### பெற்றோலிய அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 31

யாழ்ப்பாணம் காங்கேசன்துறைப் பகுதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் வேலை வாய்ப்பு வெற்றிடங்களுக்கு, வடக்கு மாகாண இளைஞர் யுவதிகளுக்கே முன்னுரிமை அடிப்படையில் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும் என்று பெற்றோலிய அமைச்சர் சந்தீம வீரக்கொடி தெரிவித்தார்.

காங்கேசன்துறைப் பகுதியில் புதிதாக எரிபொருள் சேமிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கான பிரதேசத்தை பார்வையிடுவதற்காக அமைச்சர் நேற்று முன்தினம் வருகை தந்திருந்தார். அதன் போது ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அரசு, வேலைவாய்ப்பு விடயங்களிலும், அபிவிருத்தி விடயத்திலும் தென் பகுதியைப் போன்றே வடக்குப் பகுதியையும் சமமாகக் கருதி செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வட பகுதி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் ஒரு நடவடிக்கையாகவே இந்த எரிபொருள் சேமிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது. இந்தச்சேமிப்புநிலையத்துக்கு புகையிரதம் ஊடாக எரிபொருள்களை கொண்டு வந்து அதிகளவில் சேமிக்கவுள்ளோம். அதற்கான ஆளணிகளை வடக்கிலிருந்தே பெறுவதென தீர்மானித்துள்ளோம். இந்த அபிவிருத்தி நடவடிக்கையின் மூலம் வடக்குப் பகுதியினருக்கு எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் அனைத்து பதவி நிலைகளுக்கும் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும் - என்றார். (ஐ - 8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்காலத்தில் இலங்கையை கண்காணித்த இந்திய வானூர்தி

இந்தியக் கடற்படைத்தளபதி தகவல்



கொழும்பு, மார்ச் 31
இலங்கையில் விடுதலைப் புலிகளுடன் போர் நடந்து கொண்டிருந்த போது, இலங்கையைச் சுற்றிய வான்பரப்பில் ரியூ 142 எம் என்ற இந்தியக் கடற்படையின் நீண்ட தூர கடல்சார் கண்காணிப்புவானூர்தி, விரிவான கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது. இவ்வாறு இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா தெரிவித்தார்.
ஐஎன்எஸ் ராஜாளி தளத்தின் வெள்ளி விழா மற்றும் இந்தியக் கடற்படையால் 29 ஆண்டுகளாகக் கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்ட ரியூ 142 எம் விமானத்தை, சேவையில் இருந்து விலக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் அரக்கோணத்தில் உள்ள ஐஎன்எஸ் ராஜாளி தளத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
விடுதலைப் புலிகளுடன் போர் நடந்து கொண்டிருந்த போது, இலங்கையைச் சுற்றிய வான்பரப்பில் இந்தியக் கடற்படையின் நீண்ட தூர கடல்சார் கண்காணிப்பு வானூர்தியான ரியூ 142 எம், விரிவான கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தது. அரக்கோணத்தில் உள்ள இந்தியக் கடற்படையின் ராஜாளி தளத்தில் இருந்தே இந்த வானூர்தி கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தது. மாலைதீவில் ஒப்பரேசன் கக்டஸ் நடவடிக்கையிலும் இந்த வானூர்தி முக்கிய பங்காற்றியது. 2013ஆம் ஆண்டு தொடக்கம் இந்தியப் பெருங்கடலில் சீனா தனது நீர்மூழ்கிகளை நிறுத்தியுள்ளது. இந்தியப் பெருங்கடலில் நடமாடும் சீன நீர் மூழ்கிகளின் பாதைகளை இந்தியக் கடற்படை கண்டுபிடித்துக் கண்காணித்து வருகிறது-என்றார். (ஐ-4)

## அடுத்த அரச தலைவரும் மைத்திரிபால சிறிசேனவே

கொழும்பு, மார்ச் 31
"அடுத்த அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவே வெற்றி பெறுவார். கோத்தபாய ராஜபக்ச வெற்றி பெறுவதற்கு வாய்ப்பில்லை." இவ்வாறு மேல் மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவே வெற்றியீட்டுவார். அவர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மிகவும் விரும்பப்படும் ஒருவராக இருக்கிறார். அவரிடம் கோத்தபாய ராஜபக்சவிடம் இல்லாத அரசியல் ஆளுமையும், அனுபவமும் இருக்கின்றது. கோத்தபாய ராஜபக்ச திறமையான இராணுவ அதிகாரியாக இருக்கலாம். ஆனால், அரசியல் அனுபவம் அவருக்கு இல்லை. எனவே அரச தலைவராவதற்கு அவருக்குத் தகுதியில்லை. கடந்த தேர்தலில் தெற்கிலுள்ள வாக்குகள் பிரிந்து போயின. அதனால் எல்லா இனத்தவர்களாலும், மதத்தவர்களாலும் ஆதரிக்கப்படுபவர் தான் வெற்றி பெற முடியும். கோத்தபாய ராஜபக்சவால், வடக்கு கிழக்கிலுள்ள வாக்குகளைப் பெற முடியாது. கடந்த தேர்தலில் அதுவே மிகவும் முக்கியமான பங்கை வகித்திருந்தது. எனவே அடுத்த அரச தலைவர் தேர்தலில் கோத்தாபய ராஜபக்சவால், மைத்திரிபால சிறிசேனவுக்குச் சவாலாக இருக்க முடியாது-என்றார். (ஐ-4)

## இலங்கையில் 8 லட்சத்துக்கு மேற்பட்டோருக்கு மனநோய்

*மருத்துவ நிபுணர் நீல் பெர்னாண்டோ தகவல்*

கொழும்பு, மார்ச் 31
இலங்கையில் சுமார் 8 லட்சத்துக்கும் அதிகமானோர் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கொத்தலாவல பாதுகாப்புச் சேவைப் பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளரும் மனநோய் தொடர்பான சிறப்பு மருத்துவ நிபுணருமான மருத்துவர் நீல் பெர்னாண்டோ தெரிவித்தார், இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
மனநோயால் பாதிக்கப்பட்டுள்ள அதிகமானோர் சிசிக்சைகள் எதுவுமின்றி வாழ்ந்து வருகின்றனர். எம்மால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இது கண்டுபிடிக்கப்பட்டது.
மனஅழுத்தத்தின் காரணமாக ஏற்பட்டுள்ள இந்த மனநோய், இருதய அடைப்பு, புற்றுநோய், உறுப்புக்களின் செயலிழப்பு என்பவற்றுக்குக் காரணமாகவும் அமைகின்றன. அத்துடன், இது தற்கொலை செய்து கொள்வதற்கும் தூண்டுதலாக அமையும். 2020 ஆம் ஆண்டாகும் போது இந்த மனநோய் மேற்படி பெரும் நோய்களுக்கு ஆளாவதற்கு பிரதான காரணமாக விளங்கும்-என்றார். (ஐ)

## அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம்
# இறுதி முடிவு இன்று

கொழும்பு, மார்ச் 31
நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் சிறப்பு அமைச்சரவைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறவுள்ளது.
சர்ச்சைக்குரிய அம்பாந்தோட்டைத் துறைமுக விவகாரம் தொடர்பில் இறுதி முடிவொன்றை எடுப்பதற்காகவே இந்த அமைச்சரவைக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று அரச வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.
மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதும், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் உரிமம், பாதுகாப்பு ஆகியன குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.
இது முக்கியத்துவம் மிக்க விடயம் என்பதால், இந்த விடயம் பற்றி மட்டும் ஆராய்ந்து முடிவொன்றை எடுப்பதற்காகத் தனிநாளொன்று ஒதுக்குமாறு அதன் போது கோரப்பட்டது. அதன் பிரகாரமே இன்றைய கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
அம்பாந்தோட்டை துறைமுகத்தின் 80 வீதப் பங்குகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கும், அதனையொட்டியதாக, கைத்தொழில் வலயம் ஒன்றை அமைப்பதற்கும், சீன நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்துகொள்வதற்கு அரசு தீர்மானித்திருந்தது.
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் சீனப் பிரசன்னம் ஏற்படுவதை இந்தியா விரும்பவில்லை. அதனால் கொழும்புக்கு இராஜதந்திர மட்டத்தில் டில்லி அழுத்தங்களைப் பிரயோகித்தது. இதையடுத்து பாதுகாப்பு சார்ந்த விடயங்களில் சீனாவுக்கு எவ்வித உரிமத்தையும் வழங்காமல் இருப்பதற்கு அரசு கொள்கை ரீதியில் இணக்கம் வெளியிட்டிருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே காத்திரமானதொரு முடிவை எடுக்கும் நோக்கில் இன்று அமைச்சரவை கூடுகின்றது. (4)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சிதம்பரப்பிள்ளை மகேஸ்வரி
தோற்றம் 02.05.1941
மறைவு 10.04.2016
திதி: சதுர்த்தி (31.03.2017)

பத்துமாதம் சுமந்து பெற்றீர்! பகல் இரவாய் விழித்திருந்தீர்
பாரினிலே நாம் வாழ நல்ல பண்புதனை ஊட்டி நின்றீர்
பாசமழை பொழிந்து எமைப் பக்குவமாய் வளர்த்தெடுத்தீர்
ஏணியாய் நீர் இருந்தீர்! ஏற்றமுடன் நாம் வாழ
கலங்கரை விளக்காய் எமக்கு நல்வழி காட்டி நின்றீர்
அன்பாக அரவணைத்து அறிவுப் பால் ஊட்டி நின்றீர்
எம் வாழ்வின் இருள் அகற்றி ஒளிவிளக்காய் இருந்தீர்கள்
உங்கள் ஆத்மா இறைவன் திருவடிகளில் நிலைத்திருக்க
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாணிக்க வளவு,
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## உணவு ஒறுப்பை கைவிட்டார் விமல்

கொழும்பு, மார்ச் 28
வெலிக்கடைச் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தி வந்த மகிந்த அணியின் கொழும்பு மாவட்ட நாடளுமன்ற உறுப்பினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவன்ச, தனது போராட்டத்தைக் கைவிட்டுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்துள்ளார்.
விமலின் உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கைவிடுமாறு பௌத்த மதகுருமார் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவர் பால் அருந்தி உணவு ஒறுப்புப் போராட்டத்தை முடித்துக் கொண்டார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
பணமோசடிக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விமல், கடந்த 9 நாள்களாக உணவு ஒறுப்பில் ஈடுபட்டு வந்த நிலையில், நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## உறுப்பினர்களை நீக்க மத்திய வங்கி முடிவு

கொழும்பு, மார்ச் 31
பிணைமுறி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை வெளியாகும் வரை, மத்திய வங்கியின் பிணைமுறி ஏல விற்பனை கேள்விப்பத்திரக் குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் அதில் இருந்து நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் பீ.சமரசிறி தெரிவித்தார். திறைசேரி பிணைமுறி வழங்கல் தொடர்பாகச் சோதனை செய்யும் மற்றும் விசாரணை செய்யும் அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேற்று மூன்றாவது நாளாகவும் சாட்சியமளித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
மார்ச் மாதம் 20ம் திகதி நிதிக் குழு எடுத்த தீர்மானத்துக்கு அமைவாக, இந்த ஆணைக்குழுவின் அறிக்கை வெளியாகும் வரை, கேள்விப்பத்திரக் குழுவின் அனைத்து உறுப்பினர்களையும் அதில் இருந்து நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வெள்ளவாயவில் கைதான நால்வர் பிணையில் விடுவிப்பு

கொழும்பு,மார்ச் 31
சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த முன்னாள் பெண் போராளி, இராணுவ கோப்ரல் உள்ளிட்ட நால்வரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, வெள்ளவாயவுக்குக் கடந்த 13 ஆம் திகதி சென்றிருந்த போது, இந்த நால்வரும், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கடந்த 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் நால்வரையும் அன்றையதினம் வெள்ளவாய நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலைப்படுத்திய போது, நீதிவான் கேஷர சமரதிவாகர, தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில் விடுவித்தார். இதேவேளை, வழக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைத்துப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நால்வரில் ஒருவர் இராணுவ உறுப்பினரொருவரின் தாய் என்றும் மற்றையவர் முச்சக்கரவண்டிச் சாரதி என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் பெண் போராளி, 1998 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையிலும் புலிகள் அமைப்பின் சிறப்பு அதிரடிப்படையில் இணைக்கப்பட்டிருந்தார். அவர் 2009 ஆம் ஆண்டு, வவுனியா, பம்பைமடு புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு பெற்று, அங்கிருந்து 2010 ஆம் ஆண்டு வெளியேறியுள்ளார். இராணுவக்கோப்ரல், கிழக்கு மாகாணத்தில் உள்ள படைமுகாமில் இன்னும் சேவையில் ஈடுபடுகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். முன்னாள் பெண் போராளிக்குக் குழந்தை பிறந்துள்ளது. அது தொடர்பில் சட்ட ஆலோசனை பெறுவதற்காகச் சென்று கொண்டிருந்த போதே, 119 என்ற அவசர இலக்கத்துக்கு கிடைத்த தகவலையடுத்து இவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பலவந்தமாக மதமாற்றம் தடுக்கச் சட்டம் வேண்டும்

கொழும்பு,மார்ச் 31
பலவந்தமாக மதமாற்றம் செய்வதைத் தடுக்க சட்டம் கொண்டு வரப்படுவதனை விரும்புகின்றேன் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
கத்தோலிக்க பேராயர் சபையின் நிலைப்பாடு எனது நிலைப்பாட்டுக்கு முரணானதாக இருக்கலாம். சிங்கள மற்றும் கத்தோலிக்க மக்கள் நீண்ட காலமாக நல்லிணக்கத்துடனும், சகோதரத்துவத்துடனும் வாழ்ந்து வருகின்றார்கள். சில அடிப்படைவாதிகள் அதற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி வருகின்றனர். இந்த அடிப்படைவாதிகள் கத்தோலிக்கர்கள் அல்ல. எனவே, பலவந்த அடிப்படையில் மத மாற்றம் செய்யப்படுவதைத் தடுக்க சட்டமொன்று கொண்டு வரப்படுவதைத் தனிப்பட்ட ரீதியில் நான் எதிர்க்கவில்லை.என்றார். (ஐ)



## கிழக்கு மாகாணத்தில் காணிகள் இன்னமும் அரசு,படையினர் வசம்

### ஐ.நா. அதிகாரிகளிடம் கிழக்கு முதலமைச்சர் எடுத்துரைப்பு

மட்டக்களப்பு, மார்ச்31
கிழக்கு மாகாணத்தில் படையினர் மற்றும் அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை. தொல்பொருள் என்ற போர்வையில் மேலும் காணிகளைக் கையகப்படுத்துவதற்கே முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகளிடம் எடுத்துரைத்தார்.

ஐ.நா. சனத்தொகை நிதியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதிநிதி ரிட்ஸ நெக்கன் உட்பட்ட அதிகாரிகளை, கிழக்கு முதலமைச்சர் தனது அலுவலகத்தில் நேற்றுப் புதன்கிழமை சந்தித்த போதே அவர் இந்த விடயத்தை எடுத்துக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,
கிழக்கு மாகாணத்தில் பிரதானமாக போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல், மக்களின் வறுமை மற்றும் வேலையில்லாப் பிரச்சினைகளுக்கு பல்வேறு நெருக்கீடுகளைச் சந்தித்து வருகிறது. கிழக்கு மாகாணத்தில் பொதுவான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டாலும், தனிமனித வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. படித்து பட்டம் பெற்ற இளைஞர், யுவதிகள் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்த வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். என்றார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் குறிப்பிட்ட விடயங்களைச் செவிமடுத்த, ஐ.நா. பிரதிநிதி கிழக்கில் புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்கவும், மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பவும் தேவையான முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயார் எனவும், அதற்கான பேச்சுக்கள் எதிர்காலத்தில் கிழக்கு மாகாண சபையுடன் முன்னெடுக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (ஐ-ய-46)

## மாணவனின் வீட்டுக்கு இரவில் களவாகச் சென்ற வகுப்பாசிரியர்

### கையும் மெய்யுமாக பிடித்த கிராமமக்கள்

கொழும்பு,மார்ச் 31
மாணவனின் வீட்டுக்குள் இரவோடு, இரவாக நுழைந்த ஆசிரியர் ஒருவரைக் கையும் மெய்யுமாகப் பிடித்த கிராம மக்கள், அந்த ஆசிரியரைக் தாக்கி, பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இந்தச்சம்பவம், இங்கிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குறித்த மாணவனின், தந்தை இரவு நேரக் கடமைக்குச் சென்றதன் பின்னர், மாணவனின் வகுப்பாசியர், மாணவனின் வீட்டுக்கு, இரவோடு, இரவாக தினமும் சென்று வருவதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. மாணவனின் தந்தையார் இரவு கடமைக்குச் சென்றதன் பின்னர், அந்த வீட்டில், மகனும் அவருடைய தாய் மட்டுமே இருப்பர். அன்றைய தினமும் அவ்வாறே இடம்பெற்றது. கிராமவாசிகள் விளிப்பாக இருந்துள்ளனர். எனினும், அந்த ஆசிரியர் குறிப்பிட்ட வீட்டுக்குள் அன்றைய தினமும் களவாகச் சென்றுள்ளார். அதனைக் கண்ட கிராமவாசிகள், வீட்டுக்கு வெளியில் உள்ள கேற்றுக்குப் பூட்டுப்போட்டுவிட்டு, மாணவனின் தந்தைக்குத் தகவல் கொடுத்துள்ளனர். தந்தையார் வந்ததன் பின்னர், பொலிஸாருடன் வீட்டுக்குள் நுழைந்தனர். அங்கு ஆசிரியர் இருந்துள்ளார். அவரை தாக்கிய பின்னர், பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். 32 வயதான குறித்த ஆசிரியர், ஒரு பிள்ளையின் தந்தையெனத் தெரிவித்த இங்கிரிய பொலிஸார், இந்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## திருகோணமலையில் ஆர்ப்பாட்டங்களுக்கு தடை

திருமலை, மார்ச் 31
எதிர்வரும் நாள்களில் திருகோணமலையில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதற்கு திருகோணமலை நீதிமன்ற பிரதம நீதிவான் எம்.எச்.எம். ஹம்ஸா தடை உத்தரவு பிறப்பித்துள்ளார். திருகோணமலை தலைமையக பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.ஜயந்தவால் நேற்று முன்தினம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை அடுத்தே, இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை கிழக்கு ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால், வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தால் சமாதானமான முறையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தால் கடந்த 4ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் யொவுன்புர என்ற நிகழ்ச்சித் திட்டம் 4ஆம் திகதிவரை வரை நடைபெறுகிறது. இந்த நிகழ்வுக்காக பொது மக்களும், அரச உத்தியோகத்தர்களும், அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு அதிகாரிகளும் வருகை தரவுள்ளனர். எனவே, எதிர்வரும் நாள்களில் இந்த ஆர்ப்பாட்டங்களை தீவிரப்படுத்தும் முனைப்பு உள்ளதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்திருப்பதாகப் பொலிஸார் மன்றுக்குத் தெரிவித்தனர். இதனையடுத்து திருகோணமலை நீதிமன்றப் பிரதம நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா சமாதானத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் ஆர்ப்பாட்டங்களுக்கும், கவனயீர்ப்பு போராட்டங்களுக்கும் தடையுத்தரவைப் பிறப்பித்ததுடன் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அறிவுறுத்தல்களையும் வழங்கினார். (ஐய45)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அருணாசலம் கமலாகரன்
(ஓய்வுபெற்ற திட்டமிடல் உதவிக் கல்விப்பணிப்பாளர்- தீவகம்)

பிறப்பு 21.03.1947
இறப்பு 11.04.2016

ஆண்டொன்று மறைந்துவிட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ள வரை உங்கள்
நினைவுகள் தொடரும்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

[illegible]யடி,
காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைத் தாக்குதலில் 17 பொதுமக்கள் உயிரிழப்பு

## ஈராக்கில் அவலம்

பக்தாத், மார்ச் 31

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் உள்ள சோதனைச் சாவடியொன்றில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 17 பொதுமக்கள் சாவடைந்தனர்.

இராணுவச் சிப்பாய்கள் வாகனங்களைச் சோதனை செய்துகொண்டிருந்த போது காரில் வந்த ஆயுததாரியொருவர் நடத்திய தாக்குதலிலேயே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. சாவடைந்த 17 பேரைத் தவிர 60 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

நேற்று நண்பகல் வரை இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும், ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (ம)


கோப்புப் படம்

# நெடுவாசலில் போராட்டம் மீண்டும் ஆரம்பமாகலாம்

## சமூக வலைத்தளங்களும் ஊடகங்களும் கணிப்பு

சென்னை, மார்ச் 31

சென்னை - நெடுவாசல் கிராமத்தில் இயற்கை எரிவாயு எடுப்பதற்கு இந்திய மத்திய அரசு அனுமதி வழங்கியதை அடுத்து இந்தத் திட்டத்துக்கு எதிரான நெடுவாசல் கிராம மக்கள் மீண்டுமொரு போராட்டம் நடத்தக்கூடும் என்று சில இந்திய ஊடகங்களும் சமூக வலைத்தளங்களும் தெரிவிக்கின்றன.

நெடுவாசலில் இயற்கை எரிவாயு பெறும் திட்டத்தை எதிர்த்து நெடுவாசல் கிராம மக்கள் மட்டுமல்லாமல் ஏனைய பலரும் நெடுவாசல் கிராமத்திலும் ஏனைய இடங்களிலும் போராட்டங்களை நடத்தினர். தொடர்ந்துகொண்டிருந்த எதிர்ப்பால் இந்திய மத்திய அரசு இந்தத் திட்டத்தின் மட்டில் பின்வாங்கியது. இதனால் நெடுவாசல் மக்களும் தமது போராட்டத்தைத் தற்காலிகமாகக் கைவிட்டனர். நிலமை ஓரளவுக்கு இயல்பு நிலைக்குத் திரும்பியதும் இயற்கை எரிவாயு பெறும் திட்டத்துக்கு அவசர அவசரமாக அனுமதி வழங்கியது இந்திய மத்திய அரசு. இதனால் தற்போது நெடுவாசல் மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். நெடுவாசல் மக்களுக்கு ஆதரவாக தமிழக அரசியல் கட்சிகள் பலவும் குரல் கொடுத்துள்ளன.

பல்வேறு இடங்களில் சிறுசிறு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வாரத்துக்குள் நெடுவாசலில் மிகப்பெரும் போராட்டம் ஒன்று இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய, தனியார் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன்கள் அனைத்தையும் தள்ளுபடி செய்வது, வறட்சி நிவாரணம் வழங்குவதில் சிறு, குறு, பெரு விவசாயிகள் என வித்தியாசம் காட்டாமல் ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் ரூபாய் வீதம் அனைவருக்கும் வறட்சி நிவாரணம் வழங்குவது, விவசாயத் தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்குவது, காவிரி மேலாண்மை வாரியம் அமைத்தல், அண்டை மாநிலங்களிடமிருந்து தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நீர் உரிமைகளை நிலைநாட்டுவது, நெடுவாசலில் இயற்கை எரிவாயுத் திட்டத்துக்கு ஒப்பந்தம் போட்ட மத்திய அரசுக்கு கண்டனம், மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தமிழக விவசாயிகள் எதிர்வரும் 3ஆம் திகதி மிகப் பெரும் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

இந்தப் போராட்டத்துடன் இணைந்த முறையில் நெடுவாசல் போராட்டமும் ஆரம்பிக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)

# ட்ரம்ப் அல் அ... 3ஆம் திகதி ச...

## ஒபாமாவுடனான முறு... முடிவுறும் எனத் தகவ...

வொஷிங்டன், மார்ச் 31

அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் எகிப்து அதிபர் பட்டா அல் அசிசி இடையிலான சந்திப்பொன்று அடுத்த மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்று அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகை நேற்றுமுன்தினம் அறிவித்தது.

ட்ரம்ப் அதிபராகப் பொறுப்பேற்றதை அடுத்து, பலரும் அவரைவரிசையாகச் சந்தித்து வருகின்றனர். இந்த வரிசையில் அசிசி - ட்ரம்ப் இடையிலான சந்திப்பும் தற்போது சாத்தியமாகியுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா... சிக்கும் ... கடும்மோ... நிலவி வ... இந்தப் ... களுக்கு... வைத்து ... களுக்கும் ... நல்லுற... யெழுப்பு... இந்தச் சந்... யும் என்று... கிறது.

வளைகுட... வேரூன்... கியுள்ள ... அமைப்... அந்த பிரா... அமைதி... நாட்டுவது... இருநாட்... வர்களு... ஆலோச... வார்க... வெள்ளை... வட்டாரங்... வித்துள்ள...



# காணாமல் போன... மலைப்பாம்புக்கு ...

இந்தோனேசியாவில் காணாமல் போ... சாவடைந்த நிலையில் மலைப்பா... வயிற்றுக்குள் இருந்து மீட்கப்பட்டார் என... டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஞாயிறன்று சூலவேசி தீவில் அக்பர் என... இளைஞர் காணாமல் போனார். அவ... பணியில் ஈடுபட்ட போது மிகப்பெரி... மலைப்பாம்பொன்று அகப்பட்டுள்ளது. ... விழுங்கியிருக்கலாம் என்ற சந்தேக... வயிற்றை அறுத்துப் பார்த்த போது உ... சடலமாக இருந்தார் என்று பன்னாட்... தமது செய்திக் குறிப்பில் குறிப்பிட்டன.

# ஆஸ்திரேலியாவில் வெள்ளப்பெருக்கு

சிட்னி, மார்ச் 31

ஆஸ்திரேலியாவில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அங்கு தற்போது கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

பசுபிக் கடலில் மையம் கொண்டிருந்த டெபி என்று பெயரிடப்பட்ட புயல், குவீன்ஸ்லாந்தில் கோரத் தாண்டவத்தைக் காட்டிவிட்டுச் சென்றுள்ளது. இந்தப் புயலின் காரணமாக குயின்ஸ்லாந்தில் தற்போது தொடர்ச்சியாக மழை பெய்து வருகிறது. தொடர் மழை காரணமாக வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது.

2 ஆயிரம் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. அரச, தனியார் அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. ஆக்னஸ்என்ற இடத்தில் ஆறு உடைத்து நகருக்குள் புகுந்துள்ளது.

கிட்டத்தட்ட 60 ஆயிரம் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

புயலைத் தொடர்ந்து மழை பெய்துவருவதால் புயலில் இருந்து மீண்டு வருவதற்காக ஆரம்பிக்கப்பட்ட மீட்புப் பணிகள் தற்காலிகமாகக் கைவிடப்பட்டன என்றும் சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகும் அறிக்கை...

லண்டன், மார்ச் 31

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவதற்கான அறிக்கையில் பிரிட்டன் பிரதமர் திரேசா மே கையெழுத்திட்டுள்ள நிலையில், அந்த அறிக்கை ஐரோப்பிய ஒன்றியத்திடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டது.

ஐரோப்பியக் கண்டத்தில் உள்ள நாடுகள் தமது சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் என்ற அமைப்பைக் கடந்த 1993 ஆம் ஆண்டு உருவாக்கின. இந்த அமைப்பில் பிரிட்டன் முக்கிய அங்கம் வகித்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகள் மற்றைய நாடுகளுக்காகத் தமது எல்லைகளை எந்த நேரமும் திறந்து வைத்துள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளின் பிரஜைகள் அந்த அமைப்பில் உள்ள எந்த நாடுகளுக்கும் சென்று வாழலாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ல் அசிசி
## தி சந்திப்பு

ன முறுகல்கள்
த் தகவல்

ஒபாமாவுக்கும் அசிசிக்கும் இடையில் கடும் மோதல்போக்கு நிலவி வந்தது.

இந்தப் பிரச்சினைகளுக்குமுற்றுப்புள்ளி வைத்து இருநாடுகளுக்கும் இடையில் நல்லுறவைக் கட்டியெழுப்பும் வகையில் இந்தச் சந்திப்பு அமையும் என்று கருதப்படுகிறது.

வளைகுடா பகுதியில் வேரூன்றத்தொடங்கியுள்ள ஐ.எஸ். அமைப்பை ஒழித்து அந்த பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்டுவது தொடர்பாக இருநாட்டுத் தலைவர்களும் தீவிர ஆலோசனை நடத்துவார்கள் என வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)



பிலிப்பைன்ஸில் அந்த நாட்டு அதிபர் றொட்றிக்கோ டுடேர்தே, போதைப்பொருளுக்கு எதிராக நடும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். போதைப்பொருள் பாவனையாளர், விற்பனையாளர் அல்லது முகவர் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் சம்பவ இடத்திலேயே சுட்டுக்கொல்லப்படுகின்றனர். அவ்வாறு கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் சில உறவினர்களால் பொறுப்பேற்கப்படும் ஒளிப்படமே இது. (ம)

# சசிகலா தரப்பினர் சட்டசபையிலும் கட்சிப் பெயரை பயன்படுத்தலாகாது

## ஓ.பி.எஸ். தரப்பு போர்க்கொடி

சென்னை, மார்ச் 31 -
சசிகலா தரப்பினர் சட்டப்பேரவையிலும் அ.தி.மு. கழகத்தின் பெயரையோ அல்லது இரட்டை இலைச் சின்னத்தையோ பயப்படுத்தக்கூடாது என்று ஓ.பி.எஸ். தரப்பினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

ஜெயலலிதாவின் சாவுக்குப் பின்னர் தமிழகத்தில் அ.தி.மு. கழகத்தினர் ஓ.பி.எஸ். மற்றும் சசிகலா தலைமையில் இரு அணியாகச் செயற்பட்டு வருகின்றனர். இவர்கள் தமக்கே அ.தி.மு. கழகமும் இரட்டை இலையும் சொந்தம் என்று வாதிட்டு வருகின்றனர். ஆர்.கே. நகரில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இடைத்தேர்தலைக் கருத்திற் கொண்டு கட்சிப் பெயரையும் சின்னத்தையும் தேர்தல் பரப்புரைகளில் பயன்படுத்த இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. ஆனால், இந்தத் தடை தேர்தல் பரப்புரைகளில் மட்டுமல்லாமல் சட்டப்பேரவைக்குள்ளும் இருக்க வேண்டும் என்று ஓ.பி.எஸ். தரப்பினர் சபாநாயகரிடம் முறையிட்டுள்ளனர்.

## ஐ.எஸ். அமைப்பின் முக்கியஸ்தர்கள் அமெரிக்கத் தாக்குதலில் உயிரிழப்பு

பக்தாத், மார்ச் 31
ஈராக்கின் மோசூல் நகரில் அமெரிக்கப் படைகள் நடத்திய வான் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முக்கிய தலைவர்கள் மூவர் சாவடைந்தனர்.

ஈராக், சிரியா நாடுகளின் சிலபகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடாக அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான மோசூலும் இருந்தது. மோசூல் நகரின் கிழக்குப் பகுதி ஏற்கனவே மீட்கப்பட்டுவிட்ட நிலையில் மேற்குப் பகுதிக்கான போர் கடந்த பெப்ரவரி மாதம் மத்திய பகுதியில் ஆரம்பித்துத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.


ஈராக் படைக்கு அமெரிக்கா பெரும் ஆதரவை வழங்கி வருகிறது. மட்டுமல்லாமல் அடிக்கடி வான் தாக்குதல்களிலும் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது. அவ்வாறு நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட வான்தாக்குதலில் ஐஎஸ். ஐ.எஸ். அமைப்பின் முக்கிய தலைவர்களான யலாத் நினிவா அகமது மாசன், இப்ராகிம் அல் சாபி, முகமது அப்தெல் ரகுமான் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அல் பக்தாதியும் மேற்கு மோசூலிலேயே உள்ளார் என்றும் அவர் சுற்றிவளைக்கப்பட் டுள்ளார் என்றும் ஈராக் அரச படை அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



## போன நபர்
## புக்கு இரை

காணாமல் போன ஒருவர்
மலைப்பாம்பு ஒன்றின்
கப்பட்டார் என பன்னாட்
ளியிட்டன.
வில் அக்பர் என்ற 25 வயது
போனார். அவரைத் தேடும்
து மிகப்பெரிய வயிறுடன்
ப்பட்டுள்ளது. பாம்பு அக்பரை
ன்ற சந்தேகத்தில் அதன்
த்த போது உள்ளே அக்பர்
று பன்னாட்டு ஊடகங்கள்
றிப்பிட்டன. (ம)





# 48 கோடி ஆண்டுகள் பழைமையான மூன்றடுக்குப் புதைபடிவம் ஜேர்மனில்

## பாம்பு, பல்லி, வண்டு என அது அமைந்தது

பேர்லின், மார்ச் 31
எரிமலையொன்றில் 48 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் புதையுண்டு போன பாம்பின் புதை படிவத்தை ஜேர்மன் பிராங்பட் நிறுவனத்தின் ஆராய்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பாம்பின் வயிற்றில் பல்லி, பல்லியின் வயிற்றில் வண்டு என்று மூன்றடுக்குப் படிவமாக அது அமைந்துள்ளதால் விஞ்ஞான உலகம் அதிர்ச்சியடைந்துள்ளது.

இந்த அதிசயப் புதைபடிவத்தை ஜெர்மனியின் பிராங்பட் நகரின் அருகில் உள்ள மெஸ்ஸல் பிட் பகுதியிலிருந்து ஆய்வாளர்கள் கண்டெடுத்திருக்கிறார்கள். பொதுவாக விலங்குப் புதைபடிவங்களுக்குள் உணவைக் காண்பது அரிது. ஆனால் மெஸ்ஸல் பகுதியில் காணப்படும் தனித்துவமான பதனப்படுத்தும் தன்மையால், ஏற்கெனவே இதுபோன்று ஏராளமான பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. காலத்தைக் கணிக்க முடியாத அளவுக்கு எண்ணற்ற ஆண்டுகளுக்கு முன்னால் புதையுண்டு போன குதிரையின் வயிற்றில் திராட்சையும் இலைகளும், பறவையின் குடலில் மகரந்தம், புதைபடிவமாகிப்போன மீனின் வயிற்றுக்குள் பூச்சிகள் இப்படிப் பலவற்றை பிராங்பர்ட் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் கண்டெடுத்துள்ளனர். ஆனால் மூன்று அடுக்கில் புதைபடிவமாகிப் போன உணவுச் சங்கிலியைக் கண்டுபிடித்திருப்பது வரலாற்றில் இதுவே முதல் முறை.

3.4 அடி நீளமான பாம்பின் உடம்புக்குள் 20 சென்ரிமீற்றர் நீளமுள்ள பல்லி காணப்படுகிறது. அதுவும் அந்தப் பாம்பின் எலும்புக் கூட்டுக்குள்ளேயே இந்தப் பல்லி படிவமாகிக் கிடப்பதால், அதை நிச்சயமாகப் பாம்புதான் விழுங்கியிருக்க வேண்டும் என்பது உறுதியாகிறது.

அதிலும் பல்லியின் வயிற்றில் வண்டைக் கண்டதன் மூலம் ஒரு புதிய நிலைப்பாட்டை எட்டியிருக்கிறார்கள். இதற்கு முன்னால் கிடைத்த பல்லியின் புதை படிவங்களுக்குள் தாவரங்களின் மிச்சம் மட்டுமே இருந்திருக்கிறது. ஆனால் இப்போது இந்தப் பல்லியின் வயிற்றில் வண்டு இருப்பதால், கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே பல்லிகள் தாவரங்களை மட்டுமல்லாமல் பூச்சிகளையும் உண்டுவந்திருப்பது இதன் மூலமாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. இப்படிப் பல வரலாற்று மர்ம முடிச்சுக்களை அவிழ்த்துள்ளது இந்த அபூர்வமான புதைபடிவம். (ம)

## ...றிக்கையை ஒப்படைத்தது பிரிட்டன்



கல்வி கற்கலாம், தொழில் வாய்ப்பைப் பெறலாம். இதனால் பிரிட்டனின் தொழில் வாய்ப்பை ஏனைய நாட்டுமக்கள் சுரண்டுகின்றனர் என்று கருதப்பட்டது.

இதனால் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலக வேண்டும் என்ற அழுத்தங்கள் வலுப்பெற்று கடந்த வருடம் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது. பெரும்பாலான மக்கள் விலகிச்செல்ல வேண்டும் என்றே வாக்களித்தனர்.

இதனால், பிரிந்து செல்வதற்கான சட்டநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. ராணி எலிசபெத்தும் அதற்கு அனுமதி வழங்கியுள்ளார். பிரிட்டன் பிரதமர் திரேசா மே அதற்குரிய அறிக்கையில் கையொப்பம் வழங்கியதை அடுத்து அந்த அறிக்கை தற்போது ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிந்துரைகளுக்கு மாறான விதத்தில் செயற்பட்டோருக்கு எதிராக நடவடிக்கை



"இலங்கை மக்களின் பிரதான மதிய உணவாக அமைந்துள்ள சோறுக்கான அரிசியின் தேவைப்பாடு என்பது ஒரு மாத காலப்பகுதிக்கு ஒரு லட்சத்து 90 ஆயிரம் மெற்றிக் தொன்களாக அளவீடு செய்யப்பட்டுள்ளது. இந்த அரிசியை உற்பத்தி செய்வதற்கு வருடாந்தம் 3 லட்சம் மெற்றிக் தொன்களுக்கும் மேற்பட்டதான நெல் தேவைப்படுகின்றது.

## நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன கருத்துரைப்பு

நிதி அமைச்சின் பரிந்துரைகளுக்குமாறாகநெல்விநியோகத்தில் ஈடுபட்ட அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதான கருத்து நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மத்தல விமான நிலைய வளாகத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததான நெல் டபிள்யூ.எம். மென்டிஸ்மதுபானஉற்பத்தி நிறுவனத்துக்கு விநியோகிக்கப்பட்டமைகுறித்துகருத்துத் தெரிவிக்கும்போதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அவர் மேலும் கருத்துக்கூறுகையில்:

"நெல்லைகளஞ்சியப்படுத்தி வைப்பதில் இருந்துவந்த பிரச்சினைக்குதீர்வாக2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் மத்தல விமான நிலைய களஞ்சியசாலைகளில் நெல்லை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு அரசு தீர்மானித்தது.

ஒரு வருடம் கடந்த நிலையிலே2016ஆண்டுஜனவரி மாதமளவில் 2015/2016 ஆண்டுக்குரித்தான பெரும்போகஅறுவடைமேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அவசர அவசரமாக களஞ்சியசாலைகளை வெற்றிடமாக்குவதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டது.

இதன் மூலம் புதிய வருடத்தின்நெல்கொள்வனவுநடவடிக்கைகளுக்கு நெல் சந்தைப்படுத்தல்சபைதயாராக இருக்கவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்6ஆம்திகதிகளஞ்சிய வசதிகளைபெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டு அந்த விடயங்கள் இடம்பெற்றன. குறிப்பாக அமைச்சரவைப் பத்திரங்களின் 47 ஆம் 48 ஆம்விடயங்களுக்காகஅன்றைய தினம் நடத்தப்பட்டதான அமைச்சரவைக் கூட்டத்தின் போது இது குறித்து ஆராயப்பட்டது.

அன்றிலிருந்து 8 நாள்கள் கடந்த நிலையில் 2016 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி மத்தல விமான நிலையக் கட்டடத்தொகுதியில்களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த நெல்லைடபிள்யூ.எம்.மென்டிஸ்மதுபானஉற்பத்திநிறுவனத்துக்கு விநியோகிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் சில மாதங்களின் பின்பாக நாட்டில் ஏற்பட்ட அரிசித் தட்டுப்பாடானது அரிசியை பன்னாடுகளிடம் இருந்து இறக்குமதிசெய்யவேண்டிய நிலைமைகளை ஏற்படுத்திவிட்டிருந்தது.

ஆனாலும் களஞ்சியசாலைகளில் இருந்த நெல்லை விநியோகிக்கும்போது நிதி அமைச்சின் ஆலோசனைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. அவை பின்பற்றப்பட்டிருந்தால் இத்தகைய தட்டுப்பாடு ஏற்பட்டிருக்காது" - என்றார்.

மேலும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்குரித்தான பெரும்போகமும் உள்ளடங்கலாக 2015 ஆம் ஆண்டுஉற்பத்திசெய்யப்பட்ட மொத்த நெல்லின் அளவு என்பது4.8மில்லியன்மெற்றிக்தொன்களாககாணப்படுகிறது.

தவிர, 2015 ஆம் ஆண்டுக்கான நிதி அமைச்சின் வருடாந்த அறிக்கையின் பிரகாரம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில்பெரும்போகத்தில்மட்டுமே2.9மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளது.

அதேபோன்று பெரும்போகத்தின் போது ஒரு லட்சத்து 60 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லையும் சிறு போகத்தின் போது ஒரு லட்சத்து 75 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லையும் நெல் சந்தைப்படுத்தல் சபை கொள்வனவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

# அதிக ஆற்றலை வெளிப்படுத்தும் செயற்கை சூரியன்

*ஜேர்மன் விஞ்ஞானிகள் வடிவமைப்பு*

தொழில்நுட்பத்தின் மிகையும் அறிவியலின் பெரும்பாகமும் இணைந்துகொண்டு பலதை உலகமயமாதலின் வெளியினுள் விதைத்தபடியே இருக்கிறது.

அந்தவகையிலே சூரியனை விடவும் 10 ஆயிரம் மடங்கு அதிகமான அதீத ஆற்றலை வெளிப்படுத்தும் செயற்கை சூரியனை ஜேர்மனிய விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.


குறிப்பாகஉலகின்மிகப்பெரியதானஇந்தசெயற்கைச் சூரியன் உயர் சக்தி வாய்ந்த விளக்குகளின் ஒருங்கிணைதல்மூலமாகஅதாவது 8இற்கு 8 அங்குலஅளவுடையதான(20X20சென்ரிமீற்றர்)உலோகத்தாள்மீது 350கிலோவாற்தேன்கூட்டுவடிவவரிசையில்விளக்குகளின் பொருந்துகை கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

149 சக்தி வாய்ந்த செனான் ஆர்க் மின்விளக்குகள் மூலம் உருவகம் பெற்றுள்ள இந்த ஒளி அமைப்பு 'சைன் லைட்' என அழைக்கப்படுகிறது. இவை சூரியனை விடவும் 10 ஆயிரம் மடங்கான கதிர்வீச்சின் உமிழ்தலை வெளிவிடுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த செயற்கை சூரிய அமைப்பானது 3 ஆயிரம் பாகை செல்சியஸ் வெப்பத்தை வெளித்தருகிறது. சோதனைமுயற்சியில் இருக்கும் இந்தப்புதியகண்டுபிடிப்பானது சூற்றுச்சூழலை பாதிக்காத ஓர் ஆற்றல் உற்பத்தி மையமாகவும், ஐதரசன் உற்பத்தியை அதிகரிக்கச்செய்யும்முயற்சியின்வடிவமாகவும்விளங்குவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தவிர இவற்றை விமானப் போக்குவரத்து மற்றும் ரொக்கெட் துறையில் பயன்படுத்த முடியும் என்று ஆய்வாளர்கள் கருத்துரைத்துள்ளனர்.

இதேபோன்றுசுவிஸ்மத்தியதொழில்நுட்பஆராய்ச்சியாளர்களும் செயற்கைச் சூரிய ஒளி பற்றியதான ஆய்வை மேற்கொண்டு வருகின்றமை நோக்கத்தக்கது.



# மீனவர்களுக்கு 'ரப்' கணினி வழங்கும் வேலைத்திட்டம்.

மீனவர்களுக்கு 'ரப்' கணினியை வழங்கும் வேலைத்திட்டம்விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அதற்கான நிதி அளிக்கையாக 149 மில்லியன் ரூபாபெறுமதியானதொகை மதிப்பீடுகள்ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு தெரிவித்துள்ளது. விசேடமாக இவை நீரில் விழுந்தாலும் பாதிப்படையாத வகையிலே தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மீன்பி டிப்பது தொடர்பிலானதகவல்களும்இவற்றுள் உள்ளடக்கப்பட்டுள்ளதான தகவல் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் பன்னாட்டுக் கடல் எல்லையில் இடம்பெறுவதான சட்டவிரோத நடவடிக்கைகளைதவிர்ப்பதே இதன் பிரதான நோக்கம் என்பது நோக்கத்தக்கது.



# வர்த்தக நடவடிக்கைகளுக்கு மத்திய வங்கியின் நிதிச் சபை கட்டுப்பாடு

*முறிகள் விநியோகம் குறித்து நடவடிக்கை*

மத்திய வங்கியின் முறிகள் விநியோகம்தொடர்பில்முன்வைக்கப்பட்டுள்ளதான குற்றச்சாட்டுகள்சார்ந்துபேர்ப்பச்சுவல் றஸ் ரீஸ் நிறுவனம் மற்றும் அதனுடன் தொடர்புபட்டதான இரண்டு நிறுவனங்களின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு மத்திய வங்கியின் நிதிச் சபை கட்டுப்பாடு விதித்துள்ளதாக கூறப்படுகிறது.

மத்தியவங்கியின் நிதிச்சபை விதித்துள்ள கட்டுப்பாடுகளை ஆட்சேபனைக்கு உட்படுத்தி குறித்த நிறுவனங்கள் தாக்கல் செய்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதேஇந்த விடயம் தெரிய வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தவிர, இதற்கு முன்பதாக சர்ச்சைக்குரிய முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தமது நிறுவனங்களின் கொடுக்கல் வாங்கல்களை மட்டுப்படுத்தும் வகையிலே மத்திய வங்கியின் நிதிச்சபையினால்கடந்தஆண்டுநவம்பர் மாதம் 07 ஆம் திகதி மேற்படிகட்டுப்பாடுகள்விதிக்கப்பட்டுள்ளதான தகவல் மனுவில் குறித்துக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இந்த மனுவிலே இலங்கைமத்தியவங்கியின் ஆளுநர் உள்ளிட்ட 13 பேர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் பேர்ப்பச்சுவல் றஸ் ரீஸ் நிறுவனம் மற்றும்அதனுடன்தொடர்புபட்டதான பேர்ப்பச்சுவல் எஸட் முகாமைத்துவதனியார்நிறுவனம்மற்றும்பேர்ப்பச்சுவல் கெபிட்டல் ஹோல்டிங் போன்றநிறுவனங்கள் இந்த மனுவைதாக்கல்செய்துள்ளதாகவும் தகவல் தெரிவிக்கப்படுகின்றது.

# லங்கா சதொச நிறுவனம் இலாபம் ஈட்டும் நிலையமாக மாற்றம்

லங்கா சதொச நிறுவனம் தற்போது இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றமடைந்துள்ளதான கருத்து கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிசாத் பதியூதீனால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றதான கலந்துரையாடல் நிகழ்வு ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், "அரசு ஆட்சியை பொறுப்பேற்கும் வேளையில் சதொச நிறுவனம் நட்டத்தில்இயங்கிக்கொண்டிருந்தது. இந்த நிறுவனத்தின் களஞ்சியசாலைகளில் காலாவதியானபொருள்கள்விநியோகச் செயற்பாடுகளின்றி தேங்கியிருந்தன. தவிர பல வருடங்களாக அவற்றுக்குரித்தான கணக்கு ஆவணங்கள் எவையும் பேணப்படவில்லை.

அதேபோன்று சதொச கிளை அலுவலகங்கள் முன் எப்போதும் வலயமைப்பாக இயங்கியிருக்கவில்லை.

ஆனாலும் தற்போது நாடு முழுமைக்குமாகபலகிளைஅலுவலகங்கள்அமைக்கப்பட்டுள்ளதுடன் அவை பலமான வலையமைப்பாக உருவாக்கப்பட்டு இயங்கு நிலைபெற்றுள்ளன.


தற்போதைய கூட்டு அரசானது இந்த விடயங்களைப் பொறுப்பேற்றதன் பின்னராக இலாபமீட்டும் நிறுவனமாக லங்கா சதொச மாற்றமடைந்துள்ளது.

இவற்றின் வினைத்திறனான செயற்பாடுகளுக்காக பன்னாட்டு ரீதியிலே அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடம் இருந்து ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.

இந்த வருட இறுதிக்குள் சதொச கிளைகளின் மொத்த எண்ணிக்கையானது 500ஆக அதிகரிக்கப்படும்" - எனத்தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவலயத்தில் உயர்ந்து வாழ வழிகாட்டும் குருவின் முக்கியத்துவம்



மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்

**குருபார்வை**
குருவின் பார்வையால் கோடி பாவங்கள் நிவர்த்தியாகும். குருவின் பார்வையால் கோடி நன்மைகள் உண்டாகும்.

**குருமகிமை**
தெய்வ அபராதம் செய்த ஒருவன் குருவைத் தஞ்சமடைந்தால் அவர் அவனைக் காப்பாற்றிவிடுவார். ஆனால் குருவுக்கு ஒருவன் அபராதம் செய்தால் பரமேஸ்வரனால் கூட அவனைக் காப்பாற்ற முடியாது.

**குருவின் மொழி**
உதிர்ந்து சிதறிய பூக்கள் ஒருநாரால் மாலையாகின்றன. அதுபோலவே சிதறிஓடும் எண்ணங்கள் ஓர் அருட்குருவின் மொழியால் இறைவன் மார்பில் மாலையாகத் திகழ்கின்றது.

**சிறந்த குரு**
ஞான மார்க்கத்தையோ, யோக மார்க்கத்தையோ, கர்மமார்க்கத்தையோ உபதேசிக்கும் குருக்களை விட பகவான்நாமகீர்த்தனங்களை உபதேசிக்கும் குருவே சிறந்தவராவார்.



முக்திக்குப் பாதை
வேதம் ஓதுதல், தவம் செய்தல், ஞானம் பெறுதல், இந்திரியங்களை அடக்குதல், அகிம்சையோடு வாழ்தல், குருசேவை செய்தல், இவையாவும் மோட்சத்துக்குச் சிறந்த காரணங்களாக அமைகின்றன.

**முக்திக்கு மூலம்**
தியானத்துக்கு மூலம் குருவின் வடிவம். பூஜைக்கு மூலம் குருவின் திருவடிகள். மந்திரத்துக்கு மூலம் குருவின் திருவாக்கியம். முக்திக்கு மூலம் குருவின் கிருபையே. குருவின் அருளால் தான் மனிதன் முழுமையாகின்றான்.

**ஞானகுரு**
ஒவ்வொருவருக்கும் மூன்று வகையான குருக்கள் அமைகின்றார்கள். முதலாவது பிறப்பை அளிக்கும் தந்தை, இரண்டாவதாக கல்வியையும், வித்தையையும் அளிக்கும் ஆசான், மூன்றாவதாக இவர்கள் இருவருக்கும் மேலாக ஞானத்தை வழங்கும் குரு அந்தக் குருவானவர் நானன்றி வேறில்லை.

**குருபக்தி**
நான்கு வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவராயினும் உடலெல்லாம் திருநீறு பூசி ஜபம் செய்பவராயினும் புண்ணிய தீர்த்தங்களாடி நோன்புகள் நோற்பவராயினும் நீண்ட ஜடாமுடிகளை வளர்த்திருப்பவராயினும் அவர்களுக்கு குருபக்தி இல்லையோ அவர்களுக்கு முக்தி இல்லை.

**குருவே மேலானவர்**
பிரம்மா, விஷ்ணு, சிவன் என்று சொல்லப்படும் தெய்வங்களெல்லாம் குருவே. அவரே பரம்பொருள். அவரது திருநாமங்களைத் தினமும் நாம சங்கீர்த்தனமாக சொல்வதனால் இறைசக்தி பெருகி விடுகின்றது.

**குருவின் பாதம்**
ஒருவனுக்கு உடல் நன்றாக இருக்கலாம், மனைவி அழகு பொருந்தியவளாக இருக்கலாம், புகழ் நேர்த்தியாகவும் பல்வேறு விதத்திலும் இருக்கலாம், செல்வம் மேருமலையைப் போல் ஓங்கி உயர்ந்து காட்சியளிக்கலாம், ஆனால் அவனது உள்ளம் குருவின் பாதக் கமலங்களில் இணைத்து இல்லாதிருந்தால் அவற்றால் யாருக்கு என்ன பயன்?

**சற்குரு**
சற்குருவின் அருளில்லாமல் பிறவிக் கடலைத் தாண்ட இயலாது. இறைவன் நாமம் என்ற அமிர்தத்தை எவர் பருகச் செய்வாரோ அவரே உண்மையான குரு. பரமாத்மாவைக் காட்டிக் கண்களின் கலிதீரச் செய்பவரும் தன்னைக் கண்டால் பரமாத்மாவைப் போலத் தோன்றுபவருமே சற்குரு தான்.
ஆண்டவனைப் பற்றாதே ஏனெனில் ஆண்டவன் நிதியும் நிலமும் தான் தருவான். ஆண்டவனின் அடியாரான குருவைப் பற்றிக் கொள். ஏனென்றால் அவர் ஆண்டவனையே உனக்குத் தருவார்.
இத்தகு மகத்துவச் சிறப்புக்களை வருவிப்பது குருதரிசனம். குருவில்லாவித்தைபாழ்" என்பார்கள். சிறுபராயத்திலிருந்து குருவை வணங்கி குருவிடமிருந்து உபதேசங்களைப் பெற வாழ்வாங்கு வாழ துணிவோமாக.

"சற்குருவின் அருளில்லாமல் பிறவிக் கடலைத் தாண்ட இயலாது. இறைவன் நாமம் என்ற அமிர்தத்தை எவர் பருகச் செய்வாரோ அவரே உண்மையான குரு. பரமாத்மாவைக் காட்டிக் கண்களின் கலிதீரச் செய்பவரும் தன்னைக் கண்டால் பரமாத்மாவைப் போலத் தோன்றுபவருமே சற்குரு தான். ஆண்டவனைப் பற்றாதே ஏனெனில் ஆண்டவன் நிதியும் நிலமும் தான் தருவான். ஆண்டவனின் அடியாரான குருவைப் பற்றிக் கொள். ஏனென்றால் அவர் ஆண்டவனையே உனக்குத் தருவார். இத்தகு மகத்துவச் சிறப்புக்களை வருவிப்பது குருதரிசனம். குருவில்லாவித்தைபாழ் என்பார்கள். சிறுபராயத்திலிருந்து குருவை வணங்கி குருவிடமிருந்து உபதேசங்களைப் பெற வாழ்வாங்கு வாழ துணிவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# நீதிக்கான போராட்டத்தில் அரசியல் ஆட்டம் வேண்டாம்

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான உறவில் ஆழமானவிரிசல்ஏற்பட்டுள்ளதாகத்தெரிகிறது. அண்மைக் காலமாக இரு தரப்பினரும் மாறிமாறித் தெரிவித்துவரும் கருத்துக்கள் இதனையே வெளிப்படுத்துகின்றன.

இந்த ஆழமான பிளவு, போர்க்குற்றங்களை விசாரிப்பது தொடர்பான கருத்து மோதலாக வெளிப்படுவதாகத் தெரிகிறது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தனக்கு முதுகெலும்பு உள்ளது என்பதால் படையினரைத் தண்டிப்பதற்கு அனுமதிக்க மாட்டேன் என்று தெரிவித்திருந்தார். அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் விசாரணையை எதிர்கொள்ளாமல் தவிர்ப்பதற்கு முதுகெலும்பு தேவையில்லை, விசாரணையை எதிர்கொள்வதற்குத்தான் முதுகெலும்பு தேவை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இதற்கு நேரடியாகப் பதிலளிக்காமல் விட்டாலும், நேற்று முன்தினம் குருநாகலில் பாதுகாப்பு சேவைக்கல்லூரியின் நிகழ்வில் வைத்து ஜனாதிபதி படையினரைத் தண்டிக்க இடமளிக்கமாட்டேன் என்று மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இந்தத் தடவை இன்னும் ஒருபடி மேலே போய், போர்க்குற்றச்சாட்டின் கீழ் எந்தவொரு படையினரையும் தண்டிக்க இடமளிக்கமாட்டேன் என்று அவர் கூறியிருக்கிறார்.

போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு அரச தலைவர் என்ற வகையில் தான் பொறுப்பேற்றாலும்கூட, எந்தவொரு படையினரையும்தண்டிப்பதற்குஅனுமதிக்கமாட்டேன்என்கிறார் அரச தலைவர். குற்றங்கள் குறித்த எந்தவித மயக்கமும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புபடாத சம்பவங்களில் படையினர் தொடர்புபட்டிருந்தால் அவர்களைக் காப்பாற்றப்போவதில்லை என்றும் கூறியுள்ளார்.

இதன்பொருள் நாட்டின் பாதுகாப்புக்காக நடத்தப்பட்ட இறுதிப் போரில் படையினரால் புரியப்பட்ட எந்தவொரு போர்க்குற்றத்துக்காகவும் விசாரணை நடைபெறாது என்பதும், அந்தக் குற்றங்களுக்காகப் படையினர்எவரும்தண்டிக்கப்படமாட்டார்கள் என்பதும்தான்.

போர்க்குற்ற விசாரணை மற்றும் தீர்வு உள்ளிட்ட விடயங்களில் உலகை ஏமாற்ற முயன்றால், அதன் விளைவுகளை அனுபவிக்க நேரிடும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் ஜனாதிபதியிடம் நேரில் அழுத்தமாகக் கூறியதற்குப் பின்னர்தான், எந்தவொரு படையினரையும் தண்டிக்க அனு மதிக்கமாட்டேன் என்று அரச தலைவர் திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

இதுதான் அரசதலைவருக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் ஆழமான பிளவு ஏற்பட்டுள்ளது என்பதற்கான வெளிப்பாடாக அமைகின்றது.

புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்குப் பொது வாக்கெடுப்பு ஒன்றுக்குச் செல்வதைக் கூட்டமைப்பு ஒரு நிபந்தனையாகவே வைத்து வருகிறது. பொது வாக்கெடுப்பு இல்லாமல் அரசமைப்புத் திருத்தம் ஒன்றின் மூலம் எதையாவது ஒன்றை ஒப்பேற்றிவிடுவதற்கு அரச தலைவரும் தலைமை அமைச்சரும் முன்னிற்கிறார்கள்.

பொதுவாக்கெடுப்பில் வெற்றிபெறவேண்டும் என்றால், சிங்களமக்களிடம் உள்ளசிங்களபௌத்த இனவாத அடிப்படை மனோநிலையைத் தகர்க்கக் கூட்டு அரசு பாடுபட வேண்டியிருக்கும். தெற்கு அரசியலில் இதுவொரு பெரும் சவால்மிக்க பணி.

இந்த விடயத்தில் கூட்டமைப்போ விடாப்பிடியாக நிற்கிறது. அதை அதன் நிலையில் இருந்து இறக்கத்தானோ என்னவோ, கூட்டமைப்புத் தொடர்ந்து வலியுறுத்திவரும் நிலைமாறு கால நீதி மற்றும் போர்க்குற்ற விசாரணை என்கிற விடயத்தில் அரச தலைவரும் படிப்படியாக இறுக்கமான நிராகரிப்பு நிலையை நோக்கி நகர்ந்து செல்கிறார்.

ஆனால், இந்த விடயம் ஒரு அரசியல் விளையாட்டல்ல என்பதை அரச தலைவர் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்கும் நீதியை, ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டிய நீதிக்காக அடமானம் வைக்கக்கேட்பது நியாயம்அல்ல. அதைப்புரிந்துகொண்டு தங்குதடையின்றி நீதியை நிலைநாட்ட அரச தலைவர் முன்வரவேண்டும்.




கட்டுரை

# மாற்றமடையும் உலக ஒழுங்கில் இலங்கையின் நிலை

சிவாசெல்லையா

இன்று உலக வல்லரசுகளில் ஒன்றான அமெரிக்காவுடன் போட்டியாக சீனாவும், ரஷ்யாவும் தத்தமது நலன்களை விஸ்தரிக்கும் போட்டியில் ஈடுபட்டு உள்ளன. சிரியாவில் ரஷ்யாவின் பிரசன்னம், ஐக்கிய அமெரிக்காவின் ஏக வல்லரசுத்தன்மையை இல்லாது செய்து உள்ளது. அடுத்து, தென்சீனக்கடலில் சீனாவின் ஆக்கிரமிப்பு, ஐக்கிய அமெரிக்காவுக்குப் பெரும் சவாலாக உருவாகியுள்ளது.

சிரியாவில் ரஷ்யா மேற்கொள்ளும் மிலேச்சத்தனமாக தாக்குதல்கள் உலக அடிப்படை மனிதஉரிமைகளையே ஆட்டம் காண வைத்துள்ளன. இத்தகைய சூழ்நிலையில் ரஷ்ய அதிபரிடம் இருந்து இலங்கையின் பண்டைய வரலாற்றுடன்தொடர்புபட்டவாளொன்றை அன்பளிப்பாகப் பெற்று வந்துள்ள இலங்கை அரசதலைவரால், ஈழத்தமிழ் மக்கள் இராஜதந்திர ரீதியாக பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். வன்னிப் படுகொலைகளுக்கு சிங்கமும் அதன் கையில் உள்ள வாளுமே காரணம் என அங்கலாய்க்கும் தமிழ் மக்களை, அச்சுறுத்த புட்டினும் இலங்கை அதிபருக்கு அந்த வரலாற்றுச் சின்னமான வாளைப் பரிசளித்து உள்ளார்.



## சீனாவுடன் நெருங்கிச் செயற்பட விளையும் இலங்கை

பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர ரீதியில் இலங்கை அரசு, அமெரிக்கா மற்றும் இந்தியாவுக்கு எதிரான அணியில் ஏற்கனவே சீனாவுடன் நெருக்கமான உறவுகளை கொண்டுள்ள நிலையில், அம்பாந்தோட்டை, கொழும்பு என்பவற்றை சீன முதலீட்டுக்கு வழங்கும்நிலையில், இந்தியாவினாலும், அமெரிக்காவினாலும் மேற்கொள்ளப்படும் இலாபகரமற்ற தலையீடுகளை தவிர்ப்பதற்கு ரஷ்யாவின் உதவியை நாடி உள்ளது.

இலங்கையில் பயன்படுத்தப்படும் ரஷ்யத் தயாரிப்பு உலங்குவானூர்திகளின் பராமரிப்புச் சேவை நிலையமொன்றை இலங்கையில் அமைப்பதற்கான யோசனையை இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ரஷ்யாவின் சமஷ்டி சேவை பிரதித் தலைவர் மிகெய்ல் பெருக்கோவ் முன்மொழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் நடைபெறும் லிமா2017 இராணுவக் கண்காட்சியில் பங்கேற்றுள்ள இராணுவ தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ரஷ்யாவின் சமஷ்டி சேவை பிரதித் தலைவர் மிகெய்ல் பெருக்கோவ் இது தொடர்பாகத் தகவல் வெளியிடுகையில், ஹெலிகொப்டர் பராமரிப்புச் சேவை நிலையமொன்றை அமைப்பதற்கான திட்டத்தையும், கவச வாகனங்களுக்கான உதிரிப் பாகங்களை வழங்குவதற்கான திட்டம் ஒன்றையும் தாம் இலங்கையிடம் பிரஸ்தாபித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## இலங்கை வசமுள்ள ரஷ்யாவின் இராணுவ வாகனங்கள்

இலங்கையில் ரஷ்யாவின் எம். ஐ 8, மற்றும் எம். ஐ17 போக்குவரத்துக் ஹெலிகொப்டர்கள் பன்னிரெண்டும், எம். ஐ24 பி தாக்குதல் ஹெலிகொப்டர்கள் ஆறும், மற்றும் 36, பி. எம். பி. காலாட்படை சண்டை வாகனங்கள் மற்றும் 50, பிரிஆர் 80 துருப்புக்காவி கவச வாகனங்கள் என்பனவும் தற்போது பயன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு ஜிபாட் 3.9 (Gepard 3.9) ரகத்தைச் சேர்ந்த போர்க் கப்பல்களை வழங்குவது தொடர்பான உடன்பாடு குறித்த பேச்சுக்கள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகரஷ்யாதெரிவித்துள்ளது. இலங்கைத் தரப்புடன் இணைந்து வரைபு உடன்பாடு தயாரிக்கப்பட்டு உள்ளது. சில தொழில்நுட்ப விவரங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் மாத்திரம் இறுதிக்கட்டத்தில் இருக்கின்றன என்று மிகெய்ல் பெருக்கோவ் தெரிவித்துள்ளார்.

ஜிபாட் 3.9 போர்க் கப்பல்கள், போர்க்காலத்தின் எதிரிகளின் விமானங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிகளை எதிர்த்துப் போரிடக்கூடியவை.

பாதுகாப்புவழங்கல், ரோந்துக் கடமைகள், தரையிறக்க நடவடிக்கைகளுக்கானசூட்டாதரவு, கண்ணிவெடிகளை விதைத்தல் போன்றவற்றில் இந்தக் கப்பல்களை ஈடுபடுத்த முடியும். வியட்னாமுக்கு இரண்டு ஜிபாட் 3.9 போர்க்கப்பல்களை 2011ஆம் ஆண்டு ரஷ்யா வழ்ங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களைக் கண்காணிக்கவும், இந்திய கடற்படை மோதல்களைத் தவிர்க்கவும் ரஷ்யக் கப்பல்களை இலங்கை கொள்வனவு செய்யவுள்ளது. மீனவர்கள், கள்ளக்கடத்தல்காரர் என இலங்கை அரசு இந்தியாவை ஏமாற்றினாலும், திருகோணமலையில் ரஷ்ய கடற்படைத்தளம் அமைவதற்கு உரிய சந்தர்ப்பம் மிகவும் அதிகமாக உள்ளது. மேலும் ரஷ்யாவின் உதவியுடன் உலங்குவானூர்திப் புனரமைப்பு நிலையம், ஆயுத தளபாட உற்பத்தி நிலையங்கள் அமைய உள்ளன.

## இலங்கைக்கு உதவ சீனாவும் ரஷ்யாவும் பின்னிற்கமாட்டா

முல்லைத்தீவு மாவட்டத்தைத் தீவிர சிங்களக் குடியேற்றமாக மாற்றும் நல்லிணக்க அரசு, சிறு வன்முறைகள் மூலம் தமிழரை மீளவும் அழிக்கத் தயாராகிவிட்டது என்பதே ரஷ்யாவால் அன்பளிக்கப்பட்ட வாளின் செய்தியாகும். போர்க்குற்ற விசாரணைகளை ஐ.நா. பாதுகாப்புச்சபையில் சீனாவும், ரஷ்யாவும் நிராகரிக்கும் நிலையே இன்னமும் இரு வருடங்கள் கழிந்த பின்பும் இருக்கும். அதேவேளை, தற்போது சிரியாவில் புகுந்த ரஷ்யா, இலங்கையில் புகுந்தால், எஞ்சி உள்ள தமிழர்கள் தமிழகத்திற்குத் தப்பி ஓட வேண்டிய பரிதாப நிலை ஏற்படும்.

ரஷ்யாவின் காற்றை வெற்றிடமாக்கும் ஏவுகணைக் குண்டுகளும் சேக்கோன் (Zircno) ஏவுகணைகளும் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிறுத்தப்பட்டு விடும். மகிந்தவை விட மைத்திரி தமிழர்களுக்கு மிகவும் அபாயகரமானவராக மாறிவிட்டார். இலங்கையில் சீனாவுடன் ரஷ்யா காலூன்றுவதே எதிர்கால உலக ஒழுங்கின் நியதியாகிவிடும்.

இதற்குரிய இராஜதந்திர வேலைகளை இலங்கை அரசு தற்போது முடுக்கி விட்டுள்ளது. இது அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, இந்தியாவின் வளர்ச்சிக்கும் பெரிய குந்தகமாக அமையும். இலங்கை இந்திய ஒப்பந்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தி, இந்தியப் படைகள் 1987ம் ஆண்டில் வந்தது போன்று மீண்டும் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு வந்தால் அன்றி, இந்தியாவோ அமெரிக்காவோ, சீனாவுடனும் ரஷ்யாவுடனும் உலக ஏகாதிபத்திய விஸ்தரிப்பு விடயத்தில் போட்டியிட முடியாது. ஈழத்தமிழர்களும் தமிழகத் தமிழர்களும் ரஷ்யத் தாக்குதலில் இருந்து தப்பிக்க இப்பொழுதே தயாராக வேண்டும். சிறிசேன அரசு ரஷ்யாவில் இருந்து தமிழக மீனவர்களைத் தாக்கக் கப்பல் தருவிப்பதைக் கண்டித்து பெரிய அளவிலான கண்டனப் பேரணியை, மத்திய அரசுக்கு விழிப்பூட்டும் விதத்தில் தமிழக மக்கள் நடத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழினத்தின் விடிவுக்காய் சாத்வீக வழியில் போராடிய

# தந்தை செல்வா

ஈழத்தமிழ்மணி



"தந்தைசெல்வா" என்று ஈழத்தமிழர்களால் வாஞ்சையுடனும் மரியாதையுடனும் அழைக்கப்பட்ட, மாபெரும் தலைவரான மூதறிஞர் எஸ். ஜே.வி.செல்வநாயகம்1898ஆம்ஆண்டுமார்ச் மாதம் 31ஆம்திகதியன்றுமலேசியாவில் பிறந்தவர். இன்று அவரது 119 ஆவது பிறந்த தினமாகும்.

கொழும்பில் கல்வி கற்று விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியராகப் பணி புரிந்தவர். சட்டக் கல்லூரியில் சேர்ந்து 1924ஆம் ஆண்டு சித்தியெய்தி சிவில் சட்டத்துறையைத் தேர்ந்தெடுத்து சட்ட வல்லுநரானார் தந்தை செல்வநாயகம்.

ஈழத்தமிழர்களின் தாயக பூமி நாட்டின் வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த மாகாணங்கள் என வலியுறுத்தியதுடன், இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனத்தவர் என்ற அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அரசியல் அடிப்படையில் அதிகாரப் பகிர்வுடனான ஒரு சுயாட்சியைப் பெறுவதற்கு முப்பது ஆண்டுகளாக அகிம்சைவழியில்போராடியவர் தந்தை செல்வா. அவ்வேளையில் மாறிமாறி ஆட்சி புரிந்தஐக்கியதேசியக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசுகளால் மேலும் மேலும் ஏமாற்றப்பட்ட தமிழர்களுக்கான இறுதி இலக்காக தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தார்.

## இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர் தந்தை செல்வா

அகில இலங்கைத்தமிழ்காங்கிரஸ்கட்சியிலிருந்து விலகி, சமஷ்டிக் கட்சி என்கின்ற தமிழரசுக் கட்சியை 1949ஆம் ஆண்டு உருவாக்கினார். மெல்லிய உருவமும் அமைதியான தோற்றமும் கொண்ட அவர் முன்னெடுத்த தீவிர அரசியல் போராட்டமும் அவரை தமிழ் மக்களின் தலைவராக, தந்தையாக ஏற்றுக் கொண்டதால், தமிழினத்துக்காகத் தம்மை அர்ப்பணித்து இறுதி நாள் வரை போராடியவர்.

1947ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் காங்கேசன்துறைத் தொகுதியில்அகில இலங்கைதமிழ்க்காங்கிரஸ்கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1948ஆம்ஆண்டுஓகஸ்ட்மாதம்20ஆம்திகதி நாடாளுமன்றத்தில் இலங்கைப் பிரஜா உரிமைச்சட்டம்நிறைவேற்றப்பட்டது. அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி அந்தச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்தது. எனினும் அந்தச் சட்டம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேறியது.

அந்தக் காலகட்டத்தில் அப்போதைய பிரதமரான டி.எஸ்.சேனநாயக்க தமிழ்த் தலைமையை விலைக்கு வாங்கியதால் அப்போதே தமிழர்களின் கஷ்ட காலம் ஆரம்பமாகியது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவரான ஜி.ஜி.பொன்னம்பலம் ஐ.தே.க அரசில் அமைச்சர் பதவி ஒன்றை ஏற்றார். இதனால் காங்கிரஸ் கட்சியின் உபதலைவராக இருந்த எஸ். ஜே.வி.செல்வநாயகம் கட்சியிலிருந்து விலகிக் கொண்டார்.

இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறை ஒத்துவராது; சமஷ்டி முறையே சரியான தீர்வைத் தரும் என்று கூறி 1949ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 13ஆம் திகதி மாவட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்துக்கு அருகில் எஸ். ஜே.வி, பொதுக்கூட்டமொன்றைக் கூட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சியென்ற புதிய கட்சியைப் பிரகடனப்படுத்தி தமிழ் மக்களுக்கு அதன் கொள்கையை விளக்கினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாடு 1951ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதி வரை திருகோணமலை நகரில் நடைபெற்றது. அந்த மாநாட்டின் போது தந்தை செல்வா தமது தலைமையுரையில் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசிய இனம் எனவும், அது பரிபூரண சுதந்திரமாக வாழும் உரிமை கொண்டது எனவும் வலியுறுத்திக் கூறினார்.

மாநாட்டில் அவர் ஆற்றிய உரையை அந்த வேளைய தமிழ் மக்கள் முற்று முழுதாக ஏற்றுக் கொண்டனர். 66ஆண்டுகள் கழிந்தும், தந்தை செல்வா அன்று முன்னெடுத்த அந்த உறுதியுரையான சமஷ்டிக் கோரிக்கை இன்று தமிழர்களின் அதி உச்சக் கோரிக்கையாக உயிர்த்து நிற்கிறது. அந்த வகையில் தந்தை செல்வா தமிழினத்துக்காகத் தொடர்ந்து நடத்திய போராட்டங்கள் யாவும் வலிமையானவை; உறுதி மிக்கவை.

## அரச நிர்வாகத்தை முடக்கிய தந்தைசெல்வாவின்தலைமையிலான சத்தியாக்கிரகப் போராட்டம்

தந்தை செல்வா தலைமையில் 1961இல் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம், வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைத்தது. தமிழ் மக்கள் மத்தியில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியது. அகிம்சை வழிப் போராட்டத்தால் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் அப்போதைய அரசின் நிர்வாகம் முடங்கியது. தமிழர்களுக்குப் பிரச்சினை என்றதொன்று இலங்கையில் இருக்கின்றது என்பது அந்த அகிம்சைப் போராட்டத்தின் மூலமாக உலகுக்கு வெளிப்படுத்தப்பட்டது.

## பண்டா-செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்களின் பிதாமகர் எஸ்.ஜே.வி.யே

1956ஆம் ஆண்டு தந்தை செல்வாவின் ஏற்பாட்டில்நடைபெற்றவரலாற்றுமுக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலை யாத்திரை, அதைத் தொடர்ந்து திருகோணமலை தலைநகரில் நடைபெற்ற மாநாட்டில் விடுக்கப்பட்ட அறை கூவலினால் ஏற்பட்டதே பண்டா-செல்வா ஒப்பந்தமாகும். அதற்கு எதிரான பௌத்த பிக்குகளின் எதிர்ப்பால் அந்த ஒப்பந்தம் கிழித்து எறியப்பட்டது. பண்டா-செல்வா ஒப்பந்தம் சமஷ்டி அடிப்படையில் உருவானதாகும்.

இதேபோல்1965ஆம் ஆண்டு டட்லி.சேனநாயக்கவுடன் எஸ்.ஜே.வி. செய்து கொண்ட ஒப்பந்தமும் கிழித்து எறியப்பட்டது.

பெரும்பான்மைச் சிங்களக் கட்சிகள் இரண்டும், தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்க முன்வரமாட்டா என்பதைத் தந்தை செல்வா உணர்ந்து கொண்டார். 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் தந்தை செல்வா சுயாட்சி அரசை அமைக்கும் நோக்கத்தை முன்னிறுத்திச் செயற்பட்டார்.

தந்தைசெல்வாவின் தீர்க்கதரிசனமான பண்டா-செல்வா ஒப்பந்தத்தையோ அல்லது டட்லி-செல்வா ஒப்பந்தத்தையோ மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் நிறைவேற்றியிருந்தால் தமிழினத்தின் பிரச்சினைகள் ஓரளவுக்கு தீர்ந்து நிம்மதியாக வாழும் நிலை ஏற்பட்டிருக்கும். சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கான நியாயமான உரிமைகளை வழங்க முன்வரமாட்டா என்பதை உணர்ந்ததாலேயே தந்தை செல்வாதான்இறக்குமுன்தமது79ஆவது வயதில் 'இனிமேல் தமிழ் மக்களை கடவுள் தான் காப்பாற்றவேண்டும்'என்றுகூறியிருந்தார்.


1947ஆம் ஆண்டு தமது அரசியல் வாழ்வை ஆரம்பித்த தந்தை செல்வா 30 ஆண்டுகள் காலம் தமிழினத்தின் விடுதலைக்காக உழைத்தார்.

20ஆம் நூற்றாண்டின் ஈடு இணையில்லா தமிழ்த் தலைவராகப் போற்றப்பட்ட தந்தை செல்வநாயகம், எவரையும் உதாசீனம் செய்யும், மனம் நோக வைக்கும் பண்புடைய மனிதராக இருக்கவில்லை.

தந்தை செல்வா, தமிழினத்தின் தலைவராக நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது அவரது பேச்சைக் கேட்பதற்காக மூவினங்களையும் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் காலகட்டத்தில் ஆர்வம் செலுத்தினர்.

தந்தை செல்வா 1972ஆம் ஆண்டில் சிறிமாவோ அரசு தமிழினத்துக்கெதிராக புதிய அரசமைப்புச் சட்டத்தைக் கொண்டு வந்த போது, அதனை எதிர்த்து தமது நாடாளுமன்றப் பதவியைத் துறந்தார். பின்னர் 1975 ஆம் ஆண்டு மீண்டும் அதே காங்கேசன்துறைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1977ஆம்ஆண்டுஏப்ரல்மாதம்26ஆம்திகதி இவ்வுலக வாழ்வை நீத்த தந்தை செல்வாவின் நினைவு ஈழத் தமிழினத்தின் மத்தியில் என்றும் நீண்டு நிலைத்திருக்கும்.



# வாசகர் திருமுகம்

## இடமாற்ற நடைமுறை உரிய முறையில் செயற்படுத்தப்பட வேண்டும்

தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு மேலாக ஒரு சேவை நிலையத்தில் கடமையாற்றியவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுவது அரச நிர்வாக நடைமுறை வழக்கமொன்றே.

ஆனால் இந்த நடைமுறை வட பகுதியில் மத்திய மாகாண அரசுகளால் காலம் தாழ்த்தியே செயற்படுத்தப்படுகிறது.

இதனால் பிரச்சினைகள், ஊழல்கள், மோசடிகள், முரண்பாடுகள் தலைதூக்கிய நிலையிலேயே அரசதலைவர்கள், திணைக்களங்களின் அதிகாரிகள் இடமாற்றம் குறித்து நீண்ட கால இடைவெளிகளின் பின்னர் தீர்மானம் எடுக்கின்றனர். யாழ்.மாவட்டத்தில் ஏழு பிரதேச செயலாளர்கள் விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளதான செய்தி பத்திரிகையில் வெளியாகியிருந்தது.

மாவட்டச் செயலகத் தீர்மானத்தின்படி 7 பிரதேச செயலாளர்களை இடமாற்றம் செய்வது என்பது தான் இங்குள்ள முரண்பாடு ஆகும். யாழ்ப்பாணக்குடா நாடு 15 பிரதேச செயலர் பிரிவுகளைக் கொண்டது.

இதில் ஏழு பிரதேச செயலர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டு மற்றைய பிரதேச செயலர்கள் இடமாற்றம் (8 பிரதேச செயலர்) இன்றிச் சேவையைத்தொடர்வதுபொருத்தமற்றசெயல். பிரதேச செயலர்களுக்கு வேறுபாடு இன்றி ஒரு வருடம், 2வருடம் என இடமாற்றங்கள் அண்மையில் வழங்கப்பட்டிருந்தாலும் 15 பிரதேச செயலர்களுக்கும் இடமாற்றம் வழங்கும் நடைமுறையே பொருத்தமானது; முரண்பாடு அற்றது; சாலச் சிறந்தது.

கடந்த வாரம் பிரதேச செயலகமொன்றுக்கு அலுவலொன்றுக்காகச் சென்றிருந்த போது குறித்த பிரதேச செயலர் பொது மக்களது தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பதில் அசண்டையீனப் போக்கில் செயற்படுவதாக அங்கு என்னைப் போன்று தமது தேவைகளுக்காக வந்திருந்தோர் தெரிவித்தனர்.

எனவே தான்,7 பிரதேச செயலர்களுக்கு மாத்திரம் இடமாற்றம் வழங்காது 15 பிரதேச செயலர்களையும் இடமாற்றம் செய்யவேண்டும் எனக்கருதுகிறேன்.

அப்போது தான் வர்க்க வேறுபாடு அற்ற சுயாதீனமான அபிவிருத்தி, பொதுமக்களின் நலன், பொதுச்சேவை என்பவை முழுமை பெறும்.

எனவே அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் மீளவும் ஒரு தடவை சிந்தித்து சகல பிரதேச செயலர்களையும் அவரவர்களது பிரிவுகளிலிருந்து இடமாற்றம் செய்வது குறித்து மீள்பரிசீலனை செய்து அவர்கள் அனைவரையும் அவர்களது தற்போதைய பிரிவுகளிலிருந்து வேறுபிரிவுகளுக்கு இடமாற்றம். செய்தல் வேண்டும்.

இதைப் போன்றே ஐந்து வருடங்களுக்கு மேல் ஒரு சேவை நிலையத்தில் கடமையாற்றிய உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களையும் இடமாற்றம் வழங்கி வேறுபாடுகளைக் களைய அரசு செயலாளர்கள் பக்கச் சார்பு இன்றிச் செயலாற்ற முனைய வேண்டும்.

இவ்வாறாக மாகாணத்துக்கான பிரதம செயலரும், பக்கச்சார்பு இன்றி ஐந்து வருடங்களுக்கு மேல் ஒரே நிலையத்தில் சேவையாற்றும் அனைத்து சேவையாளர்களுக்கும் இடமாற்றல் வழங்கி அரசின் பயன்மிகு சேவையூடாக மக்கள் சேவைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

கு.லெனின்குமார், யாழ்.நகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** எதிர்காலவளர்ச்சிக்கானபணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். ஆதாயம் அதிகரிக்கும். மனைவிவிரும்பியபொருளை வாங்கித்தருவீர்கள்.

**இடபம்:** பேச்சில்நிதானத்தைக்கடைபிடிப்பது நல்லது. தொழில், வியாபாரம் மந்தகதியில் நடக்கும். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம். பெற்றோர் உடல்நலனில் அக்கறை தேவை.

**மிதுனம்:** சவால்களைத் திறமையுடன் எதிர் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை வந்துசேரும். அரசியல்வாதிகள்பதவிபெறயோகம்உண்டு.

**கடகம்:** மனஉறுதியுடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபார விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். பணவரவு அதிகரிக்கும். உறவினர் இல்ல சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்

**சிங்கம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உடல்நலனில் அக்கறை தேவை.

**கன்னி:** நண்பரின் செயற்பாட்டால் சிரமத்திற்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். அலைச்சலால் உடல் அசதிக்கு ஆளாகலாம்.

**துலாம்:** உற்சாக மனப்பான்மை உண்டாகும். திட்டமிட்ட பணியை ஆர்வத்துடன் நிறைவேற்றுவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை,வியத்தகுஅளவில்முன்னேற்றம் பெறும். வருமானம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள், எதிர்பார்த்தசலுகைகிடைக்கும். குடும்பத்தில், மங்கலநிகழ்வு இடம்பெறும்.

**தனுசு:** மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் தடையைச்சரிசெய்வது அவசியம். லாபம்சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர்செல்வர்.

**மகரம்:** லட்சிய நோக்கில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், மூலதனம் அதிகம் தேவைப்படும். லாபம் சீராக இருக்கும். பணியாளர்களுக்கு, பணியிடமாற்றம்ஏற்பட வாய்ப்புண்டு.

**கும்பம்:** நண்பரின் ஆலோசனை, வளர்ச்சிக்குத்துணை நிற்கும். தொழிலில்உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்திவந்துசேரும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**மீனம்:** சுயநலத்துடன் சிலர் நெருங்கிப் பழகலாம், கவனம். தொழிலில், நிலுவைப் பணிகளைநிறைவேற்றுவதுநல்லது. லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள், பணிச் சுமைக்கு ஆளாவர்.



## தொழிலதிபராக மாறுகிறார் நடிகை ஜாக்குலின்

கொழும்பை அடுத்து மும்பையிலும் உணவகம் ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளார் நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ்.

இலங்கையைச் சேர்ந்தவர் ஜாக்குலின் பெர்னாண்டஸ். மும்பையில் தங்கி பொலிவூட் படங்களில் நடித்து வருகிறார். தற்போது அவர் இரண்டு படங்களில் நடித்து முடித்துள்ளார்.

மேலும் இரண்டு ஹிந்திப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். அவர் கொழும்பில் கீமா சூத்ரா என்ற பெயரில் கடந்த ஆண்டு உணவகம் ஒன்றைத் தொடங்கினார்.

இந்நிலையில் மும்பையிலும் உணவகம் ஒன்றைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளார். அதற்காகப் பந்த்ரா பகுதியில் கட்டடம் ஒன்றை வாங்கி உணவகத்துக்கு ஏற்றபடி மாற்றிக் கொண்டிருக்கிறாராம். தனது உணவகத்தில் ஆரோக்கியமான உணவுகளை மட்டுமே விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளாராம் ஜாக்குலின்.

chockigirl @senorita_twitzz
ஒரு வீட்டில் கிழவனோ கிழவியோ இறந்து போனால், ஒரு நூலகம் எரிந்து போனது என அர்த்தம்...!

என்னங்க... உடனே உங்க தம்பிக்கு கல்யாணம் பண்ணி வையுங்க... எதுக்கு இவ்வளவு அவசரம்...?



உங்க அம்மாவையும் அக்காவையும் என்னாலே தனியா சமாளிக்க முடியலே...!

மாப்பிள! எம்பொண்ணு ஹெலிகாப்டர் வேணுமெங்கிறா...!
அட என்ன மாமா ஹெலிகாப்டரோட சேத்து ரிமோட்டும் AAA size பற்றரியும் வாங்கிக் கொடுத்திடுவோம்...



## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 7 | | 8 | | |
| | 7 | 1 | | | 6 | | 2 | |
| | | | | 5 | | 7 | | |
| | 4 | | | | | | 7 | 3 |
| | 8 | | 2 | 4 | 7 | | 5 | |
| 6 | 5 | 7 | | | | | 8 | |
| | | 6 | | 2 | | | | |
| | 9 | | 7 | | | 3 | 1 | |
| | | 5 | | 3 | 9 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 3 | 9 | 5 | 2 | 4 | 1 | 7 |
| 1 | 2 | 4 | 6 | 8 | 7 | 5 | 9 | 3 |
| 9 | 5 | 7 | 4 | 1 | 3 | 2 | 8 | 6 |
| 5 | 7 | 1 | 8 | 3 | 4 | 9 | 6 | 2 |
| 4 | 8 | 9 | 7 | 2 | 6 | 1 | 3 | 5 |
| 6 | 3 | 2 | 1 | 9 | 5 | 8 | 7 | 4 |
| 2 | 1 | 5 | 3 | 6 | 8 | 7 | 4 | 9 |
| 3 | 4 | 8 | 5 | 7 | 9 | 6 | 2 | 1 |
| 7 | 9 | 6 | 2 | 4 | 1 | 3 | 5 | 8 |



நண்பர் –1: என் பையன் ஏதோ ஃபேஸ் புக் வாங்கணும் ரொம்ப விலைன்னு 20 ஆயிரம் ரூபாய் அனுப்பச் சொன்னான். இப்பத்தான் அனுப்பிட்டு வாறேன்.

நண்பர் –2: ஏம்பா இப்படி உலகம் தெரியாத முட்டாளா இருக்கிறியே?

நண்பர் –1: என்னண்ணே? ஏதாவது தப்பாயிடுச்சா?

நண்பர்– 2: பின்னே என்ன... உன் பையன் உன்னை நல்லா ஏமாத்திட்டான்.

நண்பர் –1: என்னண்ணே சொல்லுறீங்க?


நண்பர் – 2: அந்தப் புத்தகத்தோட விலை 15 ஆயிரம் ரூபாய் தான். நேற்றுதான் என் பையனுக்கு அனுப்பிச்சேன், அனுப்பறதுக்கு முன்னாடி, அனுபவஸ்தன் என் கிட்ட கேட்டுருக்கலாமல்லவா?

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள்என்றும்அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும்1-9வரையான எண்கள், இரண்டு தடவை கள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிக்கோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டக் கற்கள்





## முத்து

**எவரெல்லாம் முத்து அணியலாம்?**

முத்துக்களை சந்திரனுடைய வீடான கடக ராசியில் பிறந்தவர்களும், சந்திரனுடைய திசைநடப்பில்உள்ளவர்களும்,சந்திரனால்பாதிக்கப்பட்டவர்களும்அணிவதுமிகவும் நல்லது. அதுபோல, எண்கணிதப்படி 2,11,20,29 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களும் அணிய வேண்டிய இரத்தினம் முத்தே ஆகும்.


முத்துக்கள் சீக்கிரத்தில் நிறம் மங்குவதில்லை. நூறு ஆண்டுகளுக்குப் பிறகு தான் அதன்நிறம்மங்கும், எடைகுறையும், முத்தைப்பயன்படுத்தாதபோதுஒருபஞ்சிலோ, துணியிலோ சுற்றி வைத்தால் இயற்கைத் தன்மை மாறாமல் அப்படியே இருக்கும். சவர்க்கார நீரோ ஏனைய இரசாயனப் பொருள்களோ முத்தைப் பாதிக்கும் தன்மை கொண்டவையாகும்.

முத்துக்குப் பதிலாக சந்திரகாந்தக் கல்லையும் பயன்படுத்தலாம். ஆங்கிலத்தில் 'மூன் ஸ்ரோன் என அழைக்கப்படும் இந்தக் கல் நிறத்தில் சற்று மங்கலாக இருந்தாலும் சந்திரன் போன்றே அழகுடையதாக இருக்கிறது.

**முத்தின் நன்மைகள்:**

முத்தை அணியும்போது சந்திரனுடைய ஒளிக்கதிர்கள் திருப்பி விடப்பட்டு உடல் நலமானது சிறப்பாக இருக்கும். மனக்குழப்பங்கள் மறையும். பெண்களுக்குகர்ப்பப்பை பிரச்சினைகள் இருந்தால் அதிலிருக்கும் குறைகள் விலகி குழந்தைப் பேறும் உண்டாகும்.

முத்து உடலுக்குக் குளிர்ச்சியையும் உள்ளத்திற்கு அமைதியையும் முகத்திற்கு வசீகரத்தையும் உடலழகையும் கொடுக்கிறது.



## நாளை

பங்குனி-19
சனிக்கிழமை -01.04.2017
திதி: பஞ்சமி மு.இ.10.16
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப.08.44
சுபநேரம்:03.11-04.41 வரை
ராகுகாலம்:09.11-10.41 வரை

## வரலாற்றில் இன்றைய தினம்
## 31.03.2017

1492-கஸ்ரைல்அரசிஇஸபெல்லா 150000யூதர்மற்றும்இஸ்லாமியர்களை கிறிஸ்தவ சமயத்துக்கு மாறுமாறும் இல்லையேல் நாடுகடத்தப்படுவர் எனவும் கட்டளை பிறப்பித்தார்.

1889- ஈபிள் கோபுரம் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

1899 -முதலாவது பிலிப்பைன்ஸ் குடியரசின் தலைநகர் மலோலோஸ் அமெரிக்கப் படைகளால் கைப்பற்றப்பட்டது.

1909 - பொஸ்னியா மற்றும் ஹெஸகோவினியா மீதான ஒஸ்ரியாவின் கட்டுப்பாட்டை சேர்பியா ஏற்றுக் கொண்டது.

1918-12,000வரையிலான அஸர்பைஜயன்முஸ்லிம்கள்கூட்டுப்படைகளால்கொல்லப்பட்டனர்.

1918 -பகல் நேரத்தைச் சேமிக்கும் நடைமுறை முதன்முதலாக அமெரிக்காவில் நடைமுறைக்கு வந்தது.

1931- மனகுவா, நிகாராகுவாவை பூகம்பம் தாக்கியதில் 2000 பேர் வரை உயிரிழந்தனர்.

1942 -பிரிட்டனின் ஆளுகைக்குள்ளிருந்த கிறிஸ்மஸ்தீவுஜப்பானியப்படைகளால்கைப்பற்றப்பட்டது.

1951 -UNIVAC 1கணினி அமெரிக்க சனத்தொகை கணக்கெடுப்பு அதிகார சபையிடம்றெமிங்டன் றான்ட்டினால் கையளிக்கப்பட்டது.

1959- இந்தியாவுக்குள் எல்லை கடந்த நிலையில் 14 ஆவது தலாய்லாமாவுக்கு அங்கு அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டது.

1970 -12 ஆண்டுகள் விண்வெளிசுற்றுப் பாதையில் மிதந்த எக்ஸ்புளோரர்- 1 மீண்டும் புவிக்குத் திரும்பியது.

1990- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு வாக்குவரிக்கு எதிராக 200 000 எதிர்ப்பாளர்கள் லண்டன்வீதிகளில்ஆர்ப்பாட்டத்தில்ஈடுபட்டனர்.

1993-பூநகரிப்பாதைவிவகாரம்;பூர்வாங்கஏற்பாடுகளில்ஐ.நா.தூதரகஅதிகாரிகள்ஈடுபாடு.

1993 - வடமராட்சியில் 2பேர் பலாலி எறிகணையால் காயம்.

1993 -முஸ்லிம் மீனவர்கள் புலிகள் விடுவித்தன்.

1993-படையினர்சூடு; கூனித்தீவில்ஒருவர்சாவு.

1993-கிளாலிப்படுகொலையைக்கண்டித்துப்பல்கலைக்கழக மாணவர்கள் யாழ். நகரில் பேரணி.

1995 -மண்டூரில் பொலிஸார் மோதல் தவிர்ப்பு மீறல்; பேராளியைத் தாக்கியதால் அவர் சாவு.

1995-ராஜீவ்கொலைக்குமொஸாட்காரணமெனசேஷன் சொன்னதாகத் தகவல் வெளியானது.

1995-பூநகரிப் பாதையைவிட ஆனையிறவைத் திறப்பதேபடையினருக்குப்பாதுகாப்புஎன இராணுவத்தளபதி ஜெரி டி சில்வா தெரிவிப்பு.

1995 -காணாமற்போனோர் தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழு பதவிக்காலம் முடிவு. மேலும் நீடிக்கப்படலாம். 30 ஆயிரம் வரையான முறைப்பாடுகள் கிடைத்தனவாம்.

1995-அடுத்த கட்டப் பேச்சில் அரசியல்தீர்வு குறித்தும் பேசப்படும் என சந்திரிகா அறிவிப்பு.

1995- வடக்கு கிழக்கு அபிவிருத்தி அதிகாரசபை நிறுவ முயற்சி; அரசு விதி முறைகளைத் தயாரிக்கின்றது.

1997- கொக்குவில் மஞ்சவனப் பகுதியில் கிளைமோர்தாக்குதல்;2படையினர்உயிரிழப்பு.

1997- வானொலிக் கருவியைப் பயன்படுத்த பன்னாட்டு அவசர மருத்துவ உதவி நிறுவனமான "மேர்லின்" குழுவுக்கு அனுமதி மறுப்பு; மருத்துவ சேவையை இங்கு ஆரம்பிக்க முடியாதநிலை.

1997 -இளைஞர் பிரச்சினைகளைத் தீர்க்க அரசுகள்கவனமெடுப்பதில்லை. இதனாலேயே வடக்கிலும் கிழக்கிலும் இளைஞர்கள் கிளர்ச்சியாளர்களாகின்றனர்எனசந்திரிகா தெரிவிப்பு.

2000- ஓயாத அலைகள்- 3 இன்போது 31 பேர் உயிரிழப்பு என புலிகளின் குரல் தெரிவிப்பு.

2000-இராணுவ நடவடிக்கையின் போது பனையில் சிக்கிய 32பேர் வந்து சேர்ந்தனர்.

# புரதச்சத்து நிறைந்த உணவுகள்!




### சோயா பீன்ஸ்

புரதச்சத்துக் குறைபாடு கொண்டவர்களுக்கு சோயா நல்ல மருந்து. சோயாவை அவ்வப் போது சீரான இடைவெளி விட்டு சமையலில் சேர்த்துச் சாப்பிட்டு வரலாம். சோயா பால், சோயா சீஸ் போன்றவற்றிலும் புரதச்சத்து நிறைந்துள்ளது. 100 கிராம் சோயாவில் 28.6 கிராம் புரதம் உள்ளது.

### பருப்பு வகைகள்


துவரம் பருப்பு, பாசிப் பருப்பு என பருப்பு வகைகள் அனைத்திலும் புரதச்சத்து நிறைந்திருக்கிறது. முளைகட்டிய பயிர்களில் புரதச்சத்து அதிகளவு உள்ளது. எனவே அசைவ உணவுகளை தவிர்ப்பவர்கள் தினமும் சிறிதளவு முளை கட்டிய தானியங்களைச் சமைத்து சாப்பிடலாம். பச்சைப் பயறில் மட்டும் 24 கிராம் அளவுக்குப் புரதம் உள்ளது.





### யோகர்ட், சீஸ்

யோகர்ட் எனப்படும் தயிர், சீஸ் போன்றவற்றில் புரதச்சத்து நிறைந்துள்ளது. எனினும் இதில் கொழுப்புச் சத்தும் நிறைந்து காணப்படுவதால், இதனை அளவாகவே உண்ண வேண்டும். பாற் பொருள்களில் 10 கிராம் அளவுக்கு புரதம் உள்ளது.



## இது புதுசு

பெண்களுக்கான மேலாடை தற்பொழுது விற்பனையில் உள்ளது. கோடுகள் குறுக்கே அமைந்துள்ளதாக நெய்யப்பட்டுள்ள இந்த ஆடை அனைத்துப் பெண்களுக்கும் ஏற்றதாக இருக்கும். ஒன்றின் விலை 800 தொடக்கம் 1000 வரையில் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியதிச்...

இல்லாமையால் உறுப்பினர்கள் கடும் அதிருப்தியடைந்தனர். அங்கு குழப்ப நிலையும் ஏற்பட்டது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் சுகவீனம் காரணமாக முதலமைச்சர் சமுகமளிக்கமாட்டார் என்பதால் சபை நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் நியதிச் சட்டங்களை அமைச்சர் ஐங்கரநேசனே முன்வைப்பார் என முடிவு எடுக்கப்பட்டதாக உறுப்பினர்கள் சபையில் தெரிவித்தனர். ஏனினும் நியதிச் சட்டத்தை முன்மொழியவேண்டிய அமைச்சர் காணாமற்போனமையால் உறுப்பினர்கள் குழப்பமடைந்தனர்.

**சபையில் சலசலப்பு**

வடக்கு மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன் தெரிவிக்கையில்,

நேற்று நடைபெற்ற குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண சபையின் இன்றைய (நேற்றைய) அமர்வில் நியதிச் சட்டங்கள் எடுக்கப்பட வுள்ளதாகக் கூறப்பட்டது. நியதிச் சட்டங்களை அமைச்சர் ஐங்கரநேசன் சபையில் முன்மொழிவார் எனவும் கூறப்பட்டது. அப்படி இருக்கையில் அமைச்சர் சபையில் இருக்காமல் எங்கு சென்றார்? அமைச்சர் ஏன் சபையில் இருக்கவில்லை என்பதை பிரதி அவைத் தலைவர்தான் தெரிவிக்க வேண்டும்என்றார்.

எதிர்க் கட்சித்தலைவர் சி.தவராசா தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண முதலமைச்சருக்குப் பதிலாக விவசாய அமைச்சர் நியதிச் சட்டத்தைச் சபையில் முன்மொழிவதாக கூறப்பட்டது. அமைச்சர் பொறுப்பற்ற விதத்தில் சபையில் பிரசன்னமாகாமல் இருப்பது சரியல்ல. வடக்கு மாகாண சபைப் பிரதிநிதிகளை அண்மையில் சந்தித்த வெளிநாட்டுக் குழுவினர். நீங்கள் இவ்வளவு காலமும் பதவி ஏற்று எத்தனை நியதிச் சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தி உள்ளீர்கள் எனக் கேள்வி கேட்கின்றனர்.

வடக்கு மாகாண சபையினரான நீங்கள் உங்களுக்கு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துங்கள். அதிகாரங்கள் எந்தளவுக்கு கீழ் மட்டத்தில் உள்ளவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகின்றதோ அந்தளவுக்கு மக்களுக்கு நன்மை கிடைக்கும் எனக் கூறினார்கள்.

ஆனால் நாங்கள் இங்கு இயலாத் தன்மைகளால் ஏராளமான பிரேரணை களையும், தீர்மானங்களை யும் மட்டுமே நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றோம். இன்றைய செயற்பாடு கூட வடக்கு மாகாண சபையின் நிர்வாகத் திறனற்ற செயற்பாட்டையே வெளிப்படுத்துகின்றது என்றார்.

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபை ஊடாக எதுவும் நடக்கவில்லை என்று கூறுவதை அனைத்து உறுப்பினர்களும் கைவிடவேண்டும். கடந்த காலங்களில் ஒதுக்கப்பட்ட நிதிகள் எங்கே? அவை மூலம் நடைபெற்ற அபிவிருத்தித் திட்டங்களை அவதானித்துப் பாருங்கள். மாகாண சபை உறுப்பினர்களுக்காக வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதிகளுக்கு என்ன நடந்தது என இங்குள்ள அனைத்து உறுப்பினர்களும் கூறுங்கள் என்றார்.

அங்கு கருத்துரைத்த உறுப்பினர் சிவயோகன், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடன் வடக்கு மாகாண முதலமைச்சர் இணைந்து செயற்படுவாராயின் வடக்கு மாகாண சபைக்குத் தற்போது கிடைக்கும் நிதிகளை விட அதிகளவான நிதி கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளன. அதன்மூலம் எமது மாகாணத்தில் அதிக அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும் என்றார்.

**வந்தார் ஐங்கரநேசன்**

நீண்ட நேரத்தின் பின்னர் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் சபைக்குள் வந்தார். அவர் தனது கருத்துக்களை முன்வைத்தார்.

பிரதி அவைத்தலைவரிடம் அனுமதி கேட்டு நியதிச் சட்டத்தை நான் முன்மொழிவதாக இருந்ததாகவும், அந்தச் சமயத்தில் நான் இங்கு இருக்கவில்லை என்றும் பல உறுப்பினர்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர் என்று இங்குள்ள உறுப்பினர்களில் சிலர் எனக்கு குறுந்தகவல் ஊடாகவும் தொலைபேசி அழைப்பின் ஊடாகவும் தெரிவித்தனர்.

ஆனால் முதலமைச்சரினால் கொண்டுவரப்பட இருந்த நியதிச் சட்டத்தை முதலமைச்சர் சபையில் முதலில் முன்வைப் பதாகவும், அதன் பின்னர் மிகுதியை அவைத் தலைவர் சபையில் கொண்டு நடத்துவார் என்றும் முதலமைச்சர் எனக்குச் சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார். இந்நிலையில் முதலமைச் சரினால் கொண்டுவரப்படவிருந்த நியதிச் சட்டங்களை நான் தான் முன்மொழிய வேண்டும் எனப் பிரதி அவைத்தலைவர் தெரிவிக்காத காரணத்தால் நான் சபையில் இருக்கவில்லை என அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதி அவைத்தலைவர் கமலேஸ்வரன் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபையின் இன்றைய அமர்வுக்கான திருத்தி அமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலை நான் முழுமையாக இன்னும் பார்க்கவில்லை. அவைத் தலைவர் சிவஞானத் துக்குச் சுகவீனம் ஏற்பட்டதன் காரணமாகத் திருமண வீட்டில் நின்ற என்னை உடனடியாக வருமாறு அழைத்தனர். இதனால் நான் அவசர அவசரமாக வருகை தந்து சபை நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன். ஆகவே இதில் ஒரு குழப்ப நிலமையும் வேண்டாம். நியதிச் சட்டங்களை எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள அடுத்த அமர்வில் எடுத்துக் கொள்வோம்என்றார். (த-8)

## மோட்சதீப அழைப்பு

பிறப்பு
12 • 10 • 1933



இறப்பு
16 • 03 • 2017

கடந்த 16.03.2017 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

### கிருஸ்னர் தேவராசா ஐயா

அவர்களின் மோட்சதீபக் கிரியைகள் இன்று 31.03.2017 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அவரது மோட்சபேறிற்கான பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரத்துவம் அடைந்த செய்திகேட்டு சகலவழிகளிலும் உறுதுணையாக நின்ற அனைவருக்கும் அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

மறவன்புலோ மத்தி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

## இணைத்...

இவ்வாறு அனைத்து மாவட்டச் செயலர்களுக்கும் அரச தலைவரின் செயலாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இணைத் தலைவர்களிடமிருந்து ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கான திகதிகளைப் பெற்றுக் கொள்வதில் அரச அதிகாரிகள் திணறி வருகின்றனர். இதனால் மாதாந்தம் நடைபெற வேண்டிய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் மாதக் கணக்கில் நடைபெறாமல் உள்ளன.

இது தொடர்பில் அரச தலைவரின் செயலாளர் மாவட்டச் செயலர்களுடன் ஆராய்ந்துள்ளார். அனைத்து மாவட்ட செயலாளர்களையும் ஒன்றிணைத்து காணொலி ஊடாக கடந்த வாரம் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது

"நாடாளுமன்ற அமர்வுத் திகதிகள் மற்றும் மாகாண சபை அமர்வுத் திகதிகளைப் பெற்று அதனை அரச தலைவர் செயலகத்துக்கு மாவட்ட செயலாளர்கள் அனுப்பி வைக்கவேண்டும். அதனடிப்படையில் அரச தலைவர் செயலகத்தால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கான திகதிகள் வழங்கப்படும்.

அரச தலைவர் செயலகத்தால் வழங்கப்படும் திகதிகளில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் கட்டாயம் நடத்தப்படவேண்டும். அந்தத் திகதிகளில் இணைத் தலைவர்கள் கலந்து கொள்ளவில்லையாயினும் கூட்டத்தை மாவட்ட செயலாளர்கள் நடத்தி முடிக்க வேண்டும்" என்று அரச தலைவர் செயலகத்தால் இறுக்கமான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த ஆண்டும் அரச தலைவர் செயலகத்தால் பிரதேச மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்குரிய திகதிகள் அறிவிக்கப்பட்டும் அந்த ஒழுங்கில் கூட்டங்கள் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## பட்டம்...

சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை பாடசாலை அதிபர் திருமதி தேவராணி நவரட்ணம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ரெலோ அமைப்பின் கொள்கைப் பரப்புச் செயலர் வேலாயுதம் கணேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இராஜாங்க அமைச்சர் ராதாகிருஷ்ணன் மேலும் தெரிவித்ததாவது:

மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் என்பன எமது அமைச்சின் கடமை. வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தில் தமிழ் பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு நாம் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.

ஆட்சி மாற்றத்துக்கு வடக்கு மக்களே அதிகளவு பங்களிப்பை வழங்கியிருந்தார்கள். வடக்கில் கல்வித் தரம் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. எல்லா அமைச்சுக்களும் இணைந்து பணியாற்றினால் மாத்திரமே நாடு முன்னேற்றம் அடையும். கல்வியிலும் உயர் நிலையை அடைய முடியும்.

கல்வியைக் கற்றோம், பட்டம் பெற்றோம், அதன் பின்னர் வேலை கேட்டு போராட்டம் என்று இருக்கக் கூடாது. அதற்காக கல்வியைக் கற்கக் கூடாது. கற்கும்போதே எமக்கான தொழிற்கல்வியையும் மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் இணைபாடவிதானத்தில் தொழிற்கல்வியைக் கற்பதன் ஊடாக, சாதாரண தரத்தில் சித்தியடையா விட்டாலும் உயர்தரம் கற்கக் கூடிய வாய்ப்பு அடுத்த ஆண்டிலிருந்து கிடைக்கும். இதற்காக கல்வி அமைச்சு ஏனைய அமைச்சுக்களுடன் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றது என்றார்.

(வ-5,26,108)

## குரங்கு...

பேசியைக் குரங்கொன்று எடுத்துச் சென்றிருப்பதாகப் பிரிட்டன் தாதிய மாணவியொருவர் அநுராதபுரம் பொலிஸில் முறையிட்டுள் ளார்.

26 வயதான இந்தப் பிரிட்டன் மாணவி உட்பட பல் வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவிகள் அநுராதபுரம் போதனா வைத்திய சாலையின் தாதியர் விடுதியில் தங்கியிருந்து பயிற்சி பெற்று வருவதாகவும், இந்த மாணவியின் அறையின் ஜன்னல் வழியாகத் திடீரெனப் புகுந்த குரங்கொன்று அலைபேசியைத் தூக்கிக்கொண்டு மறைந்துவிட்டதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டிருப்பதாக அநுராதபுரம் சுற்றுலாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் குரங்கைத் தேடிக் கண்டுபிடித்து தனது அலைபேசியை மீட்டுத் தருமாறு அவர் கேட்டுள்ளபோதிலும் அலைபேசி பற்றியோ, குரங்கைப் பற்றியோ எவ்வித தகவலும் இதுவரை கிடைக்கவில்லை யெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-4)

## ஜெனிவாவில்...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த இந்த ஆண்டு ஏற்றுக் கொண்டுள்ளது. இதன்மூலம், பன்னாட்டு நீதிபதிகள், பன்னாட்டு வழக்குத் தொடுநர்கள் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறைக்கு அரசு இணங்கிவிட்டது. அரச தலைவர் மைத்திரிபாலவும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், வெளிநாட்டு நீதிபதிகள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லி வந்தாலும், அதற்கு எதிர்மறையாக ஜெனிவாவில் நடந்து கொண்டுள்ளார்கள். 2015ஆம் ஆண்டு தீர்மானத்தில் மாற்றம் செய்தார்கள். 2017ஆம் ஆண்டு மாற்றம் எதுவும் செய்யாமலேயே ஏற்றுக் கொண்டார்கள். இந்த அரசின் தேசவிரோதப் பண்பு காரணமாகவே, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை மீது அரசு எந்தவொரு முறைப்பாடும் செய்யவில்லை. அந்த அறிக்கையை அரசு அப்படியே ஏற்றுக் கொள்வதற்கு எந்தப் பொருத்தமான காரணங்களும் இல்லை.

2010ஆம் ஆண்டு அப்போதைய ஐ.நா. பொதுச் செயலர் மூனினால் இலங்கை தொடர்பில் நடத்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு அறிக்கை வெளியானது. அதனை எனது அரசு முற்றாக நிராகரித்தது. அப்படியான ஆவணம் இருக்கின்றதா என்பதே இப்போது பலருக்குத் தெரியாது. ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அறிவுறுத்தலின் அடிப்படையிலேயே ஒரு நாடு தொடர்பில் தனக்கு ஆலோசனை வழங்க ஐ.நா. பொதுச் செயலர் குழுவை நியமிக்க முடியும். ஆனால் இலங்கை விடயத்தில் அப்படி நடக்கவில்லை. அமெரிக்காவின் அப்போதைய ஆட்சியாளர் ஒபாமாவின் நெருக்குதல் காரணமாக மூன் குழுவை நியமித்து விசாரணை நடத்தினார்.

பாதுகாப்புச் சபையின் நடைமுறைக்கு எதிராகவே இலங்கை மீதான விசாரணை நடைபெற்று வருகின்றது. 2014 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் விசாரிக்க குழு நியமிக்கப்பட்டது.

விசாரணைக்குழுவை உருவாக்கின்றபோது அதற்கான நியமனங்களை ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தலைவர்தான் வழங்க முடியும். இலங்கை விடயத்தில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரே அந்த நியமனங்களை வழங்கினார். சபையின் தலைவரால் உத்தரவு வழங்கப்படவில்லை. அப்படியிருந்த போதும் அந்த அறிக்கை முறையாகத் தயாரிக்கப்படாத போதும் இந்த அரசு அதனை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளது.

எமது படையினருக்கு எதிராகத் தெரிவிக்கப்படும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எழுத்து மூலமாக கருத்துக்களை வழங்குமாறு பன்னாட்டு நிபுணர்கள் 6 பேரை நியமித்தேன். அவர்கள் தங்கள் ஆய்வின் விசாரணையின் முடிவில், போரின் போது எந்தவொரு வன்முறை மீறல்களும் இடம்பெறவில்லை என்று அறிக்கை தந்தனர். அந்த அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்க விரும்பினேன். அதற்கு இடையில் நாங்கள் அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டோம். கூட்டு அரசு அந்த ஆவணங்களை எல்லாம் மறைத்து விட்டது. (இருப்பினும் ஐலண்ட் பத்திரிகை அதனை வெளியிட்டது).

பன்னாட்டு நிபுணர்களால் இலங்கைக்குச் சாதகமாக வழங்கப்பட்ட அறிக்கையை மறைத்து விட்டு, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின், இலங்கைப் படையினர் மீது போர்க்குற்றச் சாட்டுக்களை சுமத்திய அறிக்கையை இலங்கை அரசு அப்படியே ஏற்றுக் கொண்டு நிறைவேற்றியிருக்கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசின் ஆதரவுடன் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பூசி மெழுகப்பட்ட அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இது எங்களுடைய மக்களுக்கும், ஆயுதப் படையினருக்கும் எதிராக அரசு மேற்கொள்ளும் மிக மோசமான நடவடிக்கை என்றுள்ளது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவுகளுடன்...

*மாதமொன்றானதம்மா!*
*நேற்றும் போல் இருக்குதம்மா – நீங்கள்*
*காற்றாகிப்போன செய்தி –*
*கூற்றுவன் காத்திருந்த*
*கொடுங்காலம் வந்ததனால்*
*கொண்டும்மை சென்றுவிட்டான்......*
*மாதமொன்றானதம்மா!*
*தேற வழியில்லையம்மா!*
*கண்ணீரில் நாம் நனைந்து – தினம்*
*கரைக்கின்றோம் எம் வாழ்வை*
*உங்களை மீண்டும் நாம்*
*காண்பதற்கு வழியேதும் இல்லையாம்மா?*
*வானுறையும் தெய்வமே!*
*நீண்டு வரும் காலமெல்லாம்*
*வழிகாட்டியாய் – நீங்கள் எம்முடன்*
*சேர்ந்துவர வேண்டுமம்மா.......*



குறிப்பு :-
அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 2017.03.29 புதன்கிழமை இராமேஸ்வரம் புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றதுடன், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 2017.03.31 வெள்ளிக்கிழமை சென்னையிலுள்ள இல்லத்திலும் நடைபெறவுள்ளது என்பதனைத் தெரியப்படுத்துகின்றோம்.

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும்
4ஆம் வட்டாரம், வேலணை கிழக்கை வாழ்விடமாகவும்,
தற்போது சென்னையில் வசித்து வந்தவருமாகிய

## அமரர் திருமதி முத்துலிங்கம் பகவதி

மண்மகிழ 06.10.1933 — அவர்கள் — கண்நெகிழ 01.03.2017

பிரிவால் துயருறும்
**சி. தமிழ்ச்செல்வன் (மருமகன்), "சைஜுகா ரேடர்ஸ்" மற்றும்**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
கொழும்பு - 15

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

**தோற்றம்**
**01.10.1941**

**மறைவு**
**09.02.2017**



கடந்த 09.02.2017
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்

**அமரர்**

## கிட்டிணன் சிவப்பிரகாசம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 31.03.2017 வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்தவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகவும், இணையத்தளங்கள் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும், துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டவர்களுக்கும், எமது துன்ப வேளையில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தோருக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்**

**அருள்நந்தி - 077 420 3780**
**சிவரூபன் - 076 838 3724**

**கூவில்,**
**புலோலி தெற்கு, புலோலி.**

## மரண அறிவித்தல்

### சிவகுருநாதன் அருணகிரிநாதன்



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுருநாதன் அருணகிரிநாதன் நேற்று (30.03.2017) வியாழக்கிழமை இறை வனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் பார்வதியார் தம்பதி யரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சிவகுரு. அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் அ. கோபிதனின் (UK) பாசமிகு தந்தையும் லைசா(UK)அவர்களின் மாமனும் கிருஸ்ணன் (UK). தர்ஷிகா (UK) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரமேஸ்வரி. பொலிஸ் பொன்னையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் திலகவதி, காலஞ்சென்ற கமலாவதி மற்றும் பத்மாவதி, தங்கேஸ்வரன், புனிதவதி, விவேகவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில்இன்று(31.03.2017)வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகி பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சந்தை முன்பாக**
**திருநெல்வேலி**
**021 222 2178**

**தகவல்**
**அ. புஸ்பவதி**
**(மனைவி)**

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை சின்னத்துரை



புலோப்பளை பளையைப் பிறப்பிடமாகவும், டச்சு வீதி, கட்டப்பிராயை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சின்னத்துரை (ஓய்வு பெற்ற விவசாய விஸ்தரிப்பு உத்தி யோகத்தர்) 30.03.2017 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இரத்தினேஸ்வரி யின் அன்புக்கணவரும் விஜயராசா, விமலராணி, விக்னேஸ்வரராஜா, விஜயேந்திரராசா, விபூசானந்தராசா, விஜயகுருராசா, விமலேந்திரன் காலஞ்சென்ற விமலேந்திராசா ஆகியோரின் அன்புத்தந்தையும் விஸ்வலிங்கம், உதயராணி, வசந்தகுமாரி ரஞ்சனா தேவி காலஞ்சென்ற இந்திராதேவி, சாந்தி கௌரி, நகுலேந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.03.2017) வெள்ளிக் கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்க எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**டச்சு வீதி, கட்டப்பிராய்.**
**077 975 7549**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சவேந்திர...

சொல்ல முடிகிறது என்று கேள்வி எழுப்பப்பட்டபோது, இராணுவத்தினரிடம் இருக்கும் சரணடைந்தவர்கள் பட்டியலின் அடிப்படையிலேயே தான் அதைச் சொல்கிறார் என்று தெரிவித்திருந்தார். அப்படியானால் அந்தப் பட்டியலை நீதிமன்றத்திடம் வழங்குமாறு மன்று உத்தரவிட்டது.

ஆனால், பின்னர் சரணடைந்தவர்கள் பட்டியல் ஏதுமில்லை என்றும் சரணடைந்து மறுவாழ்வு பெற்றவர்களின் பட்டியல் மட்டுமே இருப்பதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார். நேற்றும் அதையே அவர் மன்றில் கூறினார்.

இராணுவத்தினரிடம் யாராவது சரணடைந்திருந்தால் அது பற்றிய விவரங்கள் அப்போதைய அதிகாரியாக இருந்தவரான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவிடமே இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதையடுத்து சவேந்திர சில்வாவை விசாரணைக்கு உட்படுத்துவதற்காக அவரை நீதிமன்றுக்கு வரும்படி கட்டளையிடுமாறு நீதிமன்றத்திடம் வலியுறுத்தினார். அதற்காக நீதிமன்றம் அழைப்பாணையை பிறப்பிக்க வேண்டும் என்றும் கோரிக்கை முன்வைத்தார்.

அரச தரப்பு சட்டத்தரணி இந்தக் கோரிக்கைக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டார். இந்த வழக்குடன் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எவ்விதத்திலும் தொடர்பில்லை என்று தெரிவித்த அரச தரப்பு சட்டத்தரணி, அவருக்கு எதிராக அழைப்பாணையை நீதிமன்றம் பிறப்பிக்கக் கூடாது என்றும் வாதிட்டார்.

இறுதிப்போரில் 58ஆவது படைப் பிரிவே முக்கிய பங்காற்றியதோடு படையினரிடம் சரணடைந்தவர்கள் தொடர்பான விவகாரம் குறித்தும் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை விசாரணைக்கு உட்படுத்த நீதிமன்றம் அனுமதிக்க வேண்டும் என்று சட்டத்தரணி ரட்ணவேல் வலியுறுத்தினார்.

இதனைக் கவனத்திற்கொண்ட நீதிவான், இந்த வழக்கு மீதான விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததோடு, இந்தக் கோரிக்கை தொடர்பில் நீதிமன்றத்தின் முடிவை அன்றைய தினம் அறிவிப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை 2009ஆம் ஆண்டு ஆயுதப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் அப்போது அரச தலைவராக இருந்த மகிந்த ராஜபக்ச அரசினால், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு பதவிஉயர்வு கிடைத்ததோடு, அவர் அமெரிக்காவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதியாகவும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-4, 7)

## அச்சுவேலி...

ரூபா தண்டம் செலுத்த வேண்டும் என்றும் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம், அச்சுவேலி கதிரிப்பாய்ப் பகுதியில் 2014ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி குற்றவாளியான தனஞ்செயன், அவரது மனைவியின் தாயாரான நற்குணானந்தன் அருள்நாயகி, மனைவியின் மூத்த சகோதரி யசோதரன் மதுசா மற்றும் மனைவியின் இளைய சகோதரன் நற்குணானந்தன் சுபாங்கன் ஆகிய மூவரையும் வாளால் வெட்டிக் கொலை செய்ததுடன், மனைவியான தனஞ்செயன் தர்விகா, மனைவியின் மூத்த சகோதரியின் கணவரான யசோதரன் ஆகியவர்களுக்கு படுகாயத்தை விளைவித்தார் என்று அவர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டது.

தனது மனைவிக்கு மறுதிருமணம் செய்து வைத்துவிட்டார்களோ என்ற சந்தேகத்தில் ஆத்திரப்பட்டு மனைவியின் குடும்பத்தினரை வெட்டிச் சாய்த்தேன் என்று தனஞ்செயன் நேற்றுமுன்தினம் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

இந்த நிலையில் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் வழக்கு நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதன் அடிப்படையில் இரு தரப்புச் சட்டத்தரணிகளின் தொகுப்புரை அவசியமற்றது என்று மன்று அறிவித்தது.

"இந்தக் கொலைச் சம்பவம் திட்டமிட்ட ஒரு செயற்பாடு என்பது நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் எண்பிக்கப்பட்டுள்ளது என்பதை மன்று அறிகின்றது. இவை அனைத்தும் கொலை செய்யும் எண்ணத்துடன்தான் நடைபெற்றன என்பது புலனாகிறது. சாட்சியங்களில் மிக முக்கியமான சாட்சியாளரான எதிரியின் மனைவி தனஞ்செயன் தர்விகா. அவர் கண்கண்ட சாட்சியாளர். மற்றையது தார்விகாவின் மைத்துனனான யசோதரனுடைய சாட்சியம். ஏனைய மருத்துவ அதிகாரிகளின் நிபுணத்துவ சாட்சிகளின் அடிப்படையில் இறந்தவர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட காயங்கள் சாவை ஏற்படுத்தக் கூடியவை என்பதும் புலனாகின்றது.

எதிரியும் தனது சாட்சியத்தில், தன்னால்தான் இந்தக் கொலைகள் புரியப்பட்டன என்று தெரிவித்தார். இவற்றின் அடிப்படையில் இது ஒரு திட்டமிட்ட கொலை" என்றுநீதிபதிதீர்ப்பளித்தார்.

எதிரிக்கூண்டில் நின்ற குற்றவாளியான தனஞ்செயனைப் பார்த்து ஏதாவது சொல்லப் போகிறீரா என்று மன்று கேள்வியெழுப்பியது.

"நீதிபதி அவர்களே இந்தச்சம்பவம் சாதாரண குடும்ப பிரச்சினையால் ஏற்பட்ட விடயம். இந்தச் செயலால் எனது வாழ்க்கையும் எனது மனைவி பிள்ளையின் வாழ்க்கையும் பாதிக்கப்பட்டுள்ளது" என்று குற்றவாளி தெரிவித்தார்.

பின்பு குற்றவாளியின் மனைவியான தர்விகாவிடம், "என்ன தண்டனை கொடுக்கப் போகிறீர்கள். இது உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினை" என்று மன்று கேள்வியெழுப்பியது. அதற்குப் பதிலளித்த தர்விகா நீதிமன்றம்தான் இதற்கான தண்டனையை வழங்க வேண்டும் - என்றார்.

தண்டனைத் தீர்ப்பை நீதிபதி மா.இளஞ்செழியன் அறிவித்தார்.

"நற்குணானந்தன் அருள்நாயகியை வாளால் வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டுக்கு தூக்குத் தண்டனை, நற்குணானந்தன் சுபாங்கனை வாளால் வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டுக்கு தூக்குத் தண்டனை, யசோதரன் மதுசாவை வாளால் வெட்டிக் கொலை செய்த குற்றச்சாட்டுக்கு தூக்குத் தண்டனை எதிரிக்கு வழங்கப்படுகிறது.

தனஞ்செயன் தர்விகாவை வாளால் வெட்டிக் காயம் விளைவித்த குற்றச்சாட்டுக்கு 7ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 10ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்படுகிறது. தண்டப்பணம் செலுத்தத் தவறின் 6 மாத கால கடூழியச் சிறைத் தண்டனையை எதிரி அனுபவிக்க வேண்டும். அத்துடன், தர்விகாவுக்கு இழப்பீடாக 1 இலட்சம் ரூபா வழங்க வேண்டும். அதனைச் செலுத்தத் தவறின் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனையை எதிரி அனுபவிக்க வேண்டும்.

தங்கவேல் யசோதரனை வாளால் வெட்டிக் காயம் விளைவித்த குற்றச்சாட்டுக்கு 7ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 10 ஆயிரம் ரூபா தண்டமும் செலுத்த வேண்டும். தண்டப்பணம் செலுத்தத் தவறின் 6 மாதகால கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டும். யசோதரனுக்கு இழப்பீடாக ஒரு லட்சம் ரூபா வழங்க வேண்டும். அதனை வழங்கத் தவறின் 2 ஆண்டுகள் சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும்" என்று நீதிபதி தண்டனைத் தீர்ப்பளித்தார்.

"யாழ்ப்பாணத்தில் அதிகூடிய தண்டனையாக ஒரு குற்றவாளிக்கு மூன்று தூக்குத் தண்டனைகள் வழங்கப்படுவது இதுவே முதன் முறையாகும்" என்று நீதிபதி மா.இளஞ்செழியன் சுட்டிக்காட்டினார்.

நீதிமன்றத்தின் மின் விளக்குகள் அணைக்கப்பட்டன. சம்பிரதாயபூர்வமாக அனைவரும் எழுந்து நின்றனர். "குற்றவாளியின் தூக்குத் தண்டனையை அரச தலைவர் விரும்பும் நேரத்தில் அவரால் தீர்மானிக்கும் இடத்தில் குற்றவாளியின் உயிர் பிரியும் வரை தண்டனை நிறைவேற்றப்படும்" என்று கட்டளையிட்ட நீதிபதி, தீர்ப்பில் கையெழுத்திட்ட பேனாவை முறித்தெறிந்தார். மன்று கலைந்தது. 15 நிமிடங்களுக்கு நீதிமன்றச் செயற்பாடுகள் ஒத்திவைக்கப்பட்டன.

வழக்குத் தொடருநர் தரப்பில் அரச சட்டவாதி நா. நிஷாந் மன்றில் முன்னிலையாகியி ருந்தார். எதிரி தரப்பு சட்டத்தரணி திருக்குமரன் சார்பில் சட்டத்தரணி ஜெயந்தாவும் பாதிக்கப்பட்டவர்கள் நலன்சார்பில் சட்டத்தரணிகளான கௌதமன், பார்த்தீபன் ஆகியோரும் முன்னிலையாகியிருந்தனர். (வ-12)

## வவுனியாவிலும்...

ஆரம்பிக்கப்பட்டன. கொலைக் குற்றச்சாட்டில் தில்லையம்பலன் மகேஸ்வரன் அல்லது ரவி மற்றும் சுப்பிரமணியம் மயில்வாகனம் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிவான் மன்றில் விசாரணை நடைபெற்று விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் இந்த வழக்கு சட்டமா அதிபரால் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் 8ஆம் திகதி வவுனியா மேல் நீதிமன்றில் சந்தேகநபர்கள் இருவருக்கு எதிராகவும் குற்றப்பத்திரிகை முன்வைக்கப்பட்டது. விசாரணைகள் இடம்பெற்று வந்தன.

இந்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன் முன்னிலையில் நேற்று தீர்ப்புக்காக எடுக்கப்பட்டது.

"விசாரணைகள் நிறைவில் இரண்டாம் எதிரியான சுப்பிரமணியம் மயில்வாகனத்துக்கு எதிரான குற்றத்தை வழக்குத் தொடுநர் தரப்பால் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படவில்லை" என்று அறிவித்த மன்று, அவரை விடுதலை செய்தது.

"முதலாம் எதிரியான தில்லையம்பலன் மகேஸ்வரன் அல்லது ரவி என்பவரே கொலையைப் புரிந்தார் என்பதனை வழக்குத் தொடுநர் தரப்பு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் சாட்சியங்கள் மூலமாக நிரூபித்துள்ளது" என்று மன்று அறிவித்தது.

திறந்த நீதிமன்றில் தண்டனைத் தீர்ப்பு வழங்குவதற்காக மின் குமிழ்கள் மின்விசிறிகள் அனைத்தும் அணைக்கப்பட்டன. நீதிபதி உட்பட மன்றில் இருந்த அனைவரும் எழுந்து நின்றனர்.

"குற்றவாளியான தில்லையம்பலன் மகேஸ்வரன் அல்லது ரவி என்பவரக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. அரசதலைவர் விரும்பும் நேரத்தில் அவரால் தீர்மானிக்கப்படும் இடத்தில் குற்றவாளிக்கு உயிர் பிரியும் வரை தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படும்" என்று நீதிபதி தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். அந்தத் தீர்ப்பில் கையொப்பமிட்ட பேனாவை நீதிபதி முறித்தார். மன்று கலைந்தது. (வ-4)

## சிப்பாய்க்கு..

தீர்ப்புக்காக நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. முல்லைத்தீவு இராணுவ முகாமில் 2012ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி பதவி நிலை சார்ஜனான தர்மரத்தின என்பவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார். கொலைக் குற்றச்சாட்டில் மெனிக்றாலகே குணதாசா என்ற இராணுவக் கோப்ரல் கைது செய்யப் பட்டார். அவருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

விசாரணைகளின் மூலமாக எதிரி மீதான கொலைக் குற்றம் நிரூபிக்கப்படுவதாகத் தெரிவித்த வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன், குற்றவாளிக்குத் தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

அதன்படி, திறந்த நீதிமன்றில் மின் விசிறிகள், மின்குமிழ்கள் அனைத்தும் அணைக்கப்பட்டு நீதிமன்றிலிருந்த அனைவரும் எழுந்து நிற்க நீதிபதி தூக்குத் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (த-4)

## சிவில்உடை...

பெண், மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

இந்த நிலையில் நேற்றைய தினம் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், "நேற்று (நேற்று முன்தினம்) இரவு 8.30 மணியளவில் வீட்டுக் கதவை பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது. நான் கதவைத் திறக்க முற்பட்டேன். அப்போது கதவுக்கு வெளியில் நின்றவர் காலால் உதைந்ததால் கதவு சட்டெனத் திறந்தது. இதனால் எனது கையில் காயம் ஏற்பட்டது. சிவில் உடையில் வந்திருந்த பொலிஸார் எனது வயிற்றில் காலால் உதைந்தார். வீட்டின் வெளியே பொலிஸ் உடையில் இருவர் நின்றிருந்தனர். தாக்குதல் நடத்தியவர்கள் நெல்லியடிப் பொலிஸார் என்பது எனக்குத் தெரியும்" என்றார்.

தாம் விசாரணைக்காக அந்தப் பகுதிக்குச் செல்லவில்லை என்றும், அந்தப் பகுதி தமது கட்டுப்பாட்டுக்குரிய பகுதி இல்லை என்றும் நெல்லியடிப் பொலிஸார் குறிப்பிட்டனர். (வ-5.26)

## இனவாதம்...

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாகாண சபைகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுச் சுபாநாயகர் உள்ளிட்ட பதவிகளின் அடிப்படையில் கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இணங்கியுள்ளன. ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. ஆகிய கட்சிகளே தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. நாடாளுமன்றக் கட்டமைப்பைப் போன்று மாகாண சபைகள் உருவாக்கப்பட்டு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுமாயின் இலங்கையில் 9 நாடாளுமன்றங்கள் செயற்படும். இவ்வாறு 9 நாடாளுமன்றங்கள் இயங்க ஆரம்பிக்குமாயின் அது நாட்டில் பெரும் பிரச்சினை களைத் தோற்றுவிக்கும். பெரும் பொருளாதாரப் பிரிவினைகள் ஏற்படும். தெற்கில் உற்பத்தி செய்யப்படும் சில பொருளாதாரப் பண்டங்கள் வடக்கில் தடை செய்யப்படும். வடக்கில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கு தெற்கில் தடை ஏற்படும். மாகாண சபைகளின் காணி மற்றும் பொலிஸ் உள்ளிட்ட முக்கிய அதிகாரங்கள் தொடர்பாகத் திருத்தங்களை மேற்கொண்டு 2013ஆம் ஆண்டு வடக்கு மாகாண சபையின் தேர்தலை நடத்துமாறு அன்று அரச தலைவர்மகிந்த ராஜபக்சவிடம் கோரிக்கை விடுத்தோம்.

விக்னேஸ்வரனும், வாசுதேவ நாணயக்கரவும் சம்பந்திகள் என்பதால் வாசுவின் ஊடாக விக்னேஸ்வரனை வழிநடத்தலாம் என்று எண்ணி மகிந்த ராஜபக்ச வடக்கு மாகாண சபையை அமைத்தார். ஆனால், விக்னேஸ்வரன் இனவாதத்தையே தூண்டிவிட்டார். அவரின் இனவாதச் செயற்பாடுகளால் தெற்கிலும் இனவாதம் தலைதூக்கியுள்ளது. தெற்கில் இனவாதம் தூண்டப்பட விக்னேஸ்வரனே காரணம் என்றார். (த-4)

## ஆளுநர்...

இலங்கை அரசமைப்பை அவரது அலுவலகத்துக்கு முன்னால் தீயிட்டுக் கொளுத்துவேன் என வடக்கு மாகாண சபைஉறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் வேலைவாய்ப்பு விண்ணப்பவிளம்பரத்தில் மாற்றங்களைச் செய்யவேண்டும் என வலியுறுத்திப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை ஒன்றை மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி சபையில் முன்மொழிந்தார்.

இந்தப் பிரேரணை மீதான விவாதத்தின்போது, பிரேரணையின் ஊடாக வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழுவையும் வடக்கு மாகாண ஆளுநரையும் இந்தச் சபை கோருகின்றது என்று மாற்றம் செய்யப்படவேண்டும் என மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா அரசமைப்பு ரீதியாக வடக்கு மாகாண ஆளுநரைக் கோர அனுமதி இல்லை எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண சபையின் ஊடாக சில விடயங்கள் ஆராயப்பட்டு அரச தலைவரையும் தலைமை அமைச்சரையும் இந்தச் சபை கோருகின்றது எனச் சபையில் தீர்மானங்கள் எடுக்கப்படும்போது இவர்களுக்கு கீழ் உள்ள ஆளுநரை ஏன் நாம் நேரடியாகக் கோரமுடியாது எனக் கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஏதாவது ஓர் இடத்தில் கூறுவாரானால் இலங்கையின் அரசமைப்பை வடக்கு ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகத் தீயிட்டுக் கொளுத்துவேன் எனவும் அவர் ஆவேசமாகச் சபையில் தெரிவித்தார். (த-8)

## வில்பத்து...

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வில்பத்து வனப் பகுதிக்கு வடக்குத் திசையில் அமைந்துள்ள 4 வனப் பிரதேசங்களையும் வில்பத்து வனத்துடன் இணைத்துப் பாதுகாக்கப்பட்ட வனப் பிரதேசமாகப் பெயரிடும் வர்த்தமானி கடந்த வாரம் அரச தலைவர் மைத்திரிபாலவினால் கையெழுத்திடப்பட்டது.

இந்த வர்த்தமானியின் மூலம் தற்போது மக்கள் வாழ்ந்து வரும் கிராமங்கள், காணிகள், வீடுகள் இஸ்லாமிய புனித தலங்கள் என்பன அரசிற்கும் வனப் பாதுகாப்புத் திணைக்களத் துக்கும் கையகப்படுத்தப்பட்டுள்ளன என்று தனிப்பட்ட மற்றும் அரசியல் நோக்கங்களுடன் சிலர் பொய்யான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மக்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு அண்மித்ததாகக் காணப்படும் வனப் பகுதியினதும் பிரதேச மக்களினதும் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்தும் நோக்குடனேயே இந்த வனப்பகுதிகள் பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசமாகப் பெயரிடப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட பிரதேசங்களில் தற்போது வாழ்ந்து வரும் மற்றும் மக்களுக்கு சட்டபூர்வமான உரிமை காணப்படும் கிராமங்கள், காணிகள், வீடுகள் மற்றும் இஸ்லாமிய வணக்க தலங்கள் ஆகிய எதுவுமே இந்த வர்த்தமானியின் ஊடாக அரசுக்குக் கையகப்படுத்தப்படவில்லை என்று அரச தலைவர் குறிப்பிட்டதாக அந்தப் பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுவர்ப் பத்திரிகை

## பண்ணை விலங்குகள்



### காவல் நாய்கள்

விவசாயிகள் காவல் நாய்களை. ஆட்டு மந்தைகளையும் விவசாய நிலங்களையும் பாதுகாக்க பயன்படுத்துகின்றனர். இந்த நாய்கள் மிகவும் புத்திசாலிகள். இவற்றை எளிதில் பழக்கப்படுத்தி விடலாம் இந்த கலப் பற்ற அல்சேஷன் நாய்கள் அடர்ந்த முடி களையுடையவை.



### பன்றிகள்

விவசாயிகள் பன்றிகளை இறைச்சிக்காக வளர்க்கின்றனர். பன்றி இறைச்சியில் அதி களவு கொழுப்பு உண்டு. இறைச்சிக்கு 6 மாதம் முதல் ஒரு வயது வரையிலானபன்றி கள் விரும்பப்படு கின்றன. பன்றிஒரே பிரச வத்தில் பத்துக்கும் மேற்பட்ட குட்டிகளை ஈனும்.



### பண்ணை மாடுகள்

விவசாயிகள் மாடுகளை பண்ணைகளில் பால் உற்பத்திக்காக வளர்க்கின்றனர். முன்பு பால் கைகளாலேயே கறந்து எடுக் கப்படும். தற்போது இயந்திரம் மூலம் மடியி லிருந்து பால் எடுக்கப்படுகிறது.



### கோழிகள்

விவசாயிகள் கோழிகளை இறைச்சிக்கா கவும் முட்டைக்காகவும் வளர்க்கின்றனர். சேவற்கோழிகள் பேட்டுக்கோழிகளை விட வும் பெரிய கொண்டையும் நீண்ட வாலும் உடையவை. சேவல் சூரியன் உதிக்கு முன் கூவும். இவற்றைத் திறந்த வெளிகளில் விட்டு வளர்ப்பார்கள். ஆனால் மின்சாரம் மூலம் பொரிக்க வைக்கப்படும் கோழிகள் பண்ணைகளில் அடைத்து வைத்து வளர்க்கப்படும்.


### செம்மறி ஆடுகள்



செம்மறி ஆடுகள் உரோமங்களுக்காகவும் இறைச்சிக்காகவும் வளர்க்கப்படுகின்றன. ஆண்டுக்கு ஒருமுறை செம்மறி ஆட் டின் உடலில் இருந்து உரோமம் எடுக்கப்படுகிறது. தற்போது கைகளால் உரோமம் எடுக்கப்படுவதில்லை. இயந்திரம் மூலமே இவை அகற்றப்படும். இப்படி உரோமம் எடுக்கப்படு வதால் ஆட்டுக்கு எந்தவித காயமும் ஏற்படாது. இதன் பாலிலி ருந்து வெண்ணெய் மற்றும் பாற்கட்டி (சீஸ்) என பலவும் தயாரிக்கப்படுகின்றனர்.

## எதிர்ப்பால் சொற்களை அம்புக் குறிகளால் இணைப்போம்

| | |
|---|---|
| 1. உழவன் | நண்பி |
| 2. நண்பன் | மனைவி |
| 3. தந்தை | குறத்தி |
| 4. சிறுவன் | தமிழச்சி |
| 5. இடையன் | உழத்தி |
| 6. தமிழன் | ஆசிரியை |
| 7. குறவன் | பேர்த்தி |
| 8. பேரன் | தாய் |
| 9. கணவன் | இடைச்சி |
| 10. ஆசிரியன் | சிறுமி |



புள்ளிகளை இணைத்து படம் வரைவோம்

## ஒரு சொல் இரு பொருள்

மாதுளை என்றால் ஒரு வகைக் கனி
மா – துளை என்றால் பெரிய துவாரம்

நாவாய் என்றால் மரக் கலம்
நா – வாய் என்பது இரு உறுப்புகள்

பாவாடை என்றால் பெண்கள் உடை
பா – வாடை என்றால் பாட்டு வாசனை

மாதிரி என்றால் உதாரணம்
மா – திரி என்றால் மா திரித்தல்

கவிகை என்றால் குடை
கவி – கை என்றால் கவிஞர் கரம்

அதிகாரம் என்றால் ஆட்சி உரிமை
அதி – காரம் என்றால் அதிக உறைப்பு

செவ்வாய் என்றால் ஒரு கோள்
செவ் – வாய் என்றால் சிவந்த இதழ்

திருக்கை என்றால் ஒரு வகை மீன்
திரு – கை என்றால் அழகிய கை

கல்வியிலாதவன் என்றால் கல்வியறிவு இல்லாதவன்
கல்வியில் – ஆதவன் என்றால் கல்வியில் மேம்பட்டவன்

தாவரம் என்றால் மரம்
தா – வரம் என்றால் வரம்தா

கோகுலம் என்றால் குயில்
கோ – குலம் என்றால் இடையர் குலம்

பார்த்திட ஒரு சொல் போல் இருக்கும் – பதம்
பிரித்திட மறு பொருள் உருவெடுக்கும்

(தமிழ்) வார்த்தைகள் இப்படி சுகம் கொடுக்கும் – சொல்ல
வாயொடு மனத்திலும் மகிழ்விருக்கும்



## சிங்கத்தின் தீர்ப்பு

பள்ளியில் ஏற்பாடு செய்திருந்த வனப்பகுதிச் சுற்றுலாவுக்கு கஜன் என்ற 11 வயதுச் சிறுவன் தன் நண்பர்களோடு சென்றிருந்தான். அவன் மிகுந்த புத்திசாலி. எனினும் வனப் பகுதி என்பதால் அவனுக்குள் கொஞ்சம் பயமும் ஏற்பட்டிருந்தது. காட்டுக்குள் சிறிது தூரம் சென்றிருப்பார்கள். அங்கே ஒரு பெரிய மரமொன்றின் கீழ் கூண்டு ஒன்றில் சிங்கம் ஒன்று அடைபட்டுக்கிடந்து முனகிக் கொண்டிருந்ததைக் கண்டனர். சிங்கத்தின் காலில் காயமொன்றும் ஏற்பட்டிருந்தது. அப்போது கஜனுக்கு பிற உயிர்கள் பற்றி வகுப்பாசியர் கூறிய ஒரு விடயம் நினைவுக்கு வந்தது. "பறவைகள் விலங்குகள் எல்லாம் இறைவன் படைப்புக்களே. எல்லா உயிர்களிடத்தும் நாம் அன்பு செலுத்த வேண்டும். இதையே ஜீவகாருண்யம் என்பார்கள். உண்மையான மனிதன் துன்பப்படும் உயிர்களுக்கு உதவி செய்வான்" இப்போது கஜன் சிங்கத்தின் கூட்டை நெருங்கினான். சிங்கம் கண்களில் கண்ணீருடன் அவனை நம்பிக்கையுடன் பார்த்தது. அதனது பார்வை அவனிடம் தனக்கு உயிர்ப் பிச்சை கேட்பது போல இருந்தது. சிங்கத்தின் மேல் அவனுக்கு இரக்கம் ஏற்பட்டது. அவன் கூட்டைத் திறக்கப் போகையில் நண்பர்கள் தடுத்தனர். அவனது அறிவும் அவனை எச்சரித்தது. ஆனால் கஜனோ கூட்டைத்திறந்து விட்டான்.

நண்பர்கள் கூச்சலிட்டபடி தலை தெறிக்க ஓட சிங்கம் காட்டுக்குள் செல்லாமல் கஜனை நோக்கி வந்தது. அவனோ பயத்தினால் வெலவெலத்துப் போனான் "உதவி உதவி" என்று கூச்சலிட்டான். சிங்கத்தை நோக்கி கை கூப்பி " சிங்கராஜாவே" இது என்ன நியாயம் என் நண்பர்கள் தடுத்தும் நான் உன்னைத் திறந்து விட்டேனே. ஆனால் நீயோ என்னைக் கொல்லத் துணிந்தாய்" என்று கூறி வருத்தப்பட்டான். இப்போது அவ்விடத்தில் காட்டு மிருகங்களும் பறவைகளும் கூடி விட்டன. ஒவ்வொன்றும் "இந்தச் சிறுவனைக் கொல்லுங்கள். நன்றியில்லா மனிதர்களின் வாரிசு இவன்" என்று சத்தமிட்டன. "நான் உங்களுக்கு செய்த கெடுதல் மகாராசாவைத் திறந்து விட்டதுதானா?" என்றான் கஜன். ஆனால் அதனைக் கருத்தில் எடுக்காத யானையோ "எம்மை எம் போக்கில் வாழவிடாமல் பிடித்து ப[illegible] தல், துன்புறுத்[illegible] ளில் வேடிக்கைப் பொருள்களாக ஆக்குதல், எமது அரிய தந்தங்களை எடுப்பதற்காக கொல்லுதல் முதலான துன்பங்களைச் செய்கிறீர்கள்" என்றது. மானோ " எங்களை இறைச்சிக்காகவும் கஸ்தூரிக்காகவும் பொழுது போக்குக்காகவும் வேட்டையாடி அழிக்கின்றனர்" என்றது. இதனை மரத்தின் மேலிருந்து கேட்டுக் கொண்டிருந்த குரங்கோ "மான்களை இறைச்சிக்காக வேட்டையாடுவது சரி. அத்தோடு எம்மையும் வேட்டையாடி மானிறைச்சியோடு தூங்குமான் இறைச்சி என்ற பெயரில் கலப்படம் செய்தும் விற்பனை செய்கிறார்களே! அது மட்டுமா? தாம் வளர்க்கும் வீட்டு விலங்குகளையாவது விட்டு வைக்கிறார்களா? ஆடு, மாடு, கோழி, பன்றி என்று இவற்றை அடித்து குளம்பு வைத்து உண்ணுவது மட்டுமல்ல, கோயில்களில் ஆடு, சேவல்களைப் பலி செலுத்துவது என்ற பேரிலும் கொல்லுகிறார்கள்" என்றது. இப்படி காட்டு மிருகங்கள் ஆளுக்காள் மனிதர் மேல் குற்றங்[illegible] கொண்டிருந்தன. சிங்கமோ "[illegible] என்னைக் கூண்டில் அடைத்தவனும் மனிதன். இப்போது வெளியே கொண்டு வந்தவனும் மனிதன். நன்மைக்குத் தீமை செய்வது மனிதருக்கு வேண்டுமானால் இயல்பானதாக இருக்கலாம். ஆனால் எமக்கு அது இயல்பல்ல. ஒன்றும் அறியாத இச் சிறுவனை நான் கொன்று விட்டால் பிறகு எமக்கும் மனிதருக்கும் என்ன வித்தியாசம். எல்லா மனிதர்களும் கெட்டவர்கள் அல்லவே! எனக்கு நன்மை செய்த இச்சிறுவ்னைப் பழி வாங்குவது நியாயமல்ல" என சிங்கம் கூறி முடிக்கவும் சிங்கத்தை மயக்கமடைய வைத்து கூட்டில் அடைத்து விட்டு சாப்பிடச் சென்ற மிருகக் காட்சி சாலைப் பணியாளர்கள் வரவும் சரியாக இருந்தது. சிங்கம் சிறுவனுக்கு தீங்கு செய்யப் போகிறது என எண்ணிய அவர்கள் அதனைத் துப்பாக்கியால் சுடத் தொடங்க, கஜன் "யாரும் சுடாதீர்கள் சுடாதீர்கள்" என கத்தினான். நடந்தவற்றை எல்லோருக்கும் எடுத்துரைத்தான். கஜனோடு வந்த மற்றைய சிறுவர்களும் அவனோடு சேர்ந்து இனிமேல் உயிர்களைத் துன்புறுத்த மாட்டோமென உறுதி எடுத்துக் கொண்டனர்.

**உயிர்களிடத்து அன்பு செய்வோம்**
**"காலத்தினாற் செய்தநன்றிசிறிதெனினும்**
**ஞாலத்தின் மாணப் பெரிது"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காலிறுதியில் பெடரர்

மியாமி ரென்னிஸ் தொடரில் காலிறுதிக்குத் தகுதிபெற்றார் சுவிற்சர்லாந்தின் நட்சத்திர வீரரான றோயர் பெடரர்.

மியாமி ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டமொன்று (நான்காம் சுற்று ஆட்டம்) நேற்று முன்தினம் நடந்தது.

பெடரரை எதிர்த்து ஸ்பெய்ன் வீரர் பாவ்டிஸ்டா மோதினார். மூன்று செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 7:6, 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றார் பெடரர். (ம)

## பிரதேச செயலக பூப்பந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் நடத்தத்திட்டமிட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பூப்பந்தாட்டத் தொடரின் ஆண்களுக்கான ஆட்டங்கள் நாளை ஆரம்பமாகின்றன.

அரியாலை சரஸ்வதி உள்ளக விளையாட்டரங்கில் நாளை காலை 8.30 மணிமுதல் ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. முதலாவது ஆட்டத்தில் நல்லூர் பிரதேச செயலகத்தை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலகம் மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலகமும் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன. (ம-108)



## மோகனதாஸ் யாழ். பல்கலை காலிறுதியில்

யாழ்ப்பாணம், மார்ச் 31

அரியாலையின் 98 ஆவது சுதேசியத் திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு இரு பிரிவுகளாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் பி பிரிவில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் என்பன காலிறுதிக்குத் தகுதி பெற்றன.

அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் புத்தூர் குருநாதர் விளையாட்டுக் கழகமும் மோதின. 3 செற்களைக் கொண்டதாக இந்த ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை வகித்தது மட்டுவில் மோகனதாஸ் அணி. அந்த அணி தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து இரண்டாவது செற்றை 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு ஆட்டதில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக அணியும் புத்தூர் சோமஸ்கந்தன் விளையாட்டுக் கழகமும் மோதின. இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 23:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தது பல்கலை. ஆனால் சரிவில் இருந்து மீண்ட அந்த அணி அடுத்த இரு செற்களையும் முறையே 25:20, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108-23)

## ஆதிசக்தி முன்னேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் முன்னேற்றம் கண்டுள்ளது.

ஆட்டங்கள் அனைத்தும் திக்கமுனை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆதிசக்தி வி.கழக 'ஏ' அணியும் வல்வை நெடியகாடு இளைஞர்கள் வி.கழக அணியும் பலப்பரீட்சை நடத்தின.

ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் ஆதிசக்தியின் முன்கள வீரர் கௌரிதாசன் அந்த அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 1:0 என்ற ஆதிசக்தியின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல்பாதி.

கௌரிதாசன் மற்றும் நிர்மலராஜ் இருவரும் ஆதிசக்தியின் சார்பாக கோல்களை அடுக்க முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது ஆதிசக்தி அணி. ஆட்ட நாயகனாக கௌரிதாசன் தெரிவுசெய்யப்பட்டார். (ம-108)

## அரியாலையின் கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட அணிகளுக்கு இடையில் இரு பிரிவாக நடத்தத்திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரில் ஏ பிரிவு ஆட்டங்கள் அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நாளை நடைபெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## மேசைப்பந்தாட்டத் தொடர் நாளை ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 31

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் நடத்தத்திட்டமிட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மேசைப்பந்தாட்டத் தொடரின் பெண்களுக்கான ஆட்டங்கள் நாளை ஆரம்பமாகின்றன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நல்லூர் பிரதேச செயலகத்தை எதிர்த்து சங்கானை பிரதேச செயலகம் மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் பிரதேச செயலகமும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணியும் பருத்தித்துறை பிரதேச செயலக அணியை எதிர்த்து உ்டுவில் பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன. (ம-108)



போர்த்துக்கலில் உள்ள புஞ்சால் விமான நிலையம் கிறிஸ்ரியானோ றொனால்டோ விமான நிலையம் என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதையொட்டி அந்த விமானநிலையத்தில் றொனால்டோவின் மார்பளவு வெண்கலச் சிலையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 31

மன்னார் சின்னக்கடை கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம் மன்னார் மாவட்ட ரீதியாக நடத்தத்திட்டமிட்ட தம்பா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன.

ஆட்டங்கள் காலை முதல் மாலை வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் 48 கழகங்கள் பங்குபற்றுகின்றன என ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)



## இளைஞர் வி.க. துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31

புலோலி இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம் மாவட்ட ரீதியாக 21 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையில் துடுப்பாட்டத் தொடரொன்றை எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் புற்றளை மைதானத்தில் நடத்தவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பதிவுகளை கழகத்துடன் தொடர்பு கொண்டு மெற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-108)

## கால்பந்தாட்டம் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 31

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட பிதேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்குமான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன. (ம23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பி.செயலகங்களின் கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 31
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் நடத்தத்திட்டமிட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவு ஆட்டங்கள் நாளை ஆரம்பமாகின்றன.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய விளையாட்டரங்கில் நாளை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பணம் பிரதேச செயலகத்தை எதிர்த்து ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் மோதவுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் உடுவில் பிரதேச செயலக அணியை எதிர்த்து மருதங்கேணி பிரதேச செயலக அணியும் கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானை பிரதேச செயலகமும் வேலணை பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணியும் சாவகச்சேரி பிரதேச செயலகத்தை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலகமும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து நெடுந்தீவு பிரதேச செயலகமும் காரைநகர் பிரதேச செயலகத்தை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலகமும் மோதவுள்ளன. (ம-108)



# கோக்லிக்கு எதிர்ப்பலை

ஆஸ்திரேலிய வீரர்கள் இனி நண்பர்கள் இல்லை என்று இந்திய அணித்தலைவர் கோக்லி தெரிவித்திருந்த நிலையில் அவரது கருத்துக்கு கடும் எதிர்ப்புக்கள் உருவாகியுள்ளன.
ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. 2:1 என்ற கணக்கில் இந்தியா சம்பியனானது. தொடரைக் கைப்பற்றிய பின்னர் கோக்லி கருத்துத் தெரிவிக்கையில் ஆஸ்திரேலிய வீரர்கள் இனிவரும் காலங்களில் எமக்கு நண்பர்கள் இல்லை என்று குறிப்பிட்டார்.
தொடரின்போது சிமித் ஓய்வறையை நாடிய விவகாரம், வார்த்தை மோதல்கள், கோக்லியின் காயத்தை ஆஸ்திரேலிய வீரர்கள் கேலி செய்தமை, ஜடேயாவுடன் வார்த்தை மோதலில் வேட் ஈடுபட்டமை, கோக்லியை ஆஸ்திரேலிய ஊடகங்கள் ட்ரம்புடன் ஒப்பிட்டுச் சாடியமை போன்ற சம்பவங்களாலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார் என்று கருதப்படுகிறது. இந்த நிலையில் கோக்லியின் இந்தப் பேச்சுக்கு முன்னாள் வீரர்கள் பலரும் தமது கண்டனத்தைத் தெரிவித்தனர்.
மார்க் ரெய்லர் (ஆஸ்திரேலிய முன்னாள் தலைவர்): கிரிக்கெட் வீரர்கள் ஒன்றிணைந்து நீண்ட நாள்கள் விளையாடுவார்கள். ஆஸ்திரேலியர்கள் இனி நண்பர்கள் இல்லை என்று விராட் கோக்லி தெரிவித்திருப்பது கண்டனத்துக்குரியது. இது மிகுந்த ஏமாற்றத்தை அளிக்கிறது.
டீன் ஜோன்ஸ் (ஆஸ்திரேலிய முன்னாள் வீரர்): கிரிக்கெட் ஒரு மிக சிறந்த விளையாட்டு. வெற்றியையோ, தோல்வியையோ பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. விராட் கோலி இதை கற்றுக் கொள்ள வேண்டும்.
டேவிட் லாயிட் (இங்கிலாந்து முன்னாள் வீரர்): ஆடுகளத்துக்கு வெளியே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை சச்சினிடம் இருந்து விராட் கோக்லி பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். எனத் தமது கருத்துக்களைப் பதிவுசெய்துள்ளனர். ஆஸ்திரேலிய ஊடகங்களும் கோக்லியை மீண்டும் வசைபாடியுள்ளன. (ம)


## சானியா இணை வெற்றி

மியாமி ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா (இந்தியா) மற்றும் பார்போரா (செக்குடியரசு) இணை வெற்றிநடை போடுகிறது.
நேற்றுமுன்தினம் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் சாயினா - பார்போராஇணையை எதிர்த்து வானியா கிங் (அமெரிக்கா) - ஜரோஸ்லாவா (கஜகஸ்தான்) இணை மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாகஆட்டம்அமைந்தது. முதல்இருசெற்களையும்முறையே 6:4, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி அரையிறுதிக்குத் தகுதிபெற்றது மிர்சா - பார்போரா இணை. சானியா பார்போராகூட்டணி எட்டிய 6ஆவது அரையிறுதி இதுவாகும். (ம)




## இலங்கைக்குச் சிக்கல்
## தொடரை சமன் செய்யுமா?

பங்களாதேஷ் - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒரு நாள் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி இலங்கைக்கு உள்ளது.
தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றிபெற்றது. இதனால் அடுத்த இரு ஆட்டங்களில் வெற்றிபெற்றால் மட்டுமே தொடரை வெல்லமுடியும் என்ற நெருக்கடி இலங்கைக்கு இருந்தது. இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. எனவே தொடரை குறைந்த பட்சம் சமப்படுத்த இந்த ஆட்டத்தில் வென்றேயாகவேண்டும் என்ற சிக்கல் இலங்கைக்கு இருக்கவே செய்கிறது. நாளை இலங்கை வென்றாலும் கிண்ணம் பங்களாதேஷிடம் இருந்து பறிக்கப்படமாட்டாது. (ம)



## இர்பானுக்கு வந்தது தடை

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான மொகமட் இர்பானுக்கு ஒருவருடம் தடை விதித்துத் தீர்ப்பிட்டது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை.
ஐ.பி.எல். தொடரின் பாணியில் பாகிஸ்தான் சூப்பர் லீக் என்னும் ரி-20 ஆட்டங்களை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடத்தியது. இந்தத் தொடரில் விளையாடிய சில பாகிஸ்தான் வீரர்கள் ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபட்டனர் என்று குற்றம்சாட்டப்பட்டது. அவர்களில் பாகிஸ்தான் தேசிய அணியில் இடம்பிடித்திருந்த வேகப்பந்துவீச்சாளர் மொகமட் இர்பானும் ஒருவர். அவர்கள் அனைவருக்கும் தற்காலித் தடை விதித்து விசாரணைகளைத் துரிதப்படுத்தியது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை. விசாரணையில் தன்னை ஆட்டநிர்ணயச் சூதாட்டத்தில் ஈடுபடுத்த தரகர்கள் அணுகியதை இர்பான் ஒப்புக்கொண்டார். இதையடுத்து அவருக்கு ஒருவருடம் தடை விதிக்கப்பட்டது. ஒரு மில்லியன் டொலர்கள் தண்டமும் விதிக்கப்பட்டது.
இந்தச் சம்பவத்துக்காக நாட்டு மக்களிடம் நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் என்னை மன்னிப்பார்கள் என நம்புகிறேன் என்று இர்பான் தெரிவித்தார். (ம)



## கோக்லிக்கு ஆதரவும் உள்ளது

ஆஸ்திரேலிய வீரர்கள் இனி நண்பர்கள் இல்லை என்று இந்திய அணித்தலைவர் கோக்லி தெரிவித்த கருத்துக்கு எதிர்பலை உள்ளதைப்போன்று அவருக்கு ஆதரவும் இருக்கவே செய்கிறது.
இந்திய அணியின் முன்னாள் வீரர் கம்பீர், கோக்லி தெரிவித்துள்ள கருத்துக்களை முழுவதுமாக நிராகரித்துவிட முடியாது. அவரின் கருத்துக்களில் ஏற்கத்தக்கவையும் உள்ளன என்று தெரிவித்தார்.
பிரபல ஹிந்தி நடிகர் அமிதாப் பச்சன், கோக்லி நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்காதமை குறித்து ஹட்ஜ் தெரிவித்தகருத்துக்கள்முட்டாள்தனமானவை என்று தெரிவித்தார்.
முன்னதாக ஹொட்ஜ், கோக்லி நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்காதமைக்கு ஐ.பி.எல். தொடரில் கொட்டும் பண மழையே காரணம் என்று சாடியிருந்தார். (ம)

## கால்பந்தாட்ட உலகக்கிண்ணம்; தகுதிபெற்றது பிரேசில்

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடருக்கு முதலாவது அணியாக பிரேசில் தகுதிபெற்றது.
உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதிச் சுற்று தற்போது பரவலாக நடைபெற்று வருகின்றன. தென்னமெரிக்க நாடுகளுக்கு இடையிலான பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பிரேசிலை எதிர்த்து பராகுவே மோதியது. கொடின்ஹோ 33 ஆவது நிமிடத்தில் கோலைப் பதிவுசெய்ய முதல்பாதியின் முடிவில் 1:0 என்று முன்னிலை பெற்றது பிரேசில். 64 ஆவது நிமிடத்தில் நெய்மரும் 84 ஆவது நிமிடத்தில் மார்செலாவும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் பிரேசில் அபார வெற்றிபெற்றது. இந்த வெற்றியின் மூலம் பிரேசில் அணி 33 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. இதன் மூலம் பிரேசில், தென்னமெரிக்கக் கண்டத்தில் இருந்து முதல் அணியாக உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளது.
இந்த கண்டத்தில் உள்ள 10 அணிகளில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் உலகக்கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதிபெறும். (ம)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna.

**2019 A/L புதிய பிரிவுகள்** | **கணித, உயிரியல் தொழில்நுட்ப பிரிவுகள்**

**ஆரம்பம் : 01.04.2017 சனி காலை 10.00 மணி**

## பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். இரு இடத்திலும் K.K.S றோட், இணுவில்.

**A/L 2019**
**தொழிநுட்பப் பிரிவு**
**ஆரம்பம்: 01.04.2017 சனி**
நன்கு தேர்ச்சி பெற்ற துறைசார் விரிவுரையாளர்களால்

| | |
|---|---|
| Engineering technology | Mr. ஜெயக்குமார்<br>Mr. விஜயபாலா<br>Mr. காந்தறூபன் |
| Science for technology | Mr. பிரதீபன்<br>Mr. ரவீந்திரன்<br>Mr. ஏகநாதன் |
| Bio System technology | Mr. நிறோஜன்<br>Mr. அருள்நேசன் |
| I.C.T | Mr. ஆயவன் |
| Media | Mr. கஜிதரன் |
| Agriculture | Mr. சஜீவன் |

**புதிய பிரிவு ஆரம்பம்**
யாழ்நகரில் - 8.00Am
இணுவில் - 11.30Am

Note: செயன்முறைக்கான விசேட பயிற்சிப் பட்டறை ஒவ்வொரு நிறுவனத்திற்கு அருகிலும் மாணவர்கள் வசதிக்காக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறியத்தருகின்றோம்.
* நீங்கள் விரும்பிய இடங்களில் உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

## சதாபொன்ஸ்
கல்வி நிலையம்
அல்வாய்
O/L துரித மீட்டல் வகுப்புகள்
**ஆரம்பம் - 31.03.2017 வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு**
A/L கலை. வர்த்தகப் பிரிவுகள் நடைபெறுகின்றன.

## D.C.M
யாழ். நகர் | சுன்னாகம்
**A/L 2019**
**கலை, வர்த்தக, தொழில்நுட்பம்**
ஆரம்பம் - 01.04.2017
சனி காலை 8.00 am

## மணமகள் தேவை
லண்டனில் (MSc IT) முடித்து நிரந்தர வேலை செய்யும் 1982 ஆம் ஆண்டு பிறந்த செவ்வாய் குற்றம் இல்லாத $18^{1/4}$ கிரக பாவமுடைய அழகிய யாழ் இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 5 அடி 10 அங்குல உயரமான மணமகனுக்கு பொருத்தமான மணமகள் உடனடியாக தேவை.
**தொடர்பு : 077 433 7559**

## NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD, JAFFNA.
ENGLISH MEDIUM
PHYSICS
BY:
MR.M. KUGANESWARAN BSC(HONS)
SAT & SUN
2018 A/L - 8.00 - 10.00
OPTICS
2017A/L - 10.00 - 12.00
MATTER AND RADIATION
2019 A/L - 12.00 - 2.00
MECHANICS
**ஆரம்பம் - 01.04.2017 SAT - 8.00 A.M**

## போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
கணக்காளர் சேவை
சனி 9.00-4.00
ஞாயிறு 8.00-1.00
ஆசிரியர் தெரிவு
சனி 9.00-2.00
ஞாயிறு 9.00-2.00
வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
சனி 1.00-5.00
தகவல் தொடர்பாடல் தொழினுட்ப உதவியாளர்
சனி 2.00-5.00
SLAS
முகாமைத்துவ உதவியாளர்
மூன்று பிரிவுகளாக நடைபெறுகின்றன
தொடர்பு
0766883394
0212223382
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு - யாழ் நகர்

# வோஸ்னியாக்கி அரையிறுதியில்

மியாமி ரென்னிஸ் தொடரில் அரையிறுதிக்குத் தகுதிபெற்றார் டென்மார்க் வீராங்கனை கரோலினா வோஸ்னியாக்கி.

அமெரிக்காவின் புகழ்பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான மியாமித் தொடர் தற்போது நடைபெற்றுவருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது. டென்மார்க் வீராங்கனை வோஸ்னியாக்கியை எதிர்த்து செக்குடியரசு வீராங்கனை லூசி சபரோவா மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:4 என்று கைப்பற்றினார் வோஸ்னியாக்கி. அவர் அடுத்த செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி இரண்டாவது செற்றையும் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார். முடிவில் அவர் 2:0 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேற்றம் கண்டார்.

(ம)

## விக்னா
யாழில் புகழ்பூத்த No-1 நிறுவனம்
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ். 077 662 9137
**O/L DAY CLASS (8.00-2.00)**
**ஆரம்பம் 03.04.2017 (8 மணி)**
- எமது நிறுவனத்தில் கற்ற 99% மாணவர்கள் சித்தியடைந்துள்ளார்கள்.
- அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.
- யாழ். நகரில் O/L Day Class இங்கு மட்டுமே.
- இவ்வருடம் பிரிவு 4 மட்டும்.
- அனுமதிகள் இன்று முதல். 60 மாணவர்களுக்கு மட்டும்.

## வீடு தேவை
கொழும்பில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்திற்கு யாழ். நகரப்பகுதியில் கல்வி நிறுவனம் நடத்துவதற்கு உகந்த வீடு வாடகைக்கு தேவை.
**தொடர்பு-071 432 5002**

## NEC
1. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
2. மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.

**A/L 2019**
**கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்**
புதிய பிரிவு ஆரம்பம்
01.04.2017 சனி 8.00 மணி
A/L 2018, 2017 Day Class பிரிவுகளுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
T.P. 077 469 6695

## போட்டிப் பரீட்சை வகுப்புகள்
**SLAS**
OPEN/ LIMITED
Sat, Sun-9.00-2.00
April 09,16 ஆம் திகதிகளில் மாதிரிப் பரீட்சைகள் நடைபெறும்.
**விரிவுரையாளர்கள்**
P. உமாசங்கர்
P. கமலதாசன்
மற்றும் துறைசார் விரிவுரையாளர்
- முகாமைத்துவ உதவியாளர்
- அபிவிருத்தி உத்தியோகத்தர்

Sat. Sun 2.00-5.00pm

**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ். நகர்.
T.P. 077 469 6695

## விஸ்டம்
விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல 63 சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**A/L தொழில் நுட்பப் பிரிவு**

**2017 விசேட வினாத்தாள் வகுப்புக்கள்**
- பொறியியல் தொழில் நுட்பம்
- உயிர் முறைமைகள் தொழில் நுட்பம்
- தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞானம்
- மூன்றாவது தெரிவுப் பாடங்கள் அனைத்தும்

ஆரம்பம்: 01ம் திகதி சனிக்கிழமை மாலை 5.00

**2019 பிரிவு II**
ஆரம்பம்
01ம் திகதி சனிக்கிழமை
காலை 8.30

தொடர்புக்கு: 077 248 7774
அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். | K.K.S றோட், இணுவில்

**A/L 2019**
**கலை, வர்த்தகம், தொழிநுட்பம்**
நீங்கள் நன்கு அறிந்த வழமையான ஆசிரிய குழுவினால்
**பிரிவு II**
ஆரம்பம் : 01.04.2017 சனி
யாழ் நகரில் : தொழிநுட்பம் , கலை
வர்த்தகம் 8.00 am
இணுவில் : கலைப்பிரிவு → 8.00 am
வர்த்தகப்பிரிவு → 1.00 pm
தொழிநுட்பப்பிரிவு → 11.30 pm
Note:-
எமது மற்ற நிறுவனமான பாரதிசித்தன்கேணியிலும் கலை, வர்த்தக பிரிவு புதிய பிரிவு ஆரம்பமாகின்றன.
உங்கள் அனுமதிகளை விரும்பிய இடங்களில் பெற்றுக் கொள்ளவும்.

## NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.
**A/L 2019**
**வர்த்தகப்பிரிவு**
கணக்கீடு: K. பாலகஜன்
பொருளியல்: NB. கஜீதரன்
வணிகக்கல்வி: SK. பாலசபேஷ்
புதிய பிரிவு ஆரம்பம்
(01.04.2017 சனி 8.00 மணி)
A/L 2017. Day Class துரித மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன.
A/L 2018 புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
T.P. 077 469 6695

## hp
**2016 க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில்**
# சித்தியடைந்த மாணவர்களே!
உங்கள் வெற்றிக்கு நளினின் வாழ்த்துக்கள்...
**hp யுடன் இணைந்து நளினின் சிறப்புப் பரிசு**




**49,500/=** விசேட சலுகை விலையில்
hp LAPTOP இனைப் பெற்று
உங்கள் கல்வித் தரத்தினை உயர்த்திடுங்கள்

Free: hp mouse
hp backbag
Camera phone



2016 Best Emerging retail partner in Sri Lanka
**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**
Parameswara Junction, Palaly Road, Jaffna. 021 222 1121
* 3 வருட உத்தரவாதத்துடன்...
* இச்சலுகை முதலில் பதிவுசெய்யும் 100 மாணவர்களுக்கு மட்டுமே.
077 766 7975
077 005 1883 (Prathe...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ன பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.03.2017 ...பற்றது.